
தமிழரசு
ஜூலை 1 1971 35 காசு

# அரசு சிமெண்ட்

## வலிவும் வனப்பும் வாய்ந்தது




நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய **அரசு** போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், **அரசு** சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் **அரசு** போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது ?

TIDCO

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)**
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை : தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

AC-14

# இரண்டாவது ஆண்டு துவங்குகிறது!

அன்புள்ள நெஞ்சங்காள்! அகங்கனிந்த கைகூப்பு!

உங்கள் 'தமிழரசு' ஓராண்டைக் கடந்தின்று இரண்டாவதாண்டில் இனிய அடி வைக்கிறது.

பல்வேறு துறைகளிலும் பயன்கூட்ட வெளிவந்த சிற்றேடு பலவினையும் சேர்த் தொன்றாய் இணைத்திங்கே வண்ணக் களஞ்சியமாய் வனப்பூட்டி வாழ்வூட்டும் எண்ணக் களஞ்சியமாய் இணையற்ற நல்லேடாய் உருவாக்கப்பட்டது தான் உங்கள் 'தமிழரசு'.

இந்தியா முழுவதினும் இத்தகையதோர் அரசிதழ் வேறெங்கும் இல்லையென இந்தியப் பேரரசில் இருப்பவரே வியக்கின்றார்! 'தமிழரசு'க்கு இப்பெருமை சேர்வதற்குத் துணை நிற்கும் அனைவர்க்கும் மனங்கலந்த அன்புதோய் நன்றியினை அறிவித்து மகிழ்கின்றோம்.

நன்றி தெரிவித்து நனிமகிழும் வேளையிலே இன்னும் சில செய்தி எடுத்துரைக்க விரும்புகின்றோம்.


'தமிழரசு' இதழுக்குத் தனி அச்சகம் அமைக்கும் இனிதான பெரும்பணி விரைவில் வெற்றிபெறும். ஆதலினால் 'தமிழரசு' காலந்தவறாமல் உரிய நேரத்தில் உங்களைத் தேடிவரும்.

முன்னிலும் புதுமுறையில், கண்கவர் வண்ணமொடு, புதிய எண்ணங்கள் பூத்துப் பொலியும் பூக்காடாகும்.

வணக்கம்.

---

மலர் 2 1-7-1971 இதழ் 1





வரவு செலவு
திட்டத்தின் வாயிலாக
நலவாழ்வு நல்கும்
நமது அரசின்
திட்டங்கள்
அரசு
உழவர் பெருமக்களுக்கு..
குறுகிய காலக்
கடன் வசதி
51·5 கோடி ரூபாய்
முன்பு
நீண்டகாலக்
கடன்
3 கோடி ரூபாய்
இப்பொழுது
நீண்ட காலக்கடன்
21 கோடி ரூபாய்
இந்த ஆண்டில்
குடிநீர் வடிகால்
திட்டங்களுக்கு
18 கோடியே
43 இலட்ச ரூபாய்
செலவிடப்படுகிறது.
காடுகள் என்ற பெயரால்
உள்ள, சாகுபடிக்கேற்ற
50,000 ஏக்கர் நிலங்கள்
நிலமற்ற ஏழை மக்களுக்கு
நிலப்பட்டாவாகத் தரப்படும்


அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி
கல்லூரி திறக்கப்படும்
1971-72-ல் கல்வி வளர்ச்சிப் பணிகளுக்கு 81 கோடியே 84 லட்சம் ரூபாய் செலவிடப்படும்.
235 லட்ச ரூபாய் செலவில் 9 புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படும்
"பாசனத்துக்கு வழி பொறந்தாச்சு"
"எப்படி இருந்த கிராமம்; என்னமா மாறிடிச்சு!"
வரும் ஆண்டில் 51,000 கிராமங்களுக்கு மின் வசதி கிடைக்கும்!
கோபன்...


ஏன்
இந்தக்
காதல்
அ. மறைமலையான்
எழுத்து
தொடர்கதை
ஜூலை
15
இதழில்
துவங்குகிறது

# இனியவை



# இருபது

## 19. பாராளுமன்றங் கண்ட பிரிட்டன்

ஜூலைத் திங்கள் பதினைந்தாம் நாள் பகல் 1-25 மணிக்கு பாரிசிலிருந்து ஹீத்ரோ (Heathrow) விமான நிலையத்தை வந்தடைந்தேன். ஐரோப்பிய விமான நிலையங்களில் இலண்டன் விமான நிலையம் முக்கியமான ஒன்றாகும். சில நேரங்களில் ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கு ஒரு விமானம் வருவதும் போவதுமாக இருக்கிறது. பிரம்மாண்டமான இந்த விமான நிலையமும், இலண்டன் மாநகரமும் இரண்டாவது உலகப் போரின்போது எப்படியெல்லாம் சீரழிக்கப்பட்டன என்று இன்று நினைத்தாலும் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கிறது.

1940-ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நவம்பர் வரை வெடி குண்டுகள் விழாத இரவே இல்லை; மக்கள் வேதனையால் துளைக்கப்படாத நாளும் இல்லை. ஆயகலைகள் பலவற்றிற்கும் ஊற்றெனத் திகழும் அழகுத் திருநகர் அழிவின் கோரப் பிடியில் அல்லலுற்றுக் கொண்டிருந்தது! முதியோரும் இளையோரும் ஆடவரும் பெண்டிருமாக பூமித் தாயின் மடியில் புதைகுழிகளில் தஞ்சம் புகுந்தனர்.

அந்தப் பயங்கர இரவுகளும், மனத்தைப் பதைக்க வைக்கும் பகல்களும் 1944-ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கூடத் தொடர்ந்தன. 50,000 டன் எடையுள்ள வெடிகுண்டுகள் அந்நகரின் மீது வீசப்பட்டிருக்கின்றன.

**முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை**



ஹைட் பார்க்

அங்கு 1944-ஆம் ஆண்டில் மூன்றே மாதத்தில் எறியப் பட்ட குண்டுகளின் எண்ணிக்கை மட்டும் 2,300. அவற்றால் பாழான வீடுகள், கலைக்கூடங் கள், கவின்மிகு திருக்கோயில் கள் 15 இலட்சத்திற்கும் மேல்! பலியான மக்கள் 29,890 பேர். உறுப்புகள் சிதைவுற்றோர் 50,000 பேர்.

இட்லரின் வெறி ஆட்டம் அடங்கியதும் வெளியான இந்தப் புள்ளி விவரங்களைக் கண்டு புவியோர் திடுக்கிட்டனர். சீறும் புயலில் சிக்கிய பூங் கொடியென இலண்டன் அலை வுற்றபொழுதும், சித்தம் கலங் காது தாங்கிக்கொண்ட அம் மாநகரத்து மக்களின் மனத் திண்மையைக் கண்டு திகைத் தனர். இலண்டன் நகரமே அழிந்தாலும் London will take it என்று கூறி இறுதி வெற்றி எமதே என்ற நம்பிக்கையுடன் இருந்திட்ட இரும்பு மனிதன் சர்ச்சிலைத்தான் இந்த உலகம் மறக்குமோ !

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னல் ரோமானியரால் உரு வாக்கப்பட்ட இந்நகரம் போர்க் காலச் சோதனைகளையும் தாங்கிக் கொண்டு இன்றும் ஈடும் இணை யும் அற்று எடுப்புடன் விளங்கு கிறது. எனது மேலை நாட்டுப் பயணத்தின்போது ஐந்தாறு நாட்கள் ஒரே இடத்தில் தங்கி இருந்தது இலண்டன் மாநகரில் தான். அந்நகரின் முக்கிய மான பகுதிகள் சிலவற்றைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பும் அப்பொழுதுதான் எங்களுக்குக் கிட்டியது.

ஹைட் பார்க் (Hyde Park) அழகானதொரு சோலை மட்டு மல்ல; அது ஓர் ''அரசியல் அங்காடி'' என்றுகூடக் கூற லாம். பல்வேறு திறத்தவரின் கருத்துக்கள் இங்கு எந்நேரமும் விற்பனை ஆகிக்கொண்டிருக்கும். யார் வேண்டுமானாலும் எதைப் பற்றி வேண்டுமானாலும் இங்குப் பேசலாம். அதையும் கேட்டிட, இரசித்திட இலண்டன் மாநகர மக்கள் திரள் திரளாகக் கூடு கின்றனர். அமைதிக்கு ஊறு விளைந்தாலன்றிக் காவலர் அத னைத் தடுப்பதில்லை. ஆங்கி லேயர் மிகவும் போற்றுகின்ற அரச பரம்பரையினரை ஆசை தீரத் தாக்கிப் பேசும் உரிமை கூட இந்த இடத்தில் ஒரு குடி மகனுக்கு உண்டு! வியட்நாம் பிரச்சினை முதல் வீட்டு விவ காரம் வரை, உயர்ந்த மதக் கோட்பாடுகள் முதல், திருடுவது குற்றமல்ல ; திருடத் தூண்டிய சமூகம்தான் குற்றவாளி என் பது வரை எப்பொருள் பற்றி யேனும் எவர் வேண்டுமானா லும் பேசலாம்—பேசுகின்றனர். ஒவ்வொரு பேச்சாளரையும் நூறு பேர் சூழ்ந்து நிற்கின்றனர். ஆனல் பேச்சு முடிந்தவுடன்

எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு

என்ற குறளைச் சொல்லாமல் சொல்லிச் செல்கின்றனர்.

இந்தியாவின் உரிமைப் போராட்டக் காலத்தில் இலண்டனிலிருந்த நாட்டுப் பற்று மிக்க இந்தியர்களும், இந்தியாவின் நண்பர்களும், இந்தியாவின் வழக்கை மக்க ளுக்கு எடுத்துச் சொல்லிட இந்தப் பூங்காவைப் பயன் படுத்தினர்களாம். அவ்வாறு அங்கு நமக்காகப் பேசிய தலை சிறந்த பேச்சாளர்களாகவும், அரசியல்வாதிகளாகவும் இருந்த வர்களில் ஒருவர்தான் திரு வி. கே. கிருஷ்ண மேனன்.

பழைமையிலும் பற்றுவிடாது, புதுமையிலும் பற்றுக்கொண்டு வாழும் நாடு பிரிட்டன். அதன் எண்ணக் கலவையை எழுச்சி மிக்க அரசியின் அரண்மனை யிலும், பாராளுமன்றக் கட்ட டங்களிலும் காண முடிந்தது.

மக்களாட்சி முறைக்கு வடிவம் கொடுத்த பெருமை பண்டைக் கிரேக்கருக்கும் ரோமானியருக் கும் உண்டு என்றாலும், பல் வேறு தொகுதிகளிலிருந்து மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் என்னும் அமைப் பினை ஏற்படுத்தி, ''அமைச்ச ரவை'' (Cabinet) என்ற அரசியல் அமைப்பை உலகிற் குத் தந்த சிறப்பு பிரிட்ட னுக்கு உண்டு.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எண்பேராயம் என்றும் ஐம்பெருங் குழு என்றும் ஒருவகையான 'காபினெட்' முறை ஆட்சியைக் கண்ட பெருமை நமது தமிழகத்திற்கும் உண்டல்லவா ?

940 அடி நீளத்திற்குப் பாராளுமன்றத்தின் மகத்தான கட்டடங்கள் அமைந்திருக்கின்றன. விக்டோரியா டவர் எனப்படும் 340 அடி உயரக் கோபுரத்தின் உச்சியில், பாராளுமன்றம் கூடிடும்பொழுது அதனைக் குறித் திடக் கொடி ஒன்று பறக்க விடப்படுகிறது.

இந்த மாளிகையில் மாடிப்படி கள் மட்டும் நூறு இடங்களில் அமைந்திருக்கின்றனவாம். ஆயி ரத்துக்கு மேற்பட்ட அறை கள் இங்கு உண்டு.

பாராளுமன்றத்துக்குப் பின்னால் உலகப் புகழ்பெற்ற 'பிக்பென்' மணிக்கூண்டு திகழ்கிறது. அற்புத ஒலியும் இனிமையும் அழகும் மிக்க அதன் மணி ஓசை பி.பி.சி. யின் மூலம் உலகெங்கும் கேட்கிறது.

பாராளுமன்றத்திற்குப் பக்கத்தில் 'வெஸ்ட்மினிஸ்டர் ஆபி' எனப்படும் கிறித்துவத் திருமடம் அமைந்திருக்கிறது. இங்கிலாந்திற்குப் புகழும் பெருமையும் கூட்டிய அரசர்கள், இலக்கிய ஆசான்கள், கலைஞர்கள், கவிஞர்கள், இசை வேந்தர்கள், இரண்டாம்உலகப்போரின்போது இன்னுயிர்நீத்த வீரர்கள் ஆகியோரின் சடலங்கள் இங்கே புதைக்கப்பட்டிருக்கின்றன. அந்த நாட்டு மக்களின் நன்றியுணர்ச்சிக்கு எடுத்துகாட்டாக அந்தத் திருமடம் திகழ்கிறது. பாராளுமன்றத்திற்கு எதிரே, தேம்ஸ் நதி எழில் கொழிக்க ஓடுகிறது. ஜான் பர்ன்ஸ் என்பவர் தேம்ஸ் நதியினை வரலாற்றின் கரைசல் (Liquid History) என்று குறிப்பிட்டிருக்கிறார். தேம்ஸ் நதியின் வரலாறு இங்கிலாந்தின் வரலாற்றோடு இரண்டறக் கலந்துவிட்டது. இலண்டன் துறைமுகத்துடன் இணைக்கும் வழியாகவும் இந்நதி திகழ்கிறது. சிறு படகுகள் முதல் பெரும் கப்பல்கள் வரை தேம்ஸ் நதியில் மிதக்கின்றன. ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு அன்றாடம் தேவையான தண்ணீரையும் தேம்ஸ் நதி வழங்குகிறது.

இலண்டனின் இதயமாகக் கருதப்படுவது ஆகஸ்போர்டு வீதி. கலை வளர்ச்சியும் கல்வி வளர்ச்சியும் மிக்கதும் நாகரிகமும் நளினமும் ததும்புவதுமான நகரில் நடமாடிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு அந்த வீதியில் நடை பயில்வோருக்கு ஏற்படும். அழகுமிக்க அங்காடிகள் இருபுறமும் அலங்கரிக்கக் காண்கிறோம். புதிய ஆடை அணிகளைத் தோற்றுவிப்பதில் உலகப்புகழ் பெற்ற பாண்ட் வீதியும் மற்றுமொரு சிறப்புமிக்க சாலையுமான ரீஜண்ட் வீதியும் ஆகஸ்போர்டு வீதியுடன் கலக்கின்றன.


இலண்டனில் மற்றொரு சிறந்த அம்சம் பாதாள இரயில்களாகும். 1895-ஆம் ஆண்டிலே பூமிக்கடியில் புகைவண்டிகளை விடுகின்ற புதுமை பிரிட்டனில் தோன்றியது. விரைவாகவும் வசதியுடனும் இனிது ஓடுகின்ற அத்தகைய இரயில் நிலையங்களில் ''பிக்காடில்லி சர்க்கஸ்'' அருகே அமைந்திருக்கும் இரயில் நிலையம் அற்புதமானதாகும். இங்கு 86 அடிக்குக் கீழே ஒன்றும், 106 அடிக்குக் கீழே மற்றொன்றுமாக இரு இரயில் நிலையங்கள் இயங்குகின்றன. இலண்டனின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பது இந்தப் பாதாள இரயில்கள்தாம்!

இயற்கை, மனிதன் வாழ்வதற்கு நிலத்தைத் தந்தது! மனிதன் அது போதாது என்று காற்றிலேறி விண்ணையும் சாடுகிறான்; ககனத்தில் தளங்கள் அமைக்கிறான்; பூமிக்குக் கீழே குடைந்து செல்கிறான்; வாழ்விடங்கள் தேடுகிறான்; வசதிகள் பெருக்கிடுகின்றான். மனிதனின் ஆசைகளுக்கு அளவேது? அவன் ஆற்றல்களுக்குத்தான் எல்லையேது?

இலண்டனில் ''பெட்டிகோட் லேன்'' என்பது ஞாயிறுதோறும் வாரச் சந்தை கூடும் இடமாகும். அங்கு இலண்டனில் உற்பத்தியாகும் மலிவான பீங்கான் பொம்மைகள், துணிவகைகள், வாசனைப் பொருள்கள், தின்பண்டங்கள் போன்ற பலவும் விற்கப்படுகின்றன. இது ஒரு வேடிக்கையான இடம். விசித்திரமான மக்கள் பலரையும் காணலாம். அங்கு வாங்கும் பொருள்களின் தரம் நாம் பேரம் பேசக்கூடிய திறமையைப் (Bargaining power) பொறுத்திருக்கிறது. பத்து ஷில்லிங்கிற்கு, உயர்ந்த பட்டுச் சட்டை கிடைத்தாலும் கிடைக்கலாம், வீடு வந்து பிரித்துப் பார்த்தால் கையில்லாத பழைய சட்டையாக இருந்தாலும் இருக்கலாம்; பொருள்களைச் சோதித்துப் பார்த்து வாங்க அங்கு அனுமதி கிடையாது. ஆனால் என்னுடைய நல்வாய்ப்பு நான் வாங்கிய சட்டைக்குக் கைகள் இருந்தன.

1805-ஆம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டின் தென்கடற்கரையில் உள்ள டிரஃபல்கார் (Trafalgar) என்ற இடத்தில் ஸ்பெயின்-பிரஞ்சு நாட்டுக் கப்பற் படையை ஆங்கில நாட்டுக் கப்பற் படை வெற்றி கண்டது. இந்த வெற்றி இங்கிலாந்து நாட்டிற்குப் பெரும்புகழை ஈட்டித் தந்தது. அதன் நினைவாக இலண்டன் மாநகரில் டிரஃபல்கார் தெரு (Trafalgar Street) டிரஃபல்கார் சதுக்கம் (Trafalgar Square)

அணிவகுப்புகளும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெறும் டிரஃபல்கார் சதுக்கம்.



என்றெல்லாம் பெயரிடப்பட்டுள்ளன. டிரஃபல்கார் சதுக்கத்தில் போரின் வெற்றியைக் குறிக்கும் சுமார் 100 அடி உயரமுள்ள தூண் ஒன்றும் வீரமும் கலையழகும் மிளிரும் சிலைகளும் அமைக்கப் பட்டுள்ளன. இது இலண்டனில் பார்க்கத்தக்க ஓர் இடமாகும். ஹிப்பிகள் இந்த இடத்தையும் ஆக்கிரமிக்கத் தவறவில்லை.

இலண்டன் மாநகரம் ஆங்கில நாடகங்களுக்குப் பெயர் பெற்ற இடம். ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பல இன்றும் நடிக்கப்படுகின்றன. ''கூரையின் மேல் யாழ் வாசிப்பவன்'' (Fiddler on the roof) என்ற நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது. இதனைத் தொடர்ச்சியாகச் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே அரங்கத்தில் நடத்திக்கொண்டு வருவதாகக் கூறினார்கள். அரங்க அமைப்பு, நடிகர்களின் கலைத் திறன், கதையின் போக்கு இவை யாவும் மெச்சத் தக்கவையாய் அமைந்திருந்தன.

ஜூலைத் திங்கள் பதினாறும் நாள் பொதுநல விவகாரத் துறை அமைச்சர் திரு ஜோசப் காட்பர் (Mr. Joseph Godber) என்னை வரவேற்று இந்திய-இங்கிலாந்து நாட்டு அரசியல் பற்றிக் கலந்துரையாடினார்.

மாலை 5-00 மணிக்கு வெளி நாட்டு வளர்ச்சி அமைச்சர் திரு ரிச்சர்ட்உட் (Mr. Richard Wood) அவர்களைச் சந்தித்தேன். ஆங்கிலேய அரசு ஆரம்ப காலத்தில் செயலாளர் (Secretary of States) ஒருவர் மூலம் இந்திய விவகாரங்களைக் கவனித்து வந்தது. அந்தச் செயலாளர் இருந்த அறையில்தான் எங்கள் சந்திப்பு நடந்தது. அங்கு இன்றும் முகலாய மற்றும் இந்திய மன்னர்கள் படங்கள் பலவும் மாட்டி வைக்கப்பட்டுள்ளன. (சுவரை அலங்கரிக்கின்றன).

கடல் கடந்த நாடுகளில் பிரிட்டனுக்கு நல்லுறவை ஏற்படுத்தவும், வளர்க்கவும், பல்வேறு நாடுகளின் சமுதாய, பொருளாதார நிர்மாணத் திட்டங்களில் பங்கேற்கவும், யுனெஸ்கோ (UNESCO) எப். ஏ. ஓ. (F.A.O.) போன்ற உலக உதவிக் கழகங்களுக்கு உறுதுணையாக விளங்கவும் பிரிட்டிஷ் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைச்சகத்தின் தலைவர் இவர்.

திரு ரிச்சர்ட் உட் தனது நாட்டுக்காகத் தன்னலமின்றி எல்லாவற்றையும் பணயம் வைக்க முன்வந்த ஒரு தேச பக்தர். உலகப் பெரும்போரில் ஈடுபட்டுத் தழும்புகளை ஏற்றவர்.

இந்தியாவின் வைசிராயாக இருந்த லார்ட் ஹாலிஃபாக்சின் மகன் என்ற முறையில் ரிச்சர்ட் உட் இந்தியாவுடன் தொடர்பு கொண்டவர் என்பதையும் அறிந்து நான் மிகவும் மகிழ்ந்தேன்.

திரு உட் அவர்களிடம் இங்கிலாந்தின் தொழில் நிறுவனங்கள் பொருளாதாரத் தொழில் நுட்பத் துறையில் இன்னும் தமிழகத்துடன் நெருங்கி ஒத்துழைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி விவாதித்தேன். சுமார் ஒரு மணி நேரத்திற்கு உரையாடல் தொடர்ந்தது.

இங்கிலாந்து நாட்டுடன் தமிழ் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் இருந்து வந்த உறவை அமைச்சர் நினைவூட்டினார்.

இத்தாலி, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், ஹாலந்து நாடுகளைப் பார்த்த பின்னர் இங்கிலாந்திற்கு வந்துள்ளேன். வரலாற்றுப்படி ரோமாபுரிதான் தமிழகத்தோடு முதலில் வர்த்தகம் மூலம் உறவு கொண்டது. மேலை நாடுகளைப் பொறுத்தவரை இங்கிலாந்து இந்தியாவோடும் அதன் அங்கமான தமிழகத்தோடும் கடைசியாகத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட நாடு. எனவேதான் எனது சுற்றுப் பயணத் திட்டத்தில் இங்கிலாந்து வருகை கடைசியாக இணைக்கப்பட்டிருக்கிறது என்றேன்.

ரிச்சர்ட் உட் என்னைப் பலபடப் பாராட்டிப் பேசினார். "சிறப்பு வாய்ந்த சொற்பொழிவாளராக—நுண்ணறிவு மிக்க அரசியல் வாதியாக—40-க்கு மேற்பட்ட நாடகங்களை இயற்றிப் புகழ்பெற்ற நாடகாசிரியராக—தலைசிறந்த முதலமைச்சராக நீங்கள் விளங்குவது கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று கூறினார். "உங்கள் கட்சிக்கு நிதி திரட்டுவதற்காக நாடகங்களில் நீங்களே பங்கேற்று நடித்திருக்கிறீர்களாமே" என்று என்னைப்பற்றி என்னிடமே கூறி என்னை நாணவைத்தார். எங்கள் சந்திப்பை இங்கிலாந்து அரசின் சார்பில் செய்திப் படமாக்கித் தமிழகத்தைக் கௌரவித்தனர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் இங்கிலாந்து பொதுநல வெளி விவகாரத்துறை அமைச்சர் திரு ஜோசப் காட்பருடன்.



இலண்டனில் பி.பி.சி.யினர் என்னைப் பேட்டி கண்டனர். வெளி உலகின் செய்திகளை இங்கிலாந்து நாட்டார் அறியவும் இங்கிலாந்தின் கருத்துக்களை மற்றைய நாட்டார் புரிந்துகொள்ளவும் ஆங்கிலத்திலும் மற்றும் 39 உலக மொழிகளிலும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் பி.பி.சி. யின் புறச் செய்திப் பிரிவின் (B.B.C. External Services) வானொலி நிருபர் நான் பார்த்த நாடுகளைப் பற்றியும் என்னுடைய சுற்றுப் பயணத்தால் உற்ற பயன்களைப் பற்றியும் கேட்டார்.

அந்தப் பேட்டியின் போது கேட்கப்பட்ட கேள்விகளும் எனது பதிலும் வருமாறு :—

கேள்வி.—முதன் முதலாக நீங்கள் மேற்கொண்ட இந்த அயல்நாட்டுச் சுற்றுப்பயணம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்.—பிறநாடுகளின் பண்பாட்டைப் புரிந்து கொள்ளவேண்டும், பிறநாடுகளோடு இந்தியாவுக்குள்ள வணிக-தொழில் தொடர்புகளை வளர்க்க வேண்டும் என்பனவே எனது சுற்றுப் பயணத்தின் நோக்கங்கள். இந்த நாடுகளின் தொழில் முதலிய துறைகளில் பெற்ற அனுபவங்களைத் தமிழ்நாட்டில் இயன்றஅளவில் பயன்படுத்திக் கொள்ள நான் முயல்வேன்.

கேள்வி.—இலண்டனுக்கு வருவதற்கு முன் நீங்கள் எந்தெந்த நாடுகளைப் பார்த்தீர்கள்? அங்கு உங்கள் அனுபவம் என்ன?

பதில்.—ரோமின் மகிமை மிக்க வரலாறு பற்றி நான் படித்திருக்கிறேன். ஏன்? எழுதவும் செய்துள்ளேன். ஆனால் அவற்றை இப்போது நேரடியாகப் பார்க்கும் வாய்ப்பையும் பெற்றேன்.

சுவிட்சர்லாந்தைப் பார்த்தேன். அது இயற்கை எழிலின் தொட்டில். அந்த நாட்டில் உல்லாசப் பயணம் செழித்துக் கொழிக்கிறது. அந்த நாடு உல்லாசப் பயணத்தின் மூலம் பெறும் வருமானம், பெரிய நாடான அமெரிக்கா உல்லாசப் பயணத்தின்மூலம் பெறும் தொகைக்குச் சமமாகும்.

பாரிசில், பிரெஞ்சு அமைச்சர் திரு மைக்கேலைச் சந்தித்தேன்.



கலைஞரைக் கைகுலுக்கி வரவேற்கிறார் இங்கிலாந்து வெளிநாட்டு வளர்ச்சி அமைச்சர் திரு ரிச்சர்ட் உட்.

தொழிலதிபர்களையும் வணிக சபைத் தலைவரையும் கூடச் சந்தித்தேன். தமிழ் நாட்டுக்கும் பிரான்சுக்குமுள்ள, பண்பாட்டு-வரலாற்றுத் தொடர்புகளை இவர்களிடம் விவாதித்தேன்.


எழில் நகரமாம் பாரிசுக்கு வருவதற்கு முன்னர், ரோமில் போப்பாண்டவரையும் கண்டேன்.

நாசங்கள் நர்த்தனமாடிய இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் ஜெர்மனி புதிய உருப் பெற்றிருப்பதையும் கண்டேன். அந்த நாடு தொழில் துறையில் மிகவும் முன்னேறியுள்ளது. ஆமாம்! வேலைக்காகத் தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்படுகிறார்கள்! அபரிமிதமாகத் தொழிலாளர் சக்தி படைத்திருக்கும் தமிழ்நாடும் தொழில்துறையில் இதுபோல் முன்னேறமுடியுமா என்று ஏங்கினேன்.

ஹாலந்தில் பிலிப்ஸ் ரேடியோத் தொழிற்சாலையைப் பார்த்தேன். பத்துத் தொழிலாளர்களோடுஆரம்பிக்கப்பட்டஇந்தத் தொழிற்சாலை, இன்றையதினம் உலகெங்கும் மூன்று லட்சத்து அறுபத்தையாயிரம் பேருக்கு வேலை தரத்தக்க விதத்தில் எவ்விதம் எழுபதாண்டுகளில் வளர்ந்தது என்பதையும் அறிந்து வியந்தேன்.

கேள்வி.—நீங்கள் தற்போது தான், பாரிசில் நடக்கும் மூன்றும் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பி வந்திருக்கிறீர்கள்! அதைப் பற்றி நாங்கள் அறியலாமா?

பதில்.—முதலாம் உலகத் தமிழ் மாநாடு 1966-ல் கோலாலம்பூரில் நடந்தது. இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் சீரிய முயற்சியால் சென்னையில் 1968-ல் நடத்தப்பட்டது. அவர் இன்றையதினம் நம்மிடையே இல்லையே என்று வருத்தப்படுகிறேன். எனினும் அவரது பேராவல் நிறைவேறியது கண்டு மகிழ்கிறேன். இந்த மாநாட்டைத் திறந்து வைக்கிற வேளையில், ''அயல்



பி. பி. சி.யின் புதிய டெலிவிஷன் நிலையம்.

நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழை மறந்து வருகிறார்கள். அவ்வாறு நடக்கக் கூடாது. அவர்கள் தமது பாரம்பரியத்தைக் காத்திட வேண்டும். தமிழ் மொழியை வளர்க்கவும் ஒவ்வொரு நாட்டுக்குமிடையே நெருங்கிய உறவை வளர்க்கவும் மாணவர்கள் பரிமாற்றத் திட்டம் ஒன்று வேண்டும். சங்க இலக்கியங்களில் காணப்படும் சொற்கள் சுமார் மூன்று லட்சமாகும். தற்போது புழக்கத்தில் உள்ள வார்த்தைகளையும் சேர்த்துச் சுமார் ஆறு லட்சம் வார்த்தைகளைக் கொண்டதாய் ஓர் ஆங்கில-தமிழ் அகராதியைத் தயாரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்! தமிழர்கள் பிற நாடுகளுடன் தமது பண்பாட்டு உறவுகளை வளர்த்துக் கொள்ளவேண்டும்,'' என்றும் குறிப்பிட்டேன்.

கேள்வி : தமிழ் நாடு அதன் நல்ல நிர்வாகத்திற்காகப் பாராட்டப் படுகிறதே! அதற்குக் காரணம் என்ன ?

பதில் : இதற்குக் காரணங்கள், நிலையான ஆட்சியும், தமிழ் நாட்டு அரசாங்க அதிகாரிகளின் பாரம்பரிய ரீதியான திறமையுமே ஆகும்.

கேள்வி : தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்குமிடையே எந்த விதமான உறவு நிலவுகிறது ? மத்திய ஆட்சிக்கும் மாநிலங்களுக்குமிடையே சுமுக உறவு நிலவ நீங்கள் தரும்அறிவுரை என்ன?

பதில் : மத்திய ஆட்சிக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையே நிலவும் உறவு மிக சுமுகமாயுள்ளது. தற்போது உறவுக்குக் கரம் கொடுப்பதும் உரிமைக்குக் குரல் கொடுப்பதும், அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதும் மத்திய அரசால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாய் எடுக்கப்படும் பெரும் முடிவுகளில் மாநிலங்களுக்கும் பங்குஇருக்க வேண்டும் என்பதும் எங்கள் கொள்கை.

கேள்வி : இந்தியாவில் மத்திய அரசை ஆளுகின்ற கட்சியில் தகராறு ஏற்பட்டுள்ளது. மனச்சாட்சியின்படி வாக்களிக்கக்கூட அனுமதிக்கப்பட்டது. இந்த நிலையில் இந்திய ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டுக்கும் தங்கள் அறிவுரை என்ன ?

பதில் : மத்திய ஆட்சியிலுள்ள கட்சியில் ஏற்பட்ட பிளவை வரவேற்காதவர்களில் நானும் ஒருவன். எனினும், இது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இந்தக் கட்சியினர் மறுபடியும் ஒன்று கூடுவரா என்பது கேள்விக் குறியே! எதிர்காலத்தில் இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்குமான தீர்வு ''மாநில சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி'' என்ற முழக்கத்திலேயே உள்ளது.

கேள்வி : முந்தைய இங்கிலாந்து அரசாங்க அமைச்சரான திருமதி ஜூடித் ஹார்ட் தமிழ் நாட்டைப் பார்வையிட்ட போது அங்கு-குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டிருந்த பசுமைப் புரட்சியை வானளாவப் புகழ்ந்தார்களே! அது பற்றி நீங்கள் ஏதேனும் சொல்ல முடியுமா ?

பதில் : அவர் தமிழகப் பசுமைப் புரட்சியைப் பாராட்டியதற்கு நான் மகிழ்கிறேன்; நன்றி தெரிவிக்கிறேன். தமிழ்நாடு தற்போது உணவில் தன்னிறைவு பெற்றுள்ளது. கடன், மானியம் இன்ன பிற உருவங்களில் விவசாயிகளுக்கு நாங்கள் எல்லா உதவிகளையும் செய்து வருகிறோம். ஆதார விலைக் கொள்கையைப் பின்பற்றிஉணவுப் பொருள்களின் விலை சரிந்து விடாமல் பார்த்துக் கொள்கிறோம்.

கேள்வி : பதவிக்கு வந்தபின்னர் தொழில் துறையில் தி.மு.க. அரசு சாதித்த சாதனைகள் என்ன ?

பதில் : எங்களது ஆட்சிக்காலத்தில் தொழில் துறையில் தமிழ்

நாடு பெற்ற வளர்ச்சியைக் காட்டுவதற்கான புள்ளி விவரங்கள் இப்பொழுது என்னிடமில்லை. தொழிலபிவிருத்திக்காக நாங்கள் எந்த முயற்சியையும் விட்டு வைக்கவில்லை, என்பதை மட்டும் நான் அழுத்தமாகக் கூற இயலும் என்பதோடு என் பேட்டி முடிவுற்றது. மாஸி-பர்கூசன் (Massey Ferguson) நவீன விவசாய இயந்திரங்களை உற்பத்தி செய்வதில் உலகப் புகழ் பெற்ற நிறுவனமாகும். சென்னையிலிருந்து அப்பொழுது லண்டன் வந்திருந்த சிம்சன் நிறுவனத்தின் தலைவர் திரு. சிவசைலம் அவர்கள் மாஸி-பர்கூசன் நிறுவனத்தின் சார்பாக என்னை அன்புடன் அழைத்தார். அந்த அழைப்பை மறுக்க என்னால் இயலவில்லை. காரணம், அந்நிறுவனத்தினர் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மூலதனமிட்டுத் தமிழ் நாட்டில் டிராக்டர் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கி இருக்கின்றனர்.

ஜூலைத் திங்கள் 17-ஆம் நாள் கவன்ட்ரி என்னுமிடத்திலுள்ள அந்நிறுவனத்தைப் பார்வையிடச் சென்றோம். அவர்கள், நான்கு வகையான டிராக்டர்களை நாளொன்றுக்கு 400 வீதம்உற்பத்தி செய்கின்றனர். வாங்குபவர் சொல்கின்ற முறையில் விருப்பத்திற்கேற்றபடியும் செய்து தருகின்றனர்.

அந்நிறுவனத்தினர் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு என்ன என்ன வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு வியப்புற்றேன். அந்தத் தொழிலாளிகளுக்கு ஊக்க போனஸ் தருவதனால் அவர்கள் உற்பத்தியை அதிகப் படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் ஆர்வமுடன் முனைப்பாக வேலை செய்வதைக் கண்டேன். அவர்களுடைய அன்றாடக் கோரிக்கைகளையும் பிரச்சினைகளையும் பெரும்பாலும் பேசி உடன்பாடு காண்கிறார்கள். நிறுவனத்தின் உற்பத்தியையும் தொழிலாளர்களின் ஊதியத்தையும் பாதிக்கும் வகையில் எந்த நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபடுவதில்லை. அந்த நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வாழ்க்கைத் தரம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது; அவர்கள் எப்படி வறுமையற்று வாழ்கிறார்கள் என்பதற்கு அந்த நிறுவனத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மிகப் பெரிய கார் நிறுத்துமிடமே (Car Park) போதிய சான்றாகும்.

அந்நிறுவனத்தின் இயக்குநர்களான பீத்(Mr. J.W. Beith)ரைட் (Mr. P. T. Wright) ஆகியோர் இந்தியா விவசாயத் துறையில் வேகமாக முன்னேறும் என்ற தங்களுடைய நம்பிக்கையைத் தெரிவித்து அந்த நம்பிக்கையின் நினைவாக அந்த நிறுவனத்தில் உற்பத்திசெய்த ஒரு டிராக்டரை எனக்குப் பரிசாக வழங்கினார்கள். அந்தப் பரிசுப்பொருளைக் கோவை விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி வைப்பேன் என்று அவர்களிடம் தெரிவித்தேன்.

பின்னர், 'ஸ்டோன்லி ஆபே' (Stoneleigh Abbey) என்ற இடத்திலுள்ள பயிற்சிப் பள்ளியைப் பார்வையிட்டேன். அங்கு டிராக்டர் உற்பத்தி, பயன்படுத்துதல், பழுது பார்த்தல் போன்ற பல்வேறுபட்ட பயிற்சிகளையும் பல மொழிகளிலும் அளித்து வருகிறார்கள். அங்கு, இந்திய மாணவர்களைக் கண்ட எனக்குப் பெருமகிழ்ச்சி. அந்த மிகப் பெரிய நிறுவனத்தின் தொழிற் கூடத்தையும் பயிற்சிப் பள்ளியையும் பார்வையிட்டுவிட்டு அன்று மாலை இலண்டன் திரும்பினேன்.

ஜூலைத் திங்கள் 20-ஆம் நாள் மாலை 10 மணிக்கு இலண்டன் 'ஹித்ரோ' விமான நிலையத்தை வந்தடைந்தேன். விமானத்தில் ஏறிய பிறகு, விமானம் சுமார் அரை மணி நேரத்திற்குக் கிளம்பவில்லை. காரணம், ஏற்கனவே இரண்டு மூன்று விமானங்கள் கிளம்புவதற்காக அங்கு வரிசையில் காத்துக் கொண்டிருந்தன. அவைகள் கிளம்பிய பின்னரே எங்கள் விமானம் கிளம்பிற்று. செக்கஸ்லோவாகியா நாட்டின் தலைநகரான பிரேக் நகரை விமானம் வந்தடைந்தது. அங்கு இந்தியத் தூதர் எங்களை வரவேற்று விமான நிலையத்திலேயே சற்று ஓய்வெடுக்கச் செய்தார். மீண்டும் எங்கள் பயணம் தொடர்ந்தது. மாலை சுமார் 7 மணிக்கு ரோம் வழியாக எகிப்து நகர் வந்தடைந்தோம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்துடன்தொடர்பு கொண்டதும் பண்டைய நாகரீகத்தின் இருப்பிடமுமான எகிப்து நாட்டின் தலைநகராகிய கெய்ரோவின் மண்ணை மிதித்ததும் என்னையும் அறியாமல் ஏதோ ஒரு உணர்வு என்னிடம் தோன்றிற்று. விமானம் கிளம்ப சுமார் ஒருமணி நேரம் ஆகும் என்றார்கள். விமான நிலையத்திலேயே அந்த ஒரு மணி நேரத்தையும் போக்கிவிட்டோம். சுமார் 8 மணிக்கு விமானம் கெய்ரோவிலிருந்து பம்பாய் நோக்கிக் கிளம்பிற்று.

கட்சிப் பணிகள், அரசு அலுவல்கள் என்று பல வேலைகளைப் பார்த்து வந்த எனக்கு, விருந்தினராக என்னை அழைத்து, குறிப்பிட்ட ஒரு சில நிகழ்ச்சிகளிலேயே கலந்து கொள்ள வேண்டுமென்று அன்புக்கட்டளையிட்டது ஓரளவிற்குச் சங்கடமாகவே இருந்தது. மீண்டும், தாயகத்திற்கு எவ்வளவு விரைவில் திரும்புவோம் என்ற ஆவல் மீரிட, எனது பயணம் தொடர்ந்தது.

ஜூலைத் திங்கள் 21-ஆம் நாள் காலை சுமார் 7 மணிக்கு பம்பாயிலுள்ள சாந்தா குருஸ் விமான நிலையத்திற்கு விமானம் வந்து சேர்ந்தது.

(தொடரும்)

ஹோட்டல்

# ஸ்ரீ லேகா

அண்ணா சாலையில்
(தேவிபாரடைஸ் திரையரங்கம் அருகில்)

அமைந்துள்ள இவ்வுணவுவிடுதியில் எல்லாவசதிகளும் உண்டு.

தொலைபேசி எண்
**88078**

மாநகரின் நடுவில் மாபெரும் ஹோட்டல்!




- ஏர் கண்டிஷன் உணவுக் கூடம்
- ஏர் கண்டிஷன் அறைகள்!

குறைந்த வாடகை அறைகளும் உண்டு

நவீன வசதிகளுடன்

நாகரிகத் தோற்றமுடன்
நகரில் நடுநாயகமாக
அமைந்த விடுதி இது!



**14.7.1971** அன்று

# முதல்வர் கலைஞர்

திறந்து வைக்கிறார்கள்!

சட்டமன்ற மேலவைத் தலைவர்

**திரு. சி.பி. சிற்றரசு அவர்கள்**

தலைமை தாங்குவார்.

எம்.பி. நாராயணன்.
உரிமையாளர்




‘செய்’ என்பது நிலம். செய்யில் இட்ட வித்து முளைக்க நீர் இன்றியமையாதது; செழித்து வளரக் காற்றும், சூரிய ஒளியும் தேவை. நல்ல வித்தாயினும் பாறைமேல் இட்டால் பயிர் முளைக்குமா? சிறந்த நிலமாயினும் சொத்தை வித்தினை வித்தினால் பலனேது? பண்பட்ட நிலத்தில் பொறுக்கு விதைகளையிட்டாலும் நீரில்லாவிட்டால் அவை முளைக்கமாட்டா. முளைத்த பயிருக்குச் சூரிய ஒளி இல்லையேல் அது வெளுத்து நாளடைவில் அழிந்துவிடும். அனைத்தும் பொருந்திய நிலையில் முளைக்கும் பயிரோ செழித்து வளர்ந்து சிறந்த பயனை நல்கும்.

வள்ளுவரின் பண்பட்ட உள்ளமாகிய நிலத்தில் பதிந்த கருத்து வித்துக்கள், அவருடைய பட்டறிவாகிய நீர் பட்டமையால், குறட்பயிர்களாக முளைத்தன. அவருடைய புலமை ஒளிபெற்று, அக்குறட்பயிர்கள் உரத்துடன் வளர்ந்து, உலகுக்கு நலம் விளைத்தன. வள்ளுவரின் உள்ளச் செய்யில் தோன்றி வளர்ந்த குறள், உலகச் செய் கொண்டு விளக்கும் கருத்துக்களை இனிக் காணலாம்.

ஒரு பாத்தியில் பயிர்கள் வளர்ந்து வருகின்றன. நீர் பாய்ந்து, களையெடுத்துக் காத்திவிட்டமையால் நிலம் புழுதி படிந்த பயில் இருக்கிறது. அடுத்து நீர் பாய்ச்சப்படுவதை எதிர்பார்த்துள்ள நேரம். அந்நிலையில் நீர் பாய்ந்தால் பயிரின் வளர்ச்சி மகிழ்வூட்டக் கூடியதாய் இருக்கும். தேவைக்கு மேல் நீர் பாய்ந்து சதுப்புற்ற நிலத்தில் மேலும் நீரைப் பாய்ச்சினால் பயிர் அழுகிக்கெடும்; அளவுக்கு மிஞ்சி நிலம் வறண்டு போனாலும் பயிர் கருகிவிடும்.

எதிர்நோக்கி நிற்கும் தருணத்தில் பாய்ச்சப்படும் நீர்தான் வளர்ச்சிக்கு உதவும். அவை அறிந்து பேச வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்த வள்ளுவர் வளரும் பயிருக்கு நீர்பாய்ச்சும் நிலையைச் சுட்டிக் காட்டுகிறார்.

பேசுவோர், அவையின் தன்மையை அறிந்து ஏற்ற சொற்களை ஆராய்ந்து சொல்ல வேண்டும். அவையறியாது பேசுவோரின் பேச்சு, பேசியும் பேசப்படாததேயாகும். அறிவிற் சிறந்தவர்முன் பேசுவோர், தாமும் அறிவிற் சிறந்தோராய்ப் பேச வேண்டும். அறிவில் இளையார்முன் பேசும்போதோ, தாமும் அந்நிலை நின்றே பேசவேண்டும். அவர்கட்குப் புரியாத உயர்ந்த கருத்துக்களை அங்குப் பேசுவதால் பயன் ஏதுமில்லை. தாமே உணர்ந்து கொள்ளும் தன்மையுடையவர்முன் கற்றவர் பேசுதல், வளரும் பயிர் உள்ள பாத்தியில் உரிய வேளையில் நீரைச் சொரிந்தது போலாகும். நீரை எதிர்பார்த்திருந்த பயிருக்கு நீர் கிடைக்கிறது; சேர்ந்த நீரும் பயிர் வளரப் பயன்படுகிறது.

‘உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று.”

மக்களில் தீயவர்கள், கயவர்கள் இருப்பார்கள். கழுத்திலிருக்கும் நகைக்காகக் குழந்தையைக் கொல்லும் கயமைத்தனம் நிறைந்தோரும் மனித வடிவில் உலவுவதுண்டு. அத்தகையோரிடம் இரக்கம் காட்டித் தண்டிக்காது விட்டுவிட்டால் சமுதாயம் பாழ்பட்டுவிடும். வயலில் பசுமையான பயிரினூடே முளைக்கும் களையும், பயிரைப் போலவே பசுமையாகவும் செழிப்பாகவும் தோற்றமளிக்கும். பசுமைத் தோற்றத்தால் பயிரைப் போன்று இருக்கும் தன்மை கொண்டு—களையைக் களையாது விட்டுவிட்டால், அது வளரத் தொடங்கி, நாளடைவில் பயிரையே நசுக்கிவிடும். பயிருக்கிடையே காணப்படும் களையை அகற்றுவது போலச் சமுதாயத்தில் தோன்றும் கொடியவர்களைக் களைய வேண்டியது நல்லாட்சியின் அவசியச் செயலாகும்.

“கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.”

இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்.



கொடியவர் சிலரைக் கொலைத் தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்றக் களையைக் களைவதற்கு நிகரான செயலாகும் என்பது இதன் பொருள். இக் கருத்தினை—இக்குறட்பொருளை எளிய நடையில், படிப்போர் உள்ளத்தில் பதியும் வண்ணம் கவிஞர் வல்லம் வேங்கடபதி அவர்கள் அழகுற எடுத்துக் கூறுகிறார்கள் :

"கயவரும்மேன் மக்கள்போல் தோன்று வார்கள்
கண்மறையில் பொய்மையினைப் போற்று வார்கள்!
நயத்தக்க நாகரிகம் அவரால் வாழ்வில்
நசித்துவிடும்; பண்புகெடும்; நன்மை வாடும்
வயலிலுமிக் கதைநடக்கக் காண லாகும்
வளமாகப் பயிரோடு பயிராய்ப் போலிப்
பயிரான களைமுளைக்கும்; பச்சை கட்டும்
பயிருக்கே பகையாகிப் பலனைத் தின்னும்!

நல்லோர்கள் மத்தியிலே புல்லர் தம்மை
நடமாட விட்டுவிட்டால் நாடென் னாகும்?
பொல்லாங்கே சூழுமத னாலே அந்தப்
பொல்லாரைச் சிறைப்படுத்தி வைத்தல் போலே
பல்கியெங்கும் பயிரோடு பிணைந்து நிற்கும்
பாழ்களையை வேரோடு பறிக்க என்றே
நல்லுழவர் செயத்தக்க செயலைச் சுட்டி
நயம்படவே நவில்கின்றார் அறத்தின் செம்மல்!"

வள்ளுவர் மக்களிடையே குலம் பிரிக்கிறார்; உயர்ந்த குலம் என்றும் தாழ்ந்த குலம் என்றும் பேதப்படுத்துகிறார். உலக ஒருமைப்பாடு பற்றிப் பேசிய அவ்வொப்பில் புலவன் குலப்பாகுபாடு பற்றிக் கூறியிருப்பானா என்ற ஐயம் உடனே அனைவர்க்கும் தோன்றும். ''சாதிகள் இல்லையடி பாப்பா; குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் தீது'' என்றார் பாரதியார். வள்ளுவர் பிரிக்கும் குலம் இச்சாதி சமயத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல! 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று முழங்கிய முதற் புரட்சியாளர் அவர். ''சாதியிரண்டொழிய வேறில்லை........ இட்டார் பெரியோர்; இடாதோர் இழி குலத்தோர்'' என்றாள் அறநெறி கூறிய ஒளவைப் பாட்டி. கொடையாளர் உயர் சாதியினர்; இட முடிந்தும் இட இடந்தரா உள்ளமுடையோர் இழி சாதியினர்—இஃது ஒளவையின் கருத்து. குலத்தைப் பிரிக்க ஒளவை கொண்ட அளவுகோல் கொடைத்தன்மை; இதற்கு வள்ளுவர் கொள்ளும் அளவுகோலோ நமக்கு வியப்பூட்டுவதாக உள்ளது! அவர் நாவலர் அல்லவா? எனவே ஒருவனுடைய நாக்கைக் கொண்டு இனம் பிரிக்கிறார். எவ்வாறு? எந்த நாக்கு உயர்ந்த, சீரிய, அறிவு நலம் சான்ற சொற்களை வெளிப்படுத்துகின்றதோ அந்நாக்குக்குரியவன் உயர் குலத்தவன். கீழ்த்தரமான, முறையற்ற, கேடான, கயமைத்தனம் நிறைந்த சொற்களை எவனுடைய நா பேசுகிறதோ அவன் கீழ்க் குலத்தவன். இது வள்ளுவர் கருத்து.

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.



ரசிகர்களின் கனவுக் கன்னி


முளைத்து வரும் வித்து, நிலத்தின் தன்மையை—அது சத்துள்ள நிலமா, சத்தற்ற நிலமா என்ற கூறுபாட்டைக் காட்டும். அதே போல், ஒருவனுடைய வாயிலிருந்து பிறக்கும் சொல் அவனுடைய குடியைக் காட்டும். இதன் பொருள் என்ன? செம்மையான சொற்களைக் கூறுவோர் உயர்ந்த குடியினர். நலம் பயக்காத மொழி பேசுவோர் தாழ்ந்த குடியினர் என்பதேயாம்.

சொற்களைக் கூறவேண்டிய முறையைப் பற்றித் தெய்வப் புலவர் வலியுறுத்திக் கூறியுள்ள கருத்து ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று. நம் வாயிலிருந்து பிறக்கும் சொல் தரும் பொருள் என்ன, அவ்வாறு பேசுவது முறைதானா, நம்முடைய பண்பாட்டுக்கு அது ஏற்றதா, என்பன போன்றவற்றைச் சிந்தியாமலேயே பல வேளைகளில் நாம் பேசிவிடுகிறோம். எடுத்துக் காட்டுக்கு ஒன்று குறிப்பிடுவேன். ஒரு முறை பாலக்காட்டுக்கு ஒரு திருமணத்திற்கு நண்பர்கள் ஒன்றுகூடி ஒரு பேருந்தை (Bus) எடுத்துச் சென்றிருந்தோம். திருமணம் முடிந்ததும், ஊருக்குத் திரும்புவதன் முன், அருகிலிருந்த மலம்புழா அணைக்கட்டைப் பார்த்துத் திரும்பலாம் என்ற எண்ணத்துடன் அங்குச் சென்றோம். பிற்பகல் ஐந்து மணிக்குள்ளாகச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பினோம். அப்போது எதிரே ஒரு பேருந்து சென்றது. அதில் பெண்கள் நிறைந்திருந்தனர். ஒரு கல்லூரியைச் சார்ந்தவர்கள் சுற்றுலா வந்திருந்தனர். நாங்கள் வெளியேறும் வேளையில் அவ்வண்டி உள்ளே சென்றது. எனக்கு அருகில் அமர்ந்திருந்தவர்—படிப்பில் இரண்டு பட்டங்கள் பெற்றவர்—எதிரே இருந்த வண்டியைப் பார்த்துக் கொண்டே சொன்னார்; ''அடடே! கொஞ்சம் முந்தி வந்துவிட்

டோம். சிறிது நேரம் கழித்து இங்கு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே'' என்றார். அப்பேச்சின் பொருள் என்ன? அப்பெண்கள் இங்கிருக்கும் நேரத்தில் நாமும் இங்கிருக்குமாறு வந்திருக்கக் கூடாதா என்பதேயாம். அவர் தவறான உள்ளம் கொண்டவர் அல்ல; நேர்மையாளர்; நல்லொழுக்கமுடையவர். ஆயினும், ''வேடிக்கையாகப்'' பேசுவதாக எண்ணிக்கொண்டு. கூறுகின்ற சொற்களின் பொருள் எவ்வளவு கேவலமானது என்ற சிந்தனையேயின்றிப் பேசுகிறார்; திரைப்பட விளம்பரங்களிலும், பத்திரிகைகளிலும், ''ரசிகர்களின் கனவுலகக் கன்னி..............நடிப்பது'' என்ற எழுத்துக்களைக் காணுகிறோம். சிந்தித்துப் பார்த்தால் இதன் பொருள் எவ்வளவு கேவலமானது? உறங்குபவன் தனக்கு உரியவள் அல்லாத ஒருத்தியைக் கனவிலே கண்டு துயில்கிறான் என்றால் அது எவ்வகைப் பண்பாகும்? பொருள் பற்றிச் சிந்தியாமலேயே எழுதிவிடுகிறோம், பேசி விடுகிறோம். இது தவிர்க்கப்படவேண்டும். உயர்ந்த நிலையிலே இருப்பவர்கள் ஆயினும், செல்வர்கள் ஆயினும், செல்வாக்கு மிகுந்தவராயினும், தகுதியற்ற சொற்களைப் பேசும் நாவைக் கொண்டிருப்பின் அவர்கள் தாழ்ந்தவரே யாவர்! இழிவான சொற்களைக் கூறுவோர், இரண்டு பட்டங்கள் பெற்றவரேயாயினும், அவர்கள் இழிந்த குலத்தவரே என்பது வள்ளுவர் கருத்து. பண்புநலம் களையப் பேசும் பழக்கத்தை வள்ளுவரின் இக்குறள் வலியுறுத்துகிறது. நாட்டு மக்கள் பின்பற்றி ஒழுகவேண்டிய மிகச் சிறந்த கருத்து இது.

''மக்கள் பொறையுடையவர்களாக இருக்க வேண்டும். பிறர் செய்யும் தீங்கையும் பொறுக்க வேண்டும். அத்தீங்கை நினைவில் கொள்ளாது மறந்து விடுதல் பொறுத்தலைவிட நல்லதாகும்'' என்பதனைத் திருவள்ளுவர் நிலத்தைக் கொண்டு விளக்குகிறார். நிலத்தை அகழ்கின்றார்கள்; தனக்கு ஊறு செய்கிறார்களே என்று அந்நிலம் வெகுண்டு அவர்களை அழிப்பதில்லை. மாறாக அகழ்வோர் நின்று கொள்ள இடத்தை

'' அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல''



நல்குகிறது. அது மட்டுமா? இன்னா செய்தார்க்கும் இனியவே செய்கிறது. தோண்டத் தோண்டத், தோண்டுபவர்கட்குப் பல பயனுள்ள பொருள்களை நல்குகிறது. நீரைத் தருகிறது; நிலக்கரியைத் தருகிறது; தங்கத்தைத் தருகிறது; எண்ணெய்யைத் தருகிறது; மேலும் ஏற்றமிகு பொருள்கள் எவ்வளவோ தருகிறது. அகழ்வாரைத் தாங்குவதோடு அவர்கட்கு நன்மையையும் நல்கும் நிலத்தின் இநதப் பண்பு வள்ளுவரால் பெரிதும்பாராட்டப்படுகின்றது.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

நிலத்தின் மீது நின்றுகொண்டு அதே நிலத்தை வெட்டுவது போன்றே, நம்மால் புரக்கப்படுபவர்களே நம்மை இகழ்ந்து பேசவும் நேரலாம். அதை நாம் பொறுமையுடன் தாங்க வேண்டும். ஒருவன் அகழ்வதினாலேயே நிலத்துக்கு அழிவு ஏற்பட்டு விடுவதில்லை. அகழ்ந்த அந்த இடம், வாளியாக, கூவலாக மாறிச் செம்மை பெறுகிறது. பிறர் இகழ்வதைப் பொறுமையுடன் ஏற்றால் அது நமக்குப் பெருமையாகவே முடியும்.

விசும்பில் உள்ள நீருக்கு நிறம், மணம், சுவை கிடையாது. அது கீழே வீழ்ந்து நிலத்தில் படியும்போது, சேர்ந்துள்ள நிலத்தின் தன்மைக்கேற்ப நிறம், சுவை முதலியன மாறுபடுகின்றன. அதுபோன்றே ஒருவரின் தனித்த இயல்பான அறிவு, சேரும் இனத்திற்கேற்ப மாறுபடும் என்பதால், சிற்றினம் சேரக்கூடாது என வள்ளுவர் வற்புறுத்துகிறார். நல்லினம் சேர்ந்தால் நன்மை கிட்டும்; பூவோடு சேரும்போது நாரும் மணம் பெறுதல் போல! சிற்றினம் சேர்ந்தாலோ அனைத்தும் அழியும்; சாக்கடையிற் சேரும் பன்னீரும் சாக்கடையாவது போல; ஆகவே ஆராய்ந்து இனம் சேர வேண்டும் என்பது அறிவிக்கப்படுகிறது.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு."

களர் நிலம் விளைவுக்கு ஒவ்வாதது; வித்திய வித்தை முளைக்கவொட்டாமற் செய்வது. நிலம் என்ற பெயரில் ஒரு பரப்பைக் கொண்டிருப்பது தவிர அதனால் பயனேதுமில்லை. கல்லாதாரை வள்ளுவர் களர் நிலத்தோடு ஒப்பிடுகிறார். அவர்கள் பிறப்பு எவ்விதத்திலும் பயனற்றது. இருந்தும் அவர்கள் இல்லாதவர்களே! களர் நிலத்தைப்போல அவர்கள் வடிவோடு உலவுவது தவிர அவர்களால் சமூகத்திற்குப் பயனில்லை;

"உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்."

நாட்டில் கல்லாமையாகிய களரை இல்லாமையாக்கி, அதை நலம் கொழிக்கும்

நன்செய்யாய் மாற்றும் பணியில் அரசன் அயராது உழைக்க வேண்டுமென வள்ளுவர் அவாவுகிருர்.

வலிமையும் பெருமையும் உடையவராயினும் தமக்கு வாய்ப்பில்லாத இடத்தில் இருந்தால் மிக எளியவராலும் வெல்லப் பட்டு விடுவர். ஆண்மை செறிந்த யானை யாயினும் கால் புதையக்கூடிய களர் நிலத்தில் சிக்கிக் கொண்டால், கேவலம், நரி கூட அதைத் துன்புறுத்தி மகிழும்.


"காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு."

எவ்வளவு வலிமை பொருந்தியவராயினும் ஏற்ற காலமும் இடமும் அமையாவிடில் எடுத்த செயலைச் சிறப்புற முடிக்க முடியாதவராகிவிடுவர்.

சறுக்கு நிலங்களில் கவனமுடன் நடக்க வேண்டும் ; இன்றேல் வழுக்கி விழ நேரிடும். அங்கு, ஒரு கோலை ஊன்றி நடப்பது பாதுகாப்பாகும். வழுக்கல் நிலத்தில் கோல் ஊன்றி நடப்பதைப் பார்த்த வள்ளுவர் அதுகொண்டு ஓர் அரிய கருத்தை உரைக்கிருர். வாழ்க்கை ஒரு நீண்ட பயணம். அதில் நம்மை இடர வைக்கும் இடங்களும் இருக்கலாம். அவற்றைக் கடக்கும்போது உயர்ந்தோர்களின் மொழியினை ஊன்று கோலாகக் கொண்டால் இடரேதும் நேராது.

"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்."

விளைநிலத்தைக் கவனித்துப் பார்த்துப் பருவத்தில் செய்ய வேண்டியன செய்ய வேண்டும். உழுதல், எருப்பெய்தல், களை கட்டல், நீர்பாய்ச்சல், காத்தல் என்றவை களை முறைப்படி ஆற்ற வேண்டும். அவ்வாறு அடுத்தன செய்யாது சோம்பியிருப்பாஞயின் நிலம், பயனைத் தராது. நிறை காத்து ஒழுகும் புகழ்புரிந்த இல்லாளைப் பெற்ற ஒருவன் அவளை நாடோறும் பேணி, நகைமுகம் காட்டி, நலம் புனைந்துரைத்து, உளம் மகிழச் செய்வானேல் அவளும், "கூடிமுயங்கிக்" குறைவற்ற இன்பம் தருவாள். அவளைப் பிரிந்து காணுதிருப்பினே ஊடிக் கொள்வாள். இஃது இல்லத்தில் நிகழ்வது. அது போன்று, நிலமங்கையை மணந்துள்ள உழவ மகனும் நாடொறும் அவளைக் கண்டு—உர உணவு வேண்டுமா, நீராடையை நிறை



காலாழ் களரில்.........(குறள்)

வுறப் பெற்றிருக்கிருளா ; இல்லக் காப்பாகிய வேலி ஊறின்றி உள்ளதா என்பன போன்ற அவள் தேவையறிந்து உதவ வேண்டும். இன்றேல் அவளும் 'தன்னுடைய அலங்காரமாகிய பயிர்க்கோலம்' அழிந்து ஊடிவிடுவாள். அதன் விளைவு, விளைவு கிடைக்காது. மனையாளின் நலம் கவனியாதவன் போகமிழக்கிருன் ; அதுபோன்றே நிலத்தைக் கவனியாதவனும் 'போக' மிழக்கிருன்.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்."

நம்மிடம் ஏதுமில்லை என்று ஏங்கியிருப்பாரைக் கண்டு நிலமங்கை சிரிக்கிருள். இறகால் உடலை நீவிடில் நம் உடலெங்கும் மயிர் சிலிர்க்கும். அதேபோல் கொழுமுனை பட்டால் போதும், நிலமங்கை கூசி, உடல் குழைந்து, பயிராகிய மயிர் சிலிர்ப்பாள். இதையறிந்து உழைத்து, உயர்வு தேடாது சோம்பித் திரிபவர்களைப் பார்த்து இரக்கப் படும் நிலமங்கை சிரிக்காது என் செய்வாள் !

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்."

இக்குறளுக்கு ஓர் அரிய விளக்கம் போல அமைந்துள்ளது தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஒரு கவியரங்கப்பாடல் :

எதுவும் இல்லையென ஏங்கியிருப்பாரைக் கண்டு,
எது இல்லை என் மகனே!
வெடித்திருக்கும் என் வயிற்றில் மண்வளம் பார்;
வெகுதூரம் அகழ்ந்திட்டால் வைரமணி வழங்கிடு
வேன்;
வெகுளியாய் வாழாமல் வேளாண்குடி பெருக்கிடுக,
எனச் சிரித்து நிலமடந்தை நிற்கின்ருள்!
உழவர் திருமகனே! உணர்ந்திடுக புவிச் சிரிப்பு;
உழைத்துப் பெற்றிடுக உடனடியாய்ப் புதுச் செழிப்பு!




சென்னைத் துறைமுகத்தை நோக்கி வரும் கப்பல்களின் தலைவர்கள் தங்கள் 'தொலை நோக்குக்' கண்ணாடி வழியாகப் பார்க்கும்போது அவர்களுக்குத் தென்படும் முதல் காட்சி சென்னைக் கடற்கரையில் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் விசைப் படகுகளே! கப்பல்கள் கரையை அடைந்ததும், கப்பல்களின் தலைவர்கள், அந்த விந்தைமிகு விசைப் படகுகளைக் காண ஓடோடி வருவார்கள். கண்ணையும், கருத்தையும் ஈர்க்கும் அத்தகைய கவின்மிகு காட்சியைத் தருவது தமிழகத்தின் மீன்துறையைச் சார்ந்த இராயபுரம் மீன் பிடி படகு கட்டும் நிலையத்திலும் சென்னை, சிங்கார வேலர் மீன் பிடி படகு கட்டும் நிலையத்திலும் கட்டி முடிக்கப்பட்ட விசைப் படகுகள்தான்!

இந்த விசைப் படகுகள் தமிழக அரசுக்குப் பெருமை சேர்க்கும் பெட்டகங்கள்! வளரும் தமிழகத்தின் புகழ்வானில் ஒளிசிந்தும் நட்சத்திரங்கள்! இந்த விசைப் படகுகளுக்கு ஒரு வீர வரலாறு உண்டு. ஆம்! இந்த விசைப் படகுகள் இந்தியாவிலேயேமுதன் முதலாகத் தமிழகத்தில்தான் கட்டப்பட்டன. 1953-ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட இப்பணி பாங்குடன் வளர்ந்து பாரெங்கும் புகழ் பரப்பி வருகின்றது. மேல் நாடுகளில் இத்தகைய படகுகளை ஏராளமாகக் கட்டுவது பொதுவாக, இல்லை என்றே கூறலாம். அவரவர் தேவைக்கான படகை அவரவர் செய்து கொள்வர். ஆகவே ஒட்டு மொத்தமாக வரிசை வரிசையாக இவ் விசைப் படகுகளை மேலை நாட்டில் காண்பதரிது. ஆனால் தமிழகத்தில்......

தமிழகத்தில் சாதனைகள் பல உண்டு. தமிழகம் பல துறைகளில் இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களைக் காட்டிலும் சிறந்த சாதனைகளைப் புரிந்துள்ளது. சில துறைகளில் இந்தியாவிற்கே வழி காட்டியாக உள்ளது. தமிழகத்து மீன் துறையினரால் கட்டப்படும் 'விசைப் படகுகளும்' இந்தியாவிற்கே வழிகாட்டியாக உள்ளன. தமிழகத்தில் படகு கட்டும் நிலையங்கள் நாகைப்பட்டினம், மண்டபம், சென்னையில் இராயபுரம், மெரினா கடற்கரை ஆகிய நான்கு இடங்களில் செயல்படுகின்றன. இங்கு கட்டிமு[illegible]கப்படும் விசைப் படகுகள் [illegible]ளுக்கு வழங்கப் படுகின்றன. இப் படகுகளின் தயாரிப்புச் செலவில் 25 சத வீதம் உதவித் தொகையாகவும், மீதி கடனாகவும், வழங்கப்படுகிறது. பொதுவாக 30 அடி, 32 அடி, 36 அடி நீளமுள்ள விசைப் படகுகளைத் தயாரிக்க முறையே 54,500, 82,250, 1,12,000 ரூபாய்கள் செலவாகின்றன. மூலப் பொருள்களின் விலை உயர்வினால் தயாரிப்புச் செலவு அதிகமாகிக் கொண்டே போகிறது.

ஆகவே தமிழக அரசின் உதவித் திட்டத்தின் கீழ் இந்த விசைப் படகைப் பெறும் மீனவர்களுக்குக் கடன் சுமையும் அதிகரித்துக் கொண்டே போகிறது. மேலும் தயாரிப்புச் செலவு அதிகரித்துக் கொண்டே போவதால் படகுகளைத்தேவையான அளவு தயாரிக்க முடிவதில்லை. அதே நேரத்தில் படகுகளை எதிர்பார்க்கும் மீனவர்களோ ஏராளமாக உள்ளனர். இந்நிலையை மாற்றி அமைக்கப் பெரும்பான்மையான மீனவப் பெருங்குடி மக்களுக்கு வழங்க, ஏராளமான விசைப் படகுகளைத் தயாரிக்க அதே நேரத்தில் குறைந்த விலையில் நவீன முறையில் தயாரிக்கத் தமிழக அரசு முயற்சியினை மேற்கொண்டது.

### மீனவ மக்களுக்கு ஆவன செய்ய.

1970-ஆம் ஆண்டு மே திங்கள் 27ஆம் நாள் மீன்துறை இயக்குநர் மீனவர்களுக்கு ஆவன செய்யப் பல தொழில் வல்லுநர்களுடன் இது பற்றிக் கலந்துரையாடினர். தற்போது நடைமுறையிலுள்ள விசைப் படகுகள் யாவும் மரத்தினால் செய்யப்பட்டுச் செப்புத் தகடுகளாலும், அலுமினியத் தகடுகளாலும் கவசமிடப்பட்டவை. செப்புத் தகடுகளினால் கவசமிடுவதால் ஏராளமான அந்நியச் செலாவணி தேவைப்படுவதுடன்

செப்புத் தகடுகளை இறக்குமதி செய்வதில் உள்ள சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டியுள்ளது. எனவே இரும்பினுலும், 'பைப்பர் க்ளாஸ்' 'பிளாஸ்டிக்' ஆகிய பொருள்களினுலும் படகுகளைக் கட்டுவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. இவற்றிற்கான மூலப் பொருள்களைப் பெறுவதில் உள்ள சிரமத்தினுலும், இப் பொருள்களினுல் படகு கட்டுவதால் தேவைப்படும் அந்நியச் செலாவணியைக் கருத்தில் கொண்டும் இம்முயற்சி கைவிடப்பட்டது. ஆயினும் குறைந்த விலையில் படகுகளைக் கட்டுகின்ற முயற்சி கைவிடப்படவில்லை. ஏழை மீனவ மக்களுக்கு எப்படியாவது உதவ வேண்டும்—ஏராளமான மீனவ மக்களுக்குக் குறைந்த விலையில் விசைப் படகுகளை வழங்கவேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் இரும்புக் கம்பிகளுடன் சிமெண்ட் கலவையினுல் படகு கட்டுவது பற்றி ஆராயப்பட்டது.

ஏழைமக்களுக்கு உதவவேண்டுமென்ற எண்ணத்தினுல் எழுந்த இந்த யோசனையை ஏற்க மறுத்தனர் சிலர்.

'சிமெண்டினுல் படகா— சிரிப்புத்தான் வருகுதையா!'—என்றனர் சிலர்.

'என் வாழ்நாளில் இப்படி ஒரு விந்தையான சிந்தனையைக் கண்டதில்லை' என்றனர் இன்னும் சிலர்.

'இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது சிமெண்டினுல் செய்கிருர்களா' என 'முன்னேடி'யைத் தேடினுர் முதியவர் ஒருவர்.

இந் நாட்டு வருங்காலச் சிற்பிகளுக்கு இலவசக் கல்வி வழங்குவதிலும், இளம் சிருர்க்கு இலவச பகல் உணவு வழங்குவதிலும், குக்கிராமங்களுக்கெல்லாம் மின் விசை வழங்குவதிலும்—ஏன்—இரந்துண்ணும் பிச்சைக்காரர்களுக்கு இனியதொரு வாழ்வளிக்க—மறு வாழ்வளிக்கத் திட்டம் தீட்டுவதிலும், இந்தியாவுக்கே வழிகாட்டியாகத் திகழும் தமிழகம், சிமெண்ட் கலவையில் குறைந்த விலையில் விசைப் படகுகளைக் கட்டுவதிலும் இந்தியாவிற்கே வழி காட்டியாகத் திகழ முடிவெடுக்கப்பட்டது. விஞ்ஞானம் வளராத காலத்திலேயே கடல் கடந்த நாடுகளை எல்லாம் தோணியிலேயே சென்று தோற்கடித்த பெருமைமிக்க தமிழ் மகனுக்கு சிமெண்ட் கலவையில் படகு கட்டும் பணி முடியாத ஒன்று அல்ல! ஆகவே, சிமெண்ட் கலவையினுல் படகு கட்டுவதென தீர்மானிக்கப்பட்டது.


சிமெண்ட் கலவையினுல் படகு கட்டி முடிக்கப்படுமேயானுல் இன்றைய தினம் மரத்தினுல் படகின் உடற் பகுதி (Hull) கட்டுவதற்கு ஆகின்ற தயாரிப்புச் செலவில் குறைந்தது 50 சதவீதம் குறைக்க முடியும். தயாரிப்புச் செலவில் 50 சதவீதம் குறைந்தால் தயாரிக்கப்படும் படகுகளின் எண்ணிக்கை அதிகமாகும். அத்துடன் படகுகளைப் பெறும் மீனவருக்குக் கடன் சுமை குறையும். ஆகவே சிமெண்ட் கலவையினுல் படகு கட்டத் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## முன்னேடியை உருவாக்க முயற்சி

சிமெண்டினுல் படகு கட்டும் முறைக்கு இந்தியாவில் 'முன்னேடி' இல்லாத காரணத்தால் இம்முயற்சியில் முன்னெச்சரிக்கையாகச் சில ஆராய்ச்சிகள் அவசியம் எனக் கருதப்பட்டன. எனவே சிமெண்ட் கலவையினுல் செய்யப்பட்ட பலகை வடிவான பல துண்டங்களைச் சென்னை கிண்டியிலுள்ள கிராம, நெடுஞ்சாலைத் துறையின் ஆராய்ச்சிக் கூடத்திற்கு அனுப்பி அவைகளின் தன்மைகள் அறியப்பட்டன. இந்த ஆராய்ச்சியின் துணையைக் கொண்டு சிமெண்ட் கலவையினுலான 'படகின்' உடற் பகுதியை வலிவுடனும், விரிசல் காணுத தன்மையிலும் தயாரிக்க முடிந்தது. எனவே விசைப்படகுகள் கட்ட விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முதன் முதலில் சிறிய அளவில் 5 அடி நீளத்தில் மாதிரிப் படகு

இரும்புக் கம்பிகளால் கட்டப்பட்ட படகின் வரிவடிவம்.



ஒன்று கட்டப்பட்டது. இரும்புக் கம்பிகளால் இணைக்கப்பட்ட இம்மாதிரிப் படகை பார்க்கும் போது, வழக்கிலுள்ள 32 அடி நீளமுள்ள விசைப் படகுகளிடையே இம்மாதிரிப் படகு வைக்கப்பட்டிருக்கும் நிலையைப் பார்க்கும் போது—மழைக் காலத்தில் இளஞ்சிறார்கள் விடும் காகிதக் கப்பல் நம் கண்முன்னே தோன்றுகிறது. சாலை ஓரத்தில் வழிந்தோடும் நீரில் சாய்ந்து சாய்ந்து நகரும் அந்தக் காகிதக் கப்பல் எத்தனை எழிலாகக் காட்சியளிக்கின்றதோ அத்தனை எழிலை மாதிரிப் படகும் காட்டுன்றது. மனத்தைக் கவரும் மாதிரிப் படகை வைத்துக் கொண்டு மனித உயிர்களை ஏற்றிச் செல்லும் விசைப் படகு முதன் முதலில் 15 அடி நீளத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டோர், சென்னை இராயபுரம் படகுகட்டும் நிலையப் 'பணி மேலாளரும்', அவருக்குத் துணையாகத் தொழில் நுட்பம் அறிந்த உதவியாளர் ஒருவரும், தொழில் நுட்பம் அறியாத (unskilled) பத்துத் தொழிலாளர்களும் ஆவர். இச் சிறிய குழுவே இப் புதிய படகைச் சிறப்பாக அமைத்தது. இப் படகின் விளிம்புப் பாகமும், உடற் பகுதியும் சிமெண்ட் கலவையில் கட்டப்படுவதற்கு முன்னே, இரும்புக் குழாய்களினால் படகின் வரி வடிவம் கட்டப்படுகின்றது. இரும்புக் கம்பிகளையும், குழாய்களையும் சாரமாகக் கட்டி அவற்றின் மீது கான்கிரீட் வைத்துக் கட்டடங்கள் எப்படிக் கட்டப்படுகின்றனவோ அதே முறையில் இரும்புக் கம்பிகளினால் படகின் உடற் பகுதியை வடித்துக் கொண்டு, அதன் மீது சிமெண்ட் கலவை, கையினாலேயே பூசப்படுகிறது. இப்படி முடிக்கப்பட்ட படகிற்கு அழகிய வர்ணம் பூசியவுடன் சிமெண்ட் படகு முடிவடைந்து விடுகிறது. அதன் பிறகு வழக்கமாக மற்றப் படகுகளில் வைக்கப்படும் இயந்திரத்தை இப்படகிலும் பொருத்திவிட்டால் கடல் அலைகளைக் கிழித்துக்கொண்டு மிக வேகத்தில் செல்லும் இப்படகு!

''15 அடி நீளமுள்ள இப்படகு 5-3-1971-அன்று வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. ஐந்து அல்லது ஆறு பேர் செல்லக் கூடிய இப்படகு கடலில் சுமார் இரண்டுமணிநேரம் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. இப்படகின் பயணம் வெகு அமைதியாக இருந்ததுடன் பெருத்த நம்பிக்கையையும் அளித்தது. மரத்தினால் செய்யப்பட்ட படகில் செல்லும் பயணத்திலிருந்து இப் படகில் செல்லும் பயணம் எந்த விதத்திலும், அபாயமுள்ளதாக இருக்கவில்லை. எனவே 38 அடிநீளமுள்ள பெரிய படகினைக் கட்டி முடிக்கும் பணியில் களிப்புடன் இறங்கியுள்ளோம்''— என்று இராயபுரம் படகு கட்டும் நிலையத்தின் பணி மேலாளர் திரு. கனகசபாபதி கூறிய போது வெற்றியின் மகிழ்ச்சி அவர் முகத்தில் மலர்ந்தது.

## இந்தியாவிற்கு வழிகாட்டி இந்த சிமெண்ட் படகு!

விசைப் படகுகளைக் கட்டுவதில் இந்தியாவிற்கே வழி காட்டியாகத் திகழும் தமிழகம் சிமெண்ட் கலவையினால் படகுகளைக் கட்டுவதிலும் 1971-ஆம் ஆண்டிலே இந்தியாவிற்கு வழிகாட்டியாக விளங்குகிறது. கண்ணால் பார்த்தவற்றை—படித்தவற்றைத் தம் கலைத்திறனாலும் தொழில் திறனாலும் கட்டி முடிக்கும் கலை வல்லுநர்களும், தொழிற் சிற்பிகளும் வாழும் தமிழகத்தின் சிறப்புமிக்க தொழிலாளர்கள்தான் இந்த சிமெண்ட் படகையும் கட்டி முடித்தார்கள். எந்த மேல்நாட்டு நிபுணரும் இதற்கென வரவழைக்கப்படவில்லை. எந்த மேல் நாட்டிலிருந்தும் எந்தக் கருவிகளும் இதற்காக வரவழைக்கப்படவில்லை. இங்கு இருப்பதை வைத்துக்கொண்டு மேல் நாடுகள் சிலவற்றில் மட்டுமே செய்யப்படும் இந்த சிமெண்ட் படகை மீன் துறையினர் மிகக் குறுகிய காலத்தில், பத்தே மாதங்களில் கட்டி முடித்துள்ளனர் என்பதை எண்ணும்போது தமிழகத்திற்கு இணை தமிழகம்தான் என்று துணிந்து சொல்லலாம். 15 அடி நீளமுள்ள இச்சிமெண்ட் படகின் உடற் பகுதியைக் கட்டி முடிக்க ரூ. 2,831.76 மட்டுமே செலவாகி உள்ளது. சாதாரணமாக 30 அடி நீளமுள்ள படகின் உடற் பகுதியை மரத்தினாலும்—பித்தளைத் தகட்டினாலும் செய்வதற்குச் செலவாகும் தொகை ரூ. 25,500. 15 அடி நீளமுள்ள சிமெண்ட் படகின் உடற் பகுதியைக் கட்டி முடிக்க ரூ. 2,900 மட்டுமே செலவாயிற்று எனில் 30 அடிநீளமுள்ள அல்லது 36 அடி நீளமுள்ள சிமெண்ட் படகின் உடற்பகுதியைக் கட்டி முடிக்க ரூ.10,000-க்கு அதிகமாக ஆகாது என்று நிச்சயமாக நம்பலாம்.

படகின் உடற் பகுதியின் உற்பத்திச் செலவில் 50 சதவீதம் குறைக்க முடியுமென்ற சாதனையைப் புரிந்துள்ள தமிழக அரசு இச் சாதனையை மக்களுக்கும் பயன்பட வேண்டுமென்பதற்காக இப்போது 38 அடி நீளமுள்ள சிமெண்ட் படகினைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. இதன் உடற் பகுதிக்கான அடிக்கட்டை (Keel) இரும்புக் குழாய்களால் தயாரிக்கப்பட்டு சிமெண்ட் கலவையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இதன் வெள்ளோட்டம் விரைவில் நடைபெறவிருக்கிறது. வெள்ளோட்டம் வெற்றியடையும் நாள் தமிழகத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் நாள்!

## படகைத் தயாரிக்கப் பயன்படும் பொருள்கள்.


இந்த சிமெண்ட் படகைத்தயாரிக்கத் தேவையானதெல்லாம் சிமெண்ட், மணல், இரும்புக் கம்பிகள், படகின் அடிக்கட்டைக்கு ஒரு நீளமான இரும்புச் சட்டம்! மரத்தினால் படகு கட்டும் தொழில் நுட்பம் தெரிந்த ஒருவரும் அவருக்குத் துணையாக தொழில் நுட்பம் அறியாத 6 தொழிலாளர்கள் மட்டுமே இருந்தால் சிமெண்ட் படகைக் கட்டி விடலாம். ஆனால் மரத்தினால் படகுகட்டுவதென்றால் அதற்குப் பணி புரியும் அத்தனை பேருமே தொழில் நுட்பம் அறிந்தவர்களாக (Skilled) இருக்க வேண்டும். இந்த வகையிலும் சிமெண்ட் படகு கட்டுவதில் நன்மையுள்ளது. மேலும் சிமெண்ட் படகின் அடிக்கட்டையைத் (keel) தொழில் நுட்பம் அறிந்த ஒருவர் தயாரித்துக் கொடுத்துவிட்டால் மீனவக் குடும்பத்தினரே இச் சிமெண்ட் கலவையைப் பூசி படகை முடிக்கின்ற பணியை மேற்கொள்ளலாம். எனவே சிமெண்ட் படகு கட்டும் முறை மக்களிடையே பரவினால் படகின் அடிக்கட்டையை வைத்துக் கொண்டு எங்கு வேண்டுமானாலும் படகைக் கட்டி


முடிக்கலாம். இதனால் ஆங்காங்கே அதிகமான படகுகளைக் கட்டி முடிக்க வாய்ப்புள்ளது.

## சிமெண்ட் படகின் சிறப்புகள்.

சிமெண்ட் கலவையினால் படகு கட்டுவதால் தயாரிப்புச் செலவு குறைவதுடன் மேலும் பல நன்மைகள் உள்ளன. கட்டி முடிக்கப்பட்ட படகிற்குப் பராமரிப்புக் கெனச் செலவழிக்கத் தேவையில்லை. தேவையானால் வண்ணப் பூச்சு மட்டுமே செய்யலாம். வேறு எந்தப்பராமரிப்பும்தேவையில்லை. மராமத்தும்தேவையில்லை. இச் சிமெண்ட் படகு தீப்பிடிக்காதது. எங்கும் ஒட்டை விழாது. மரத்தைத்துளையிடுகின்ற கடலில் வாழும் பூச்சிகளினால் படகின் உடற் பகுதி பழுதாகாது. மரத்தினால் செய்யப்பட்ட படகானால் இப்பூச்சி மரத்தின் உள்ளே சென்று துளையிட்டுக் கொண்டே செல்லும். ஆனால் வெளித்தோற்றத்திற்கு மரப்படகு நல்ல முறையில் இருக்கும். படகின் மரத் துண்டுகளில் துளைகள் பெருகி, பிறகு படகே மூழ்கும் நிலை ஏற்படும். இத்தகைய அபாயம் சிமெண்ட் படகில் ஏற்பட வாய்ப்பே இல்லை. மரப்படகில் இணைப்புகள் அதிகம், ஆகவே இணைப்புகளைச் செப்புத் தகடு கொண்டு மறைக்க வேண்டும். இல்லையெனில் இணைப்பு வழியே நீர் படகின் உள்ளே செல்லும். செப்புத் தகடுகளைப் பயன்படுத்துவதால் செப்புத் தகடுக்கான அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. சிமெண்ட் படகில் இணைப்புகளே இல்லை. ஆகவே நீர் உள்ளே செல்லும் வாய்ப்பில்லை. விபத்துக்களினால் ஏற்படும் பாதகம் மிகச் சொற்பம். விபத்தினால் எந்த இடத்தில் சேதம் ஏற்பட்டதோ அந்த இடத்தில் உள்ள கம்பியை நிமிர்த்திவிட்டுசற்று சிமெண்டை பூசி விட்டால் சேதம் சரியாகி விடும். அத்துடன் மரத்தினால் செய்யப்பட்ட படகின் மரச்சட்டங்களில் மண்ணும், மணலும் சேர்ந்து விட வாய்ப்புண்டு. சிமெண்ட் படகில் மண் சேராது. மரப்படகின் உடற் பகுதி 1.5" பருமன் உள்ளது. சிமெண்ட் படகின்உடற்பகுதி 0·75"பருமன் உள்ளது. மரப் படகு தண்ணீர் ஊற ஊற பலவீனமாகிக் கொண்டே இருக்கும். சிமெண்ட் படகு தண்ணீரில் ஊற ஊற வலிவுள்ள தாக மாறிக்கொண்டேஇருக்கும்.

இத்தகைய சிறப்பு மிக்க சிமெண்ட் படகு மீனவர்களுக்குப் பெரிதும் பயன்படும். பயன் மிக்க இச்சிமெண்ட்படகு மீனவர் வாழ்வில் பெரும் மாறுதலை உண்டாக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை !


முற்றுப்பெற்ற சிமெண்ட் படகு !

சிமெண்ட் படகு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.




# தமிழ்நாட்டில் தக்கைக்கல் தொழிற்சாலை

தக்கைக்கல் தொழிற்சாலை தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. '' தக்கைக்கல்லா? கல்லில் அப்படியொரு கல் லுண்டா? '' என்று கேட்கிறீர்களா ?

கனமில்லாக் கலவைக்கல்லின் பெயர்தான் ' தக்கைக்கல் '!

இந்தத் தக்கைக்கல் எங்கே கிடைக்கிறது, இதனால் என்ன பயன், என்ற ஐயப்பாடுகளும் எழுவதும் நியமானதே!

ஏனெனில் நம் நாட்டுக்குத் தக்கைக்கல் மிகப் புதியது.

தக்கைக்கல் - செங்கல்லுக்கும் கற்காரைக்கும் சிறந்த மாற்றுக அமைந்துள்ள கல்லாகும்.

வழக்கம்போல் இந்தியாவுக்கும் வழிகாட்டும் பெருமையை உரிமையாக்கிக் கொள்ளும் தமிழ்நாடு முதன் முதலாகத் தக்கைக்கல்லைத் தயாரிக்கும் பெருமையை உரிமையாக்கிக் கொண்டுள்ளது.

போலந்து, ரஷ்யா மற்றும் மேலை நாடுகளில் வான் முட்டக் கட்டப்படும் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் இந்தத் தக்கைக்கல்லால்தான் கட்டப்பட்டு வருகின்றன.

செல்லுலார் கான்க்ரீட் என்று வழங்கப்படும் கலவைக்கல்லே தக்கைக்கல் (Celcrete) என்று கூறப்படுகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை எண்ணூரில் உள்ள அனல் மின் நிலையம் அருகில் தக்கைக்கல் தொழிற்சாலையைக் கட்டி வருகிறது.

நவம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்கவிருக்கும் தக்கைக்கல் தொழிற்சாலை, போலந்து நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் கட்டப்பட்டு வருவதாகும்.

ரூபாய் 365 லட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் இந்தத் தொழிற்சாலை இந்தியாவிலேயே முதன் முதலாகக் கட்டப்பட்டு வரும் தக்கைக்கல் தொழிற்சாலையாகும். ஆண்டுதோறும் இத் தொழிற்சாலையில் ரூ. 125 இலட்சம் மதிப்புக்குத் தக்கைக் கல் உற்பத்தியாகும்.


இத் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்குப் பதின்மூன்றுயிரம் கற்கள் உற்பத்தியாகும். எழு நூறு தக்கைக்கல் பலகைகளும் உற்பத்தியாகும்.


தக்கைக்கல் ஒன்றின் பரிமாணம் பதினைந்து சாதாரணச் செங்கற்களின் இடத்தை நிரப்பும்.


போலந்து, ரஷ்யா போன்ற நாடுகளில் மிக அதிகமாகத் தக்கைக்கல் தொழிற்சாலைகள் உள்ளன. அமெரிக்க நாட்டிலும் தக்கைக்கல் தொழிற்சாலைகள் உள்ளன. அந்த நாடுகளில் பல அடுக்குகள் உள்ள மாடிக் கட்டடங்கள் மிக விரைவாகக் கட்டி முடிப்பதற்குக் காரணம் தக்கைக்கல்தான்.


தக்கைக்கல் தயாரிப்பைப் பற்றி முதலில் தெரிந்து கொள்ளுவோம்.


மணலையும், சுண்ணும்பையும் கலந்து பிரும்மாண்டமான இயந்திரங்களால் மிக மிக சன்னத் தூளாய் நீர்விட்டு அரைக்கப் படும். அரைத்த அக்கலவையில் அலுமினியப் பொடியும் குறைந்த அளவில் கலக்கப்படும்.












இந்தக் கலவை இயந்திரங்களின் மூலம் ஓடி நுரைத்துப் பொங்கி, சாந்து இறுகிய பின்னர் அளவுக்கு ஏற்ப இயந்திரத்தால் அறுத்து, நீராவியில் வேகவைத்து எடுக்கப்படும்.

கட்டடக் கூரைகளுக்கு ஏற்ற வகையிலும், தளம் அமைக்கவும், தக்கைக்கல் பலகைகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

தாய்ச்சுவர், தடுப்புச் சுவர் முதலியவைகளுக்காகத் தக்கைக் கல் பாளங்களை உருவாக்கிக் கொள்ளலாம்.

செங்கல் எடையில் மூன்றில் ஒரு பங்குதான் தக்கைக்கல் இருக்கும். கற்காரையின் எடையில் நான்கில் ஒரு பங்குதான் தக்கைக்கல் பலகை இருக்கும்.

தக்கைக்கல் இப்படி எடை குறைந்திருந்தாலும் மிக வலிமையானது. தக்கைக்கல்லால் கட்டப்படும் கட்டடத்தை வெளிப்புற தட்ப வெப்பம் தாக்குவதில்லை.

கனமில்லாக் கலவைக் கல்லாகத் தக்கைக்கல் இருப்பதால் உயரமான கட்டடங்களைக் கட்ட மிக ஆழமான அளவுக்கு அடிப்படை அமைக்க வேண்டியதில்லை. தாய்ச்சுவரும் மிக அகலமானதாக அமைய வேண்டியதில்லை.

தக்கைக்கல்லின் மூலம் கட்டடம் கட்டத் தொடங்கினுல் கொத்தனரின் வேலைத்திறன் இரட்டிப்பாகும். சிற்ருளின் வேலைத்திறன் மும்மடங்காகும். கட்டட அடிப்படையின் அகலம் பாதியாகக் குறையும்.

தக்கைக்கல் தொழிற்சாலையை அமைப்பதற்காகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஆறு பொறியியல் வல்லுநர்களை, போலந்து நாட்டுக்கு அனுப்பியது.

திருவாளர்கள் பி. டி. ஜெயராமன், ஜெகதீசன், பி. எஸ். நடராசன், எஸ். நடராசன், எஸ். கணேசன் முதலியோர் போலந்து நாட்டுத் தக்கைக்கல் தொழிற்சாலைகளில் பயிற்சி பெற்றபின்னர் நம் நாட்டுக்குத்

திரும்பினர். நம் நாட்டுக்கு ஏற்ற வகையில் இங்குத் தக்கைக்கல் தொழிற்சாலையை அமைத்திட இப்பொறியியல் வல்லுநர்கள் அரும்பாடு பட்டுள்ளனர்.

முதலில் இரண்டு ஆண்டுகளுக்கு பயன்படுத்த இருக்கும் தக்கைக்கல் தொழிற்சாலை எண்ணூர் அனல்மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் நிலக்கரிச் சாம்பலைக் கொண்டு தக்கைக்கல்லைத் தயாரிக்கும்.

கட்டடப் பொருள்களில் ஒரு புதுமையாக அமைந்துள்ள தக்கைக்கல்—

நீரில் மிதக்கும்,
நெருப்பை எதிர்க்கும்,
கானல் தணிக்கும்,
கடுங்குளிர் போக்கும்,
பாரமும் தாங்கும்,
பார்வைக்கும் அழகாய்
இருக்கும்!

இந்தத் தக்கைக்கல்லால் சென்னையில் உருவாகவிருக்கும் 65 மாடிக்கட்டடம் கட்டப்படலாம். தக்கைக்கல்லால் கட்டுவது விரைவாக வேலை நடைபெறுவதுடன் குறைவான செலவிலும் அமையும்.

வருங்காலத் தமிழகத்தில் எழுப்பப்படும் உயரமான கட்டடங்கள் அனைத்தும் தக்கைக் கல் பாளங்களாலும் பலகைகளாலும் கட்டப்பட்டால் வியப்பேதுமில்லை.

இப்பொழுது தக்கைக்கல் உற்பத்தியானதும் வீட்டு வசதி வாரியத்தின் கட்டடங்கள் அனைத்தும் தக்கைக்கல்லைப் பயன்படுத்தியே கட்டப்படும்.

நல்ல கட்டடங்கள் அமைத்து நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையப்போகும் தக்கைக்கல் பற்றிய விவரங்கள் இன்னும் தமிழ்நாட்டு மக்களுக்குப் பரவலாக—விவரமாகத் தெரியவில்லை. இக்குறையைப் போக்கும் வகையில் தக்கைக்கல் பற்றிய திரைப்படம் ஒன்றையும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் விரைவில் தயாரித்து வெளியிடத் திட்டமிட்டுள்ளது.

## பல்கலைக் கழகங்கள்

சூன் 27-ல் தமிழகத்தில் கோவையில் விவசாயப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக் கழகங்கள் ஆங்கிலத்தில் (University) என்று அழைக்கப்படுகிறது.

ஐரோப்பாவில் முதலில் பல்கலைக் கழகம் இத்தாலியில் உள்ள பொலோனு (Bologna) என்னும் ஊரில் 12-ஆம் நூற்றுண்டில் தோன்றியது. இது ஐரோப்பாவின் தென் பகுதியில் தோன்றிய பல்கலைக் கழகங்களுக்கு முன் மாதிரியாக இருந்து வந்தது.

அதேபோல், ஐரோப்பாவின் வட பகுதிக்கு முன் மாதிரியாக அமைந்தது, பிரான்ஸ் நாட்டுத் தலைநகராகிய பாரிசில் தோன்றிய பல்கலைக் கழகமாகும்.

இங்கிலாந்தில் சிறப்பு வாய்ந்த பல்கலைக் கழகங்கள், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகமும், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகமுமாகும்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் தோன்றியது 1167-ல். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது 1209-ல்.

ஜெர்மனியில் பல்கலைக் கழகம் முதன் முதலில் பிரேகு (Prague) என்னுமிடத்தில் 1348-ல் எழுந்தது.

ரஷ்யாவில் முதல் பல்கலைக் கழகம் தோன்றியது 1730-ல் பீட்டர்ஸ்பர்க் நகரிலாகும்.

இந்தியாவில் தட்சசிலம் என்ற ஊரிலிருந்த குருகுலம் 7-ஆம் நூற்றுண்டில் பல்கலைக் கழகமாக மாறியது. இது 10 நூற்றுண்டுக்காலம் சிறப்புடன் விளங்கியது. அதன் பிறகு உஜ்ஜயினி, விக்கிரமசியா, காசி, காஞ்சி, திருச்சரணம் போன்ற இடங்களில் பல்கலைக் கழகங்கள் தோன்றி விளங்கின.

பௌத்த மதம் செழித்தோங்கிய காலத்தில் அவர்களுடைய மடங்களாகிய விகாரைகளும் பல்கலைக் கழகங்களாகச் செழித்து ஓங்கின.

நாளந்தாவிலிருந்த பல்கலைக் கழகம் இவற்றுள் மிகச் சிறந்தது.

தென்னகத்தில் 11-ஆம் நூற்றுண்டில் கடிகைகள் என்னும் வடமொழிப் பல்கலைக் கழகங்கள், காஞ்சி, நாகை, எண்ணாயிரம், திருபுவணி, திருமுக்கடல் முதலிய இடங்களில் நன்கு நடைபெற்று வந்தன.

ஆங்கிலேயர் ஆட்சியில் முதன் முதலில் நிறுவப்பட்ட பல்கலைக் கழகங்கள் கல்கத்தா, பம்பாய், சென்னைப் பல்கலைக் கழகங்களாகும். இவை தோன்றியது 1857-ல். பஞ்சாப் பல்கலைக் கழகம் 1882-லும், அலகாபாத் பல்கலைக் கழகம் 1887-லும் எழுந்தன. 1916-ல் காசி இந்துப் பல்கலைக் கழகம் காணப்பட்டது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1929-ல் தோன்றியது. அதன் பிறகு பல பல்கலைக் கழகங்கள் நாட்டில் தோன்றின. சில ஆண்டுகளுக்கு முன்னால் மதுரைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.

பல்கலைக் கழக வரிசையில், தொழில் நுணுக்க வரிசையில், கோவை விவசாயப் பல்கலைக் கழகம் தமிழகத்தின் அறிவாலயங்களில் ஒன்றாகத் திகழ்ந்து, தன்னுடைய புகழினையும் சேர்த்து, தொண்டாற்றத் துவங்கப்பட்டுள்ளது சூன் 27-ல்.

## திருமணம் வெகுமதிகளுக்கு தேவையான காஞ்சிபுரம் பனாரஸ் பட்டுப்புடவை ரகங்களுக்கு...

# தனிப்பெரும் கைராசி நிறுவனம்!




தந்தி: "ரஞ்சனாஸ்"

தபால் பெட்டி: 348

போன்: 5454, 6385, 5063.

# ரஞ்சனாஸ் ஸ்டோர்ஸ்

[டீலக்ஸ் ஏர்-கண்டிஷன் ஷோ ரூம்]

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள் & விற்பனையாளர்கள்.

## மலைவாசல், திருச்சி-2.


சிறுசேமிப்பு
இன்றைய சேமிப்பு
நாளைய பாதுகாப்பு!
நாட்டுக்கும் வீட்டுக்கும்
நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே
தூற்ற வேண்டும்
காசுள்ளபோதே
சேர்க்க வேண்டுமல்லவா?
சிறுசேமிப்பு
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க!
இயக்குநர்
சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9

## சுவை தரும் மா வகைகள்

அல்பான்சோ.—இந்த ரகம் 'டீ அல்பான்சோ' என்ற பிரெஞ்சுக்காரரின் முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும். இது இந்தியாவின் மிகச் சிறந்த ரகமாகும். இந்த ரகத்தைச் சென்னையில் 'காதர்' என்றும், சேலம், திருச்சி மாவட்டங்களில் 'குண்டு' என்றும், நெல்லை மாவட்டத்தில் 'பட்டணம் ஜாதி' என்றும் கூறுகிறார்கள். உயர்ந்த தரம், நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருக்கும் தன்மை இதன் சிறப்புக் குணங்களாகும். இந்த ரகப் பழத்தின் தோல் மெலிந்து இருக்கும். அல்பான்சோ மாம் பழம் மிகவும் இனிப்பாக இருக்கும். பதனப்படுத்துவதற்கும், பழச்சாறு தயாரிப்பதற்கும் இந்த ரகம் மிகவும் ஏற்றது.

பெங்களூரா.—இது தமிழ் நாட்டின் முக்கிய வாணிக ரகமாகும். அதிக அளவு காய்கள் காய்த்தல், தவறாமல் ஆண்டு தோறும் தொடர்ந்து காய்க்கும் தன்மை, பெங்களூரா ரகத்தின் சிறப்புத் தன்மைகளாகும். பெயரைக் கொண்டு பார்த்தால் இந்த ரகம் பெங்களூருடன் தொடர்புடையதாக இருக்கும் என்று தோன்றினாலும், பெங்களூரில் இந்த ரகத்தை 'தோட்டா பூரி' என்றே குறிப்பிடுகிறார்கள்.

இந்த ரகத்திற்கு 'கல்லாமை', 'கலெக்டர்', சுந்தர் ஷா', 'பர்மோடிலா', 'கிளி மூக்கு' என்ற வேறு பெயர்களும் வழக்கத்தில் உள்ளன. பெங்களூரா பழத்தின் தோல் தடிப்பாக இருக்கும். இந்த ரகப் பழம் நடுத்தரமான இனிப்புச் சுவையுடையது. நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருப்பதுடன், நீண்ட தூரத்தில் உள்ள விற்பனைக் கூடங்களுக்கு அனுப்ப இந்த ரகம் மிகவும் ஏற்றது.

பங்கனபள்ளி.—இது ஆந்திர மாநிலத்தின் முக்கிய ரகம். தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் இந்த ரகத்தை 'சப்பட்டை' என்று கூறுகிறார்கள். இந்த ரகம் அதிக மகசூல் அளிக்கும் ஆற்றல், தொடர்ந்து பலன் கொடுக்கும் தன்மை உடையது. இப்பழத்தில் தோல் மென்மையாக இருக்கும் ; நார் இருக்காது. பங்கனபள்ளி பழம் இனிப்பாக இருக்கும். நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருப்பதுடன், நீண்ட தூரம் உள்ள இடங்களுக்கு அனுப்பவும் ஏற்றது.

நீலம்.—தமிழ் நாட்டின் முக்கிய ரகங்களில் இதுவும் ஒன்று. இந்த ரகம் தொடர்ந்து அதிகமாகக் காய்க்கும் ஆற்றல் உடையது. ஆனால் இந்த ரகம் பெரும்பாலும் பின்பருவத்திலேயே (ஜூன்-ஆகஸ்ட்) அறுவடைக்கு வரும். இந்த ரகம் மாம்பழப் பருவமில்லாக் காலத்திலும் காய்க்கும் பண்புடையது. அதாவது வேறு எங்கும் மாம்பழம் கிடைக்காத காலமான செப்டம்பர்-அக்டோபர் மாதங்களிலும் தமிழ் நாட்டில் நீலம் மாம்பழங்கள் கிடைக்கிறது. இதற்கு 'கார் மாங்காய்' என்றும் சொல்லப்படுகிறது. எனவே இந்த ரகம் 'ஆப்சீசன் வெரைடி' (off Season variety) என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ரகத்தின் பழம் நீண்ட நாட்களுக்குக்கெடாமல் இருப்பதால், நெடுந்தொலைவில் உள்ள விற்பனைக் கூடங்களுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்றது. இப்பழத்தின் தோல் நடுத்தரத் தடிப்பு உடையது. நீலம் மாம்பழம் இனிப்பான சுவையுடையது. பழச்சதையில் நார் இருக்காது. இப்பழத்தை 'காசாலட்டு' என்றும் கூறுகிறார்கள்.

ருமானி.—செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் புகழ் பெற்ற ரகம் இது. இப்பழம் இனிப்பாகவும், மெலிந்த தோலுடனும், நார் இல்லாமலும் இருக்கும். இந்த ரகம் அக்டோபர்-நவம்பரிலும் அறுவடை கொடுக்கும். ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்ல ஏற்ற ரகம் இது.

மல்கோவா.—மிகச் சிறந்த வணிக ரகம். மிகவும் இனிப்பான சுவையுடையது. பழச்சதை கெட்டியாகவும், நார் இல்லாமலும் இருக்கும். ஆனால் இந்த ரகம் அதிகம் காய்க்காது. மல்கோவா மாம்பழம் தரம் மிகுந்தது. நீண்ட நாள் கெடாமல் இருக்கும் தன்மையுடையது.

பைரி.—அல்பான் சோ விற்கு அடுத்தபடியாகச் சிறப்புடைய ரகம் இது. இதைத் தமிழ் நாட்டில் 'நடுச்சாலை'', 'பீட்டர்' என்றும் கூறுகிறார்கள். மிகுந்த இனிப்புடையது. சில நாட்களுக்கே கெடாமல் இருக்கும். தொடர்ந்து ஒரே மாதிரியாகக் காய்க்காது.

ஹிமாயுதின்.—மசூலிப்பட்டண நவாப்பினால் உருவாக்கப்பட்ட ரகம் இது. மிகவும் சிறந்த ரகம். மிகுந்த இனிப்புடையது. இந்த ரகத்தை 'ஹமாம்' என்றும், 'இமாம்பசந்த்' என்றும் அழைக்கிறார்கள். நடுத்தரமாகக் காய்க்கும் தன்மையுடையது.

பாதிரி.—இந்த ரகம் தஞ்சை மாவட்டத்தில்—அதுவும் குறிப்பாக மாயவரம் பகுதியில்—புகழ்பெற்ற ரகம். தோல் நடுத்தர தடிப்பாக இருப்பதுடன் உண்மையான தோலைப் போலவே இருக்கும். மிகவும் இனிப்பாக இருக்கும். ஆனால் நடுத்தர மாகவே காய்க்கும்.

பஞ்சவர்ணம்.— இராசபாளையம் பகுதியில் சிறப்பாகக் காணப்படுகிறது. இனிப்பான சுவையுடையது. நடுத்தரமாகவே காய்க்கும்.

ஜஹாங்கீர்.—மிகுந்த இனிப்பு உடையது. பழம் பெரியதாக இருக்கும். தோல் தடிப்பாக இருக்கும். நார் இருக்காது. இவ்வகை மரம் மிகவும் குறைவாகவே காய்க்கும். இவ்வகைப் பழங்களை அதிக நாட்களுக்கு வைத்திருக்க முடியாது. புகழ்பெற்ற ரகம் இது.

சிறுநிலக்கிழார்களும் சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டும் என்பதற்காக, தமிழ் நாடு அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

தற்பொழுது தமிழ்நாடு அரசு, சிறுநிலக்கிழார்களுக்கு உதவி செய்யப் புதியதோர் திட்டம் தயாரித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு இரசாயன உரம், பொறுக்கு விதைகள், வேளாண்மைக்கருவிகள் வழங்கப்படும். கிணறு வெட்டவும் பம்புசெட் அமைக்கவும் கடன் கொடுக்கப்படும்.

இதற்காக ரூபாய் 5 கோடி 60 இலட்சத்தைத் தமிழ் நாடு அரசு ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 3 முதல் 5 ஏக்கர் வரை புன்செய் நிலம், 2 முதல் 3 ஏக்கர் வரை நன்செய் நிலம் உள்ள உழவர்களுக்கு மட்டுமே கடன் கொடுக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுக்கப்படும்.

இப்புதிய திட்டம் தென் ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில்மட்டும் தற்பொழுது செயல்படுத்தப்படும்.

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்ட ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் இந்த ஆண்டில் நிறைவேற்றப்படும்.

1. பண்ணுருட்டி.
2. நல்லூர்.
3. முகையூர்.
4. திருவெண்ணெய்நல்லூர்.
5. திருக்கோவிலூர்.
6. கோலியனூர்.

மேற்கூறப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிதாக 3,500 கிணறுகள் வெட்டப்படும். அத்துடன் 3,500 பம்புசெட்டுகள் அமைக்க நிலவள வங்கிகள் மூலம் கடன் கொடுக்கப்படும். அக்கடனை 10 தவணைகளில் திருப்பிக் கட்ட வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் பின்கண்ட ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும்.

1. வட மதுரை.
2. வேடசந்தூர்.
3. பாளையம்.
4. சாணார்பட்டி.
5. செல்லம்பட்டி.
6. கல்லுப்பட்டி.
7. கள்ளிக்குடி.
8. திருமங்கலம்.
9. நத்தம்.


இப்பகுதிகளில் 2,000 கிணறுகள் புதிதாக வெட்டவும், 2,500 பம்பு செட்டுகள் அமைக்கவும் நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படும். இப்பகுதிகளில் முந்திரி பயிரிடுவோர்களுக்கு மட்டும் தனிச் சலுகை தரப்படும்.

நெல்லை மாவட்டத்தில் கீழ்க்கண்ட ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் இந்த ஆண்டில் நிறைவேற்றப்படும்.

1. ஆலங்குளம்.
2. விளாத்திகுளம்.
3. புதூர்.
4. புதுக்கோட்டை.
5. வல்லநாடு.
6. கயத்தாறு.
7. கோயில்பட்டி.
8. ஓட்டப்பிடாரம்.
9. நாங்குநேரி.
10. வள்ளியூர்.
11. இராதாபுரம்.

மேற்கூறிய பகுதிகளில் 2,000 கிணறுகள் வெட்டவும், 1,000 பம்புசெட்டுகள் அமைக்கவும் கடன் கொடுக்கப்படும்.

இத் திட்டத்தைப் பயன்படுத்தித் தீவிரமாக வேளாண்மையில் ஈடுபட்டு, உற்பத்தியைப் பெருக்கி உயரிய வருவாயைப் பெற்று வளமாகவாழுங்கள் என்று சிறுநிலக்கிழார்களைக் கேட்டுக்கொள்கிறோம்.







1-7-7எ



கதர் கிராமத் தொழில்கள்
கதர், கதர்ப்பட்டு, சோப்பு, தேன
செக்கெண்ணெய்,
தோல்பொருள்கள்,
பனைவெல்லம், சர்க்கரை,
மண்பாண்டம், வார்ப்படங்கள்,
பனைப்பொருள்கள்,
பித்தளை, வெண்கலப்
பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!
கதர், கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

ஏற்றத்தாழ்வற்றதும், விஞ்ஞான யுகத்திற்கு ஏற்றதுமான சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கிட வேண்டுமென உறுதிபூண்டு, தமிழ்ப்பெருங்குடி மக்களின் அன்பும், பரிவும் மிக்க ஆதரவைப்பெற்றுள்ள இந்த அரசு, கொண்ட கொள்கைக்கெனக் விடுதலையும் கிடைத்தாகவேண்டும். அதற்குச் சமூக அமைப்பில் எல்லா வகையிலும் தாழ்வுற்றுக் கிடப்போரின் வேதனை தீர்க்கும் திட்டங்களை விரைவிலே நிறைவேற்றியாக வேண்டும்.






கொற்றம் அமைந்திடத் தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோள் உண்டு எனத்துணிந்து நடைபோடும் என்பதை இந்த நிதி நிலை அறிக்கையின் முன்னுரையாகவும், எமது சூளுரையாகவும் வெளியிடுவதில் பெருமை அடைகிறேன்.

புதிய சோஷலிசச் சமுதாயத்தின் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளை வலியுறுத்தும் வகையில், இந்த அரசு தன் பணிகளை மேற்கொள்ளும் என்கிற நம்பிக்கை உடையவர்களாக இம் மாநிலத்து மக்கள் இருக்கின்றார்கள் என்பதை இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கும்போது நான் கிஞ்சிற்றும் மறந்தேன் இல்லை என்பதைக் காழ்ப்பு சிறிதுமின்றி இந்த அறிக்கையை ஊன்றிப் படிப்பவர்கள் தெளிவுற உணர்வர்.

பொருளாதாரத் துறையில் நடவடிக்கை எடுக்கச் சிறகடித்துப் பறக்கும் நமது ஆர்வம், சமுதாயத் துறையில் கீழ்த்தட்டில் கிடக்கும் பெரும்பாலான மக்களைக் கைதூக்கி விடுவதிலும் காட்டப்பட்டாக வேண்டும். சோஷலிசம், பொருள் பொதிந்த ஒன்றாக அமைய வேண்டுமென்றால், சமூக அமைப்பில் தாழ்வுற்றோரின் நிலை உயர்த்தும் திட்டங்களை, அது தன்னகத்தே கொண்டதாகத் திகழ வேண்டும். பொட்டுப்பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் இருக்கின்ற மக்கள், புதியதோர் உலகு காண, அவர்தம் வாழ்வில் புத்தொளி பரவிடப், பொருளாதார முன்னேற்ற சாதிபேதமற்ற சமத்துவ நிலையும், மூட நம்பிக்கைகளைக் கருவியாகக் கொண்டு அவர்களை ஆட்டிப்படைக்கும் ஆதிக்கச் சக்திகளிடமிருந்து

இந்நாட்டில் சோஷலிசச் சமுதாயத்தை உருவாக்குவதற்குக் குவிந்து கிடக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதும் ஏற்றதொரு வழியாகும். இல்லையேல் அதிகாரக் குவியலும், அதைச் சார்ந்துள்ள அதிகார வர்க்கமும். சோஷலிசத்தைப் பொருளற்றதாக ஆக்கிவிடும். வங்கிகளையும் காப்புறுதி நிறுவனங்களையும் நாட்டுடைமை ஆக்கும்போது ஏற்பட்டதைப் போல, அதிகார மையம் தமிழ் நாட்டில் இருக்கும் முதலாளிகளிடமிருந்து பம்பாயிலோ, புதுடெல்லியிலோ உள்ள சில அதிகாரிகளின் கைக்கு மாறிவிடும் வகையிலே மட்டும் எடுக்கப்படும் நடவடிக்கைகள், சோஷலிசத் தத்துவத்தை முழுமைப்படுத்திவிட முடியாது. இந்த நிறுவனங்களின் நிர்வாகத்தை நடத்திச் செல்வதில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநில அரசுகளுக்குப்பங்களிக்கக் கூடிய திட்டங்களை விரைவில் தீட்டிட, மத்திய அரசு, இன்னும் முன்வராமலிருப்பது வருந்தத்தக்கதாகும்.

ஜனநாயக சோஷலிச அமைப்பில் அதிகாரங்கள் பரவலாகப் பிரித்தளிக்கப்பட வேண்டும். இதனையொட்டி, மத்திய-மாநில உறவு பற்றி ராஜமன்னார் குழு அண்மையில் அளித்துள்ள அறிக்கையை, மாநிலக் கட்சியின் ஆட்சி ஒன்று, தன்னிடமுள்ள அதிகாரத்தை மேலும் பெருக்கிக்கொள்ள எடுத்திருக்கும் முயற்சி என்று யாரும் கருதிவிடக் கூடாது.




மக்கள் சக்தியின் கருவிகளாய் உள்ள அமைப்புகளிடம், தேவையான நிதி வாயில்களும் அதிகாரங்களும் அளிக்கப்பட வேண்டுமென்கின்ற சோஷலிசக் கொள்கையை நிறைவேற்றுவதற்கான வழிவகை ஆதாரமாகவே அந்த அறிக்கையைக் கருத வேண்டும். அரசியல் வழியிலும், புவியியல் அளவிலும் சிறப்புமிகு அமைப்புகளாய் உள்ள மாநிலங்களுக்குத் தன்னாட்சி உரிமை வழங்குவது தான், இந்தியாவைப் போன்ற பெரியதொரு நாட்டில் சோஷலிசக் கொள்கையை நிலைநாட்டுவதற்கு எளிதான வழியாகும். மாநிலங்கள் வளமாகவும், மத்திய அரசு பலமாகவும் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற தன்னாட்சி லட்சியத்தை நாம் வலியுறுத்துகிறோம்.

உரிமைக்குக் குரல் கொடுப்போர் மாநில அரசிலும், உறவுக்குக் கைகொடுப்போர் மத்திய அரசிலும் இருந்திடும் இந்தக் காலத்திலேயே, தமிழகத்தின் முறையீடுகள் பல, தட்டிக் கழிக்கப்படுகின்றன வென்றால், தயவுக்குத் தவம் கிடப்போர் மாநிலத்திலும், தாராள சிந்தையற்றோர் மத்திய அரசிலும் இருந்திட்டால், மாநிலத்தின் வேண்டுகோள்கள் விழலுக்கு இறைத்த நீராகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! அதனால்தான், அரசுப் பொறுப்பில் இருப்போரைப் பற்றிக் கணக்கில் எடுக்காமல் அமைப்பு முறையே மாற்றப்பட்டு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் தன்னாட்சிக் கொள்கை பற்றி, மத்திய அரசினர் சிந்தித்திடத் தயக்கம் காட்டலாகாது.

ராஜமன்னார் அறிக்கையை நாட்டிலுள்ள பல கட்சியினரும் ஆதரித்துள்ளனர். அதனை எதிர்த்திடும் கட்சியிலே கூடத் தெளிவு படைத்தோர் சிலர், அந்த அறிக்கையின் அடிப்படைக் கொள்கைக்கு ஆதரவினை நல்கியுள்ளனர். ஒருசில மாநில முதலமைச்சர்கள் நமது முயற்சிக்கு வலுவூட்டும் வகையில் ராஜமன்னார் அறிக்கை பற்றிய கருத்துக்களை வழங்கியுள்ளனர். சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதில், மாநிலங்களும் தோழமையுடன் பங்கேற்கும் வகையில் மத்திய அரசு, தற்போதைய தன் வீண் பிடிவாதமான நிலையினின்றும் இறங்கிவந்து மாநில நிர்வாகத்தின் பல முனைகளில் தலையிடுவதைக் குறைத்துக் கொள்வதின் வாயிலாக—வளமும், வலிவும் பொருந்திய புதிய இந்தியாவைப் படைத்திட வழி கோலும்.

பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்களைக் கொண்டு பயன்மிகு காரியங்கள் பலவற்றைச் செய்யலாம் எனினும், இன்றைய நிலையில் மாநில அளவில் உள்ள அதிகாரங்களைக் கொண்டு, பாத்திரத்தில் உள்ளதை மட்டும் சிந்தாமல், சிதறாமல், அயராமல் ஆறிடாமல் பரிமாறும் பாங்கு போல், தமிழக அரசு செயல்படுத்தியுள்ள செழுமையான திட்டங்களை இந்த நிதி நிலை அறிக்கையில் விரித்துரைப்பதும் கோடிட்டுக் காட்டுவதும் என் கடமையாகும்.

வேளாண்மைத் துறையில் பசுமைப் புரட்சி செய்திட நாம் ஆற்றியுள்ள பணிகளின் பட்டியல் வருமாறு :—

ஏற்கனவே அளித்ததற்கு மேலாகக் கடன் வசதிகளை அளித்தல், பாசன வசதிகளைப் பெருக்குதல், உரவகைகளை வழங்குதல், முதலீடுகளை உயர்த்துதல், ஆகியவற்றில் உழவர் தம் ஊக்கம் பெருகிட அரசு ஆக்கம் தந்துள்ளது. வேளாண்மைக்கு என முதலீடு செய்யப்படும் தொகை 1967–68-ல் ஏறத்தாழ ரூபாய் 13·4 கோடியிலிருந்து 1971–72-ல் ரூபாய் 18·84 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

மிகுபயன் தரும் விதை ரகங்கள் 1970–71-ல் 49·11 லட்ச ஏக்கரில் பயிரிடப்பட்டது; 1971–72-ல் 59 லட்சம் ஏக்கராக அதனை உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பருப்பு வகைகளின் தட்டுப்பாடு, அதன் காரணமாக அவைகளின் விலை உயர்வு; இதனைக் களைய எண்ணிய இந்த அரசு 1970–71-ல் 5·35 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பருப்பு வகை பயிரிட

முனைப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கியது. 1971-72-ல் இத் திட்டத்தின் கீழ் 23·38 லட்சம் ஏக்கரில் பருப்பு வகை பயிரிடும் செயலாக்கம் வெற்றி யுறும். இத் திட்டத்தின் விரிவான வளர்ச்சியால் பருப்பு வகைகளுக்கு வெளி மாநிலங் களை எதிர்நோக்க வேண்டிய நிலை தவிர்க்கப்பட்டு, விலை யேற்றம் தடுக்கப்படும் நன்னுள் அண்மையில் வந்திடும்.

பல போகப் பயிர்த் திட்டத் தின் (Multiple cropping) கீழ் மாத்திரம் இந்த ஆண்டு 13 லட்சம் ஏக்கரைப் பயன் படுத்தக் கருதியுள்ளோம். உற் பத்திப் பெருக்கத்திற்குப் பல ரக உர வகைகளையும் தேவைக் கேற்ப வழங்கிடத் திட்டமிட் டுள்ளோம். வேளாண்மையில் புதிய முறைகளைப் புகுத்து வதற்கு வேளாண்மைக் கல்வியின் விரிவாக்கம் கருதி, கோவையில் ஓர் பல்கலைக் கழகம் இற்றைத் திங்களில் தொடங்குவது கண்டு உழவர் உலகம் களிபேருவகை கொள்கின்றது. குடுமியான் மலை அண்ணு பண்ணையில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றையும் அமைத்துள்ளோம். அதன் வேலை இந்த ஆண்டே தொடங்கி யுள்ளது.

கூட்டுறவுத் துறையில் உழவர் களுக்கு அளித்துள்ள கடன் வசதி 1967-68-ல் ரூபாய் 37·26 கோடி. 1970-71-ல் ரூபாய் 44·43 கோடி. இது 1971-72-ல் ரூபாய் 61·5 கோடிக்கு உயரு மெனக் கருதுகின்றேன். 117 புதிய நிலவள வங்கிகள் நிறுவப் பட்டுள்ளன. நிலவள வங்கிகள் வாயிலாக 1966-67-ல் ரூபாய் மூன்று கோடியும், 1968-69-ல் ரூபாய் 14·67 கோடியும் நீண்ட காலக் கடனுக வழங்கப்பட்ட தற்கு மாருக, 1971-72-ல் ரூபாய் 21 கோடி அளவுக்குக் கடனுக வழங்க இயலும் என எண்ணுகிறோம். இதற்கு மேலும், உரங்களுக்கான கடன் வகையில், அரசே 6·25 கோடி ரூபாய் நேரடியாக வழங்க வகை செய்கிறது.

மற்றும் கிணறுகள் தோண்டு வதற்காகவும், குழாய்க் கிணறு கள், வடிமுனைக் குழாய்க் கிணறு கள் அமைப்பதற்காகவும், டிராக் டர்கள் வாங்குவதற்காகவும் வேளாண்மை மறுநிதி நிறுவனத் திற்கும், மற்ற வங்கிகளுக்கும் நாம் அனுப்பியிருந்த திட்டம், உலக வங்கியின் கீழ் நடை பெறும் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தால் (International Development Association) ஏற்கப்பட்டிருப்பதை இப் பேரவைக்குப் பெரும் மகிழ்ச்சி யோடு தெரிவிக்கிறேன். மாநில நிலவள வங்கியின் தலைவரும், அரசு அதிகாரிகளும் 1971 ஏப்ரல், மே திங்களில் வாஷிங்டனில் நடைபெற்ற உரையாடல்களில் கலந்துகொண்டு, சென்ற பணி யினை வெற்றிகரமாக முடித்து அதன் விளைவாக நமக்கு ரூபாய் 40 கோடி அளவுக்குக் கூடுதல் கடன் வசதி கிட்டிட ஏற்பாடு கள் செய்து முடித்துள்ளனர். இந்த உடன்பாட்டின் விளைவாக சற்றேறப்ப 10,000 கிணறுகள், 7,000 வடிமுனைக் கிணறுகள், 4,500 குழாய்க் கிணறுகள் அமைத்திடவும், 1,500 டிராக்டர் கள் வாங்கிடவும், நிலவள வங்கிகளும், வணிக வங்கி களும் கடன் தொகைகளை அளித்திட முன்வரும்.

கடந்த ஆண்டில், இவ்வரசு மத்திய அரசின் உதவி பெறு வதில் எய்தியுள்ள வெற்றி காரணமாகத் தென்னர்க்காடு, மதுரை, நெல்லை மாவட்டங் கள் ஒவ்வொன்றிலும், ஒரு கோடியே அறுபது லட்சம் செலவில், சிறு உழவர் வளர்ச்சி நிறுவனங்களை ஏற்படுத்த முடிந் தது. ஆதாயம் குறைவாக உள்ள மிகச்சிறு உழவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் வட ஆர்க்காடு, சேலம் மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கோடி ரூபாய் அளவில் திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது.

மேலும், வேளாண்மைத் துறையில் 1·07 கோடி ரூபாய்ச் செலவில் நிறைவேற்றப்படுவதற் கான புதிய திட்டங்கள் இடம் பெறுகின்றன. போளூர், கள்ளக்குறிச்சி, ஆகிய இடங் களில் மூன்று பொறுக்கு விதைப் பிரிவுகளை நிறுவுவதற்கும், தர்ம புரியில் மண்டல ஆராய்ச்சி நிலையம் அமைவதற்கும், கோவை மதுரை, காஞ்சி, கோவில் பட்டி, குடியாத்தம் ஆகிய இடங்களில் மண்வள சோதனைக் கூடங்களை மேலும் உருவாக்கு வதற்கும் இந்த ஆண்டு வகை செய்யப்பட்டுள்ளது.




பாசனத்தின் மேம்பாடு கருதி அரசு வகுத்துள்ள புதிய திட்டங்களாவன :—

1. சின்னறு.
2. பரப்பலாறு.
3. பாலாறு-பொரந்தலாறு
4. தண்டரை.
5. நந்தன் கால்வாய்.
6. கருப்பா நதி.
7. பொன்னணியாறு.
8. பிளவுக்கல்.
9. பரலியாறு.

இவற்றிற்கு 1971-72-ல் இரண்டு கோடியே முப்பத்தைந்து இலட்சம் ரூபாய்க்கு வகை செய்யப்பட்டுள்ளது. இவற் றுடன் பரம்பிக்குளம்-ஆளி யாறுத் திட்டம், சித்தாறு-பட்டணங்கால் திட்டம், கடானு நதித் திட்டம், வைகைக் கால் வாய்களைப் புதுப்பிக்கும் திட்டம் ஆகியவை சிறப்புடன் நடந் தேறுகின்றன. பெரிய, நடுத் தரப் பாசனத் திட்டங்களுக்காக மொத்தத் தொகையாக ரூபாய் 608 லட்சமும், 785 சிறு பாசனப் பணிகளை நிறைவேற்றி முடித்திட ரூபாய் 252 லட்சமும் ஒதுக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நமது பாசனத் திட்டங்கள் அனைத்தையும் படிப்படியாகப் புதுப்பித்து, கிடைக்கும் நீரை மேலும் சீரிய வழியில் சிக்கன மாகப் பயன்படுத்தத் திட்டமிட்டு அதில் ஒரு கட்டமாக, தாமிர பரணிப் பகுதியில் உள்ள கால் வாய்களில் சீர்த்திருத்தப்பணி நடந்து வருகிறது. அதே போல், தஞ்சை மாவட்டத்துக்

கால்வாய்களைச் சீர்படுத்த ஒரு வரைவுத் திட்டம் உலக வங்கியினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தும்கூட, மத்திய அரசின் அனுமதி அதற்கு இன்னும் கிடைத்தபாடில்லை.

உற்பத்தியைப் பெருக்குமாறு நாம் விடுத்த வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து ஆக்கமளித்த உழவர் பெருமக்கள் அனைவரும் நன்றிக்குரியவர்கள். விவசாயிகளின் முயற்சி, விவசாயத் தொழிலாளர்களின் உழைப்பு, அரசு அளித்த உதவி இவைகளின் காரணமாக உணவுப் பொருட்களுக்கு வெளியாரை எதிர்நோக்கியிருந்த நிலை முற்றிலும் மாறி, 1970-71-ல் உணவுப் பொருள் வழங்கும் நிலையில் பிறர்க்கு உதவிடும்




பெருமையினைப் பெற்றுள்ளோம். 1967-68-ல் நமது உணவு உற்பத்தி 57·72 லட்சம் டன்னாக இருந்ததற்கு மாறாக, 1970-71ல் 70·03 லட்சம் டன் அளவுக்கு அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டிற்கான நமது குறிக்கோள் அளவு 73 லட்சம் டன்னாகும்.

இந்நிலைக்கு இயற்கையின் ஒத்துழைப்பு மட்டும் தான் காரணமென்று இயம்பிட இயலாது. இயல்பான மழை அளவு, ஆண்டிற்கு 945·7 மில்லி மீட்டர் என்பதாகும். ஆனால், 1967-68, 1968-69, 1969-70 ஆண்டுகளில், சராசரி மழை அளவு 892·5 மில்லி மீட்டராகத் தான் இருந்தது. அதற்கு முந்திய நான்கு ஆண்டுகளில் சராசரி மழை அளவு 947·6 மில்லி மீட்டர் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். 1970-71-ஆம் ஆண்டிலும், மழை அளவு, இயல்பான அளவிற்கும் குறைவானதே. இயற்கையின் ஒத்துழைப்பு பெருமளவுக்கு இல்லாத இச் சூழ்நிலையை எண்ணிப் பார்த்தால் தான் நமது உழவர்களும், உழவுத் தொழிலாளர்களும், அரசும் உணவு உற்பத்தித் துறையில் எய்திய சாதனையின் பெருமை விளங்கிடும். எனவே, உற்பத்தியாளர்களுக்கு இருக்கும் இன்னல்களை உணர்ந்து அதனைத் தவிர்க்கப் பல்வேறு சலுகைகளைச் செய்துவருகிறது, இந்த அரசு.

நகர்ப்புறங்களின் வசதி வாய்ப்புகளை, கிராமப்புறத்து மக்கள், ஒரு காலக் கட்டத்திற்குள் பெற்றிட வேண்டுமென்னும் குன்றா ஆர்வத்துடன் செயல்படும் இந்த அரசு, வெகு விரைவில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளியும், மின் வசதியும் கிடைத்திட முயற்சிகள் மேற்கொண்டிருப்பதை இந்த அவை அறியும். நமது மாநிலத்தில் மொத்தம் உள்ள 57,678 கிராமங்களிலும், சிற்றூர்களிலும், 1966-67 முடிய மின் வசதி செய்யப்பட்டவை 25,129 கிராமங்களும், சிற்றூர்களும் ஆகும். 1967-68 முதல் 1970-71 முடிய 17,100 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும், மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. 1971-72-ல் மேலும் 9,000 கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கத் திட்டமிட்டுள்ளோம். 1970-71 முடிய 5·3 லட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 1971-72-ல் 60,000 விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும். கிராம மின் வசதித் திட்டங்களுக்கான நிதிகளும், மூலப் பொருட்களும் கிடைப்பது பெரிதும் இடர்ப்பாடாக உள்ளது. வேளாண்மைக்குக் குறைவான மின் கட்டணம் நாம் விதிப்பதின் காரணமாக இத்திட்டத்தின் மூலம் நமக்குரிய ஆதாயம் கிட்டவில்லை என்பதால், நிதி வழங்கும் நிறுவனங்களும் நமது திட்டங்களுக்கு உதவிட முன்வரவில்லை. இவ்வளவு நெருக்கடிக் கிடையே இந்த ஆண்டு இறுதிக்குள் வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, மதுரை, திருநெல்வேலி, நீலகிரி, கோவை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன். ஏற்கனவே மின் வசதி முற்றிலும் பெற்றுவிட்ட சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்கள் உட்பட, மாநிலத்திலுள்ள 14 மாவட்டங்களில், 9 மாவட்டங்கள் இவ்வாண்டு இறுதிக்குள் முழுமையாக மின் வசதி பெற்றுவிடும்.

தொழிற்சாலைகளைப் பரவலாக ஏற்படுவதை ஊக்குவிக்கும் வகையிலும், தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளை வளர்ச்சியுறச் செய்யவும் அ[illegible] பல்வேறு முடிவுகளை எ[illegible]துள்ளது. பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்படும் தொழிற்சாலைகளுக்கு, நிதி நிறுவனங்களிடமிருந்து சலுகைகள் அளிக்கும் திட்டம் ஒன்று, மத்திய அரசினால் வகுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் சலுகை பெறும் மாவட்டங்களாக, நம் மாநில அரசின் வலியுறுத்தலின் பயனாக, எட்டு மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவை தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், தர்மபுரி, கன்னியாகுமரி ஆகியனவாகும். இராமநாதபுரம், முதுகுளத்தூர், சிவகங்கை, பரமக்குடி, திருவாடானை, திருப்பத்தூர், வேலூர், ஆலங்குடி, குளத்தூர், திருமயம் ஆகிய தாலுகாக்களில், ரூ. 50 லட்சத்திற்கு மேற்படாத முதலீடு உள்ள புதிய தொழிற்சாலைகளின் மூலதனச் சொத்துக்களின் பத்தில் ஒரு பங்கை, நேரடி மானியமாக மத்திய அரசு கொடுக்கும் மற்றொரு திட்டமும் செயல்படுத்தப்படும். இத் திட்டங்கள் தவிர, மாநில அரசின் முழுப் பொறுப்பில், தொழில் துறையில் முன்னேற்றமடையாத 40 வட்டங்களில் நிறுவப்படும் தொழில்களுக்கு மின்சாரக் கட்டணச் சலுகைகளும் அளிக்கப்படும். அதன் காரணமாக ஏற்படும் நட்டத்தை மாநில அரசே ஏற்கும்.

இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவும் நோக்குடன்; சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் (Small Industries Development Corporation)

ஒன்றை அரசு நிறுவியுள்ளது. இக் கழகம், சிறு தொழிலதிபர்களுக்கு நிதி உதவியையும் மூலப் பொருள்களையும் நல்கும். அரிதாகக் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களை, ஒரு கோடி ரூபாய் அளவுக்கு, கையிருப்பில் வைப்பதற்கான மூலப்பொருள் கிடங்குகளுக்கு, இக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இம் மாநிலத்தில் வணிக வங்கிகளால் சிறு தொழில்களுக்கு வழங்கப் பட்ட கடன், 1968 ஜூன் மாதத்தில் ரூ. 26·21 கோடியாக இருந்தது. 1970 மார்ச்சில் ரூ. 49·45 கோடியாக உயர்ந்தது. தமிழ் நாட்டுத் தொழில் முதலீட்டுக் கழகத்தின் பணிகளையும் நாம் விரைவுபடுத்தியுள்ளோம். சிறு தொழில்களின் மூலதனத் தேவைகளில் 75 சதவீத அளவு வரை இக் கழகம் வழங்கும். இம் மாநிலத்தில் 1967-68-ல் இருந்த சிறு தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை 13,571 ஆகும். 1970-71-ல் அவற்றின் எண்ணிக்கை 22,899 ஆக உயர்ந்தது. வரும் ஆண்டுகளில் மேலும் பல சிறு தொழில் நிலையங்கள் நிறுவப்படுவதை நாம் முனைந்து ஊக்குவிப்போம்.

நீண்டகாலப் பயன் விளைவுடைய மற்றுமொரு வளர்ச்சிப் பணி, தமிழ் நாட்டிற்கென, மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (State Industrial promotional Corporation of Tamil Nadu) ஒன்றை நிறுவியுள்ளதாகும். இம் மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் ரூ. 5 கோடியளவிற்கு அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்துடன் நிறுவப்பட்டுள்ளது.

பெருந் தொழில்களைப் பொறுத்தமட்டில், தூத்துக்குடியில் கூட்டுத் துறையில் (Joint Sector) நிறுவப்படவிருக்கிற ரூ. 62 கோடி உரத் தொழிற்சாலைத் திட்டத்திற்கான மூலப் பொருளான நாப்தாவை வழங்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது குறித்து, நாம் உண்மையில் பெருமைப் படலாம். இதற்கு மேலாக, உரத் தொழிற்சாலைக்குத் தொடர்பாக கன நீர்த் (Heavy Water) தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக இந்திய அரசு ரூ. 20 கோடி முதலீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலைக்கான நிதி வசதிகளுக்கு அணுசக்தி ஆணைக்குழு (Atomic energy Commission) பொறுப்பேற்கும். நாளொன்றுக்கு 1,100 டன் அமோனியாவும், 1,600 டன் யூரியாவும் உற்பத்தி செய்யவிருக்கும் தூத்துக்குடி உரத் தொழிற்சாலை, ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சாலைகளில் ஒன்றாக இருக்கும். இந்தக் கூட்டுத் துறைத் திட்டத்தின் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

சேலம் உருக்காலை குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இந்தத் துறையின் மத்திய அமைச்சர் காட்டும் ஆர்வம் போற்றத்தக்கதாயினும் அதன் பொருள் கலவை (product mix) பற்றி இந்திய அரசு இறுதி முடிவினை விரைவிலே செய்து, இத்தனை ஆண்டு ஏற்பட்ட காலதாமதம் போதும், இனியும் வேண்டாம் அந்தத் தாமதம் என்று கூறி விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசினரை வலியுறுத்துகிறேன்.

சிகரெட்டுகள், சோடியம் ஹைடிரோ சல்பைட், டயர், ட்யூப் பொருட்கள், பி.வி.சி. தூள், சோடா மாவு, அமோனியம் குளோரைடு போன்ற பொருள்களைத் தயாரிப்பதற்குத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் மூலம் அரசு ஒப்புதல் கடிதம் பெற்றுள்ளது. இத் தொழிற்சாலைகள் கூட்டுத் துறையில் (Joint Sector) அமைக்கப்படும். இத் துறையில், சதர்ன் அக்ரிபரேன் (Southern Agrifurane) தொழிற்சாலை நான்கு கோடி ரூபாய் முதலீடு செய்து, லைசின் என்னும் பொருளையும், பர்புரால் என்ற பொருளையும் உற்பத்தி செய்யும். இத் தொழிற்சாலை கடலூரில் நிறுவப்படும். தனியார் துறையில் மேலும் பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வருகின்றன என்பதை இம் மாமன்றம் அறியும். மணலிக்கு அருகில், நைலான் இழையைத் (Nylon cord) தயாரிக்க எட்டரைக் கோடி ரூபாய் செலவில், ஒரு தொழிற்சாலையை நிறுவ, டெல்லி துணி ஆலைக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. கரிக் கறுப்பு (Carbon Black) தயாரிப்பதற்காக கமானி சகோதரர்கள் மணலியில் தங்களது இரண்டு கோடி ரூபாய் தொழிற்சாலையின் வேலையைக் கூடிய சீக்கிரத்தில் தொடங்கவிருக்கின்றனர். பாலியெஸ்டர் இழைகளைத் தயாரிப்பதற்காக இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் நிறுவனத்தார் ஏற்கனவே வேலைகளைத் தொடங்கிவிட்டனர்.

எண்பது கோடி ரூபாய் மூலதனமுள்ள பெட்ரோ கெமிகல் (Petro—chemical) தொழிற்சாலையையும், பாலிதீன், பிளாஸ்டிக், பாலியெஸ்டர்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பிரிவுகளையும் நிறுவுவதற்கான ஒப்புதல் கடிதத்தை அளிக்குமாறு மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி வருகிறது என்பதையும், இம் மன்றம் நன்கு அறியும். நைலான் இழைகள், அலுமினிய அணுத் தூள், பசை, போரக்ஸ், போரிக் அமிலம் முதலியவற்றைத் தயாரிக்க அனுமதி வழங்கவும் மத்திய அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு உரிமங்கள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதமும், தொழில்வளம் பெருக மாநில அரசுக்கு இயலாத நிலையில் அதன் கைகள் கட்டப்பட்டிருப்பதும், ஈண்டுக் கூர்ந்து கவனிக்கத் தக்கவையாகும். இந்த இடர் நீங்கின், ஏற்றமிகு தொழிலகமாகத் தமிழகம் செழிக்கும்.

தொழில் வளமும், வேளாண்மை வளர்ச்சியும் தொடர்புகளும் விரிவடைந்திட, சாலைப் போக்குவரத்துகளின் இன்றியமையாமையை உணர்ந்து இந்த அரசு திட்டங்களைத் தீட்டுகிறது. சாலைகளைப் பேணுவதற்கு 1967-68-ல் ஒதுக்கப்பட்டிருந்த ரூபாய் 565 லட்சம்; அது 1971-72-ல் 686 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர, 1971-72-ல், ரூபாய் 100 லட்சம் மதிப்புள்ள புதிய திட்டங்களும் மேற்கொள்ளப்படும். புதிய சாலைப் பணித் திட்டங்களை நிறைவேற்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள் அளிக்க ரூபாய் 110 லட்சம் ஒதுக்கப்படும். இந்திய அரசிடமிருந்தும், மத்திய சாலை நிதியிலிருந்தும், நிதி ஒதுக்கங்களைப் பெற்று, தேசிய நெடுஞ்சாலைகளுக்காக 1971-72-ல் 619 லட்சம் ரூபாய் செலவிடக்கூடும். 630 லட்ச ரூபாய் மதிப்பீட்டுத் தொகையுள்ள பாம்பன் பால வேலைகளை இவ்வாண்டில் தொடங்க, மத்திய அரசின்

ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளோம்.

சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து, மூட நம்பிக்கை, பழங்கால வழக்கங்கள் அகன்று, அறிவொளி பாய்ச்சிட வல்லது கல்வி வாய்ப்பேயாகும். அந்த அடிப்படையில், கல்விக்காக 1967-68-ல் ரூ. 53·56 கோடியளவில் இருந்த நிதி ஒதுக்கீடு, 1971-72-ல் ரூ. 81·84 கோடியாக உயர்ந்துள்ளது. ரூ. 1·47 கோடிச் செலவில், 6,500 புதிய ஆசிரியர்களை வேலையில் அமர்த்துவதற்கு நாம் வகை செய்திருக்கிறோம். இதற்கு மேலாக, தொழில்-பயில் ஆசிரியர் (Apprentice teachers) திட்டத்தின் கீழும் 6,500 ஆசிரியர்கள் தொடர்ந்து வேலைசெய்து வருவர். தொடக்கப் பள்ளிகளைக் கட்டுவதற்காக, பல தலைப்புகளின்கீழ், நிதி மதிப்பீடுகளில் மொத்தம் ரூ. 1·22 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வருகிற ஐந்தாண்டுகளுக்குள்ளாக, எல்லாத் தொடக்கப் பள்ளிகளுக்கும் கட்டடம் அமைந்திட நாம் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம்.

பயிற்று மொழித் திட்டம் பற்றி ஆய்வு செய்த லட்சுமண சாமி முதலியார் குழுவின் அறிக்கையினை அவையினர் அறிவர். அதற்கேற்ப அரசு நடவடிக்கை மேற்கொண்டதோடு, தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொள்ளும் மாணவர்களுக்கு, புகுமுக வகுப்பில் புத்தகங்கள் வாங்குவதற்கு, ஆண்டு ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு 50 ரூபாய் வீதமும், பட்டப் படிப்பு வகுப்புகளில் படிக்கும் மாணவர் ஒருவருக்குக் கல்லூரிக் கட்டணத்துக்காக ஆண்டு ஒன்றுக்கு 180 ரூபாய் வீதமும் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இம் மாநிலத்தில் மருத்துவ வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன. நிதி வாயில்கள் போதிய அளவிற்கு இல்லாவிடினும், மருத்துவ, பொதுச் சுகாதாரத் திட்டங்கள் குறித்த நிதி ஒதுக்கத்தை, 1967-68-ல் ரூ. 17·89 கோடியிலிருந்து, நடப்பு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 33·20 கோடியாக உயர்த்தியுள்ளோம். இதற்கும் மேலாக, நகர்ப்புற-கிராமப்புற மருத்துவ மனைகளுக்கான கட்டடத் திட்டங்களுக்காக, பரிசுச் சீட்டு நல நிதியிலிருந்து 75 லட்சம் ரூபாய் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம், தூத்துக்குடி, அருமனை, பண்ணுருட்டி, கீழ்நிலை, கருப்பம்பலம், பண்ணைக்காடு, அரக்கோணம், ஹோசூர் ஆகிய இடங்களில், மருத்துவ மனைகளுக்குக் கட்டடங்கள் கட்டும் பணிகள் வரவு-செலவுத் திட்டத்தில் அடங்கியுள்ளன.

திண்டுக்கல்லிலும், மதுரையிலும் கண் நோய்த் துறைகள்; ஈரோட்டில் மார்பு நோய் தனி மருந்தகம்; அரசிதழ்ப் பதிவு பெருத அரசுப் பணியாளர்களுக்கென உதகமண்டலத்திலும், நாகர்கோயிலிலும் இரண்டு சிறப்பு மருந்தகங்கள் தொடங்கப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி, காஞ்சீபுரம், வேலூர், சேலம், நாகர்கோயில், உளுந்தூர்ப்பேட்டை, தென்காசி, தோப்பூர் ஆகிய இடங்களில் கூடுதல் இட வசதிகள் செய்யவும், கூடுதலாக 205 செவிலியர்களை, தேவைப்படும் மருத்துவ மனைகளில் நியமிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை நிறுவும் பணி, 1971-72-ஆம் ஆண்டில் முற்றுப்பெறும்.

இவ்வாறு இயங்கி வரும் ஆரம்பச் சுகாதார நிலையங்களில், மேலும் 75 நிலையங்களுக்கு நிரந்தரமான கட்டடங்கள் கட்டித் தரவும் வகை செய்யப்பட்டுள்ளது. பல்வேறு மருத்துவக் கல்லூரிகளிலும் மேம்பாடு செய்வதற்கு ரூ. 76·12 லட்சம் நிதி ஒதுக்கமும் இவ்வாண்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. வேலையின்மையைப் போக்குவதற்காக, மருத்துவக் கல்லூரி இணைந்திராத மருத்துவ மனைகளில், 50 கூடுதலான உதவி மருத்துவர் பதவிகளை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இவை தவிர, முன்னோடித் திட்டம் என்ற முறையில் 100 மருத்துவப் பட்டதாரிகளுக்குத் திங்களொன்றுக்கு ரூ. 250 பயிற்சி உதவித் தொகைக்கு உத்தரவாதமளிக்கும் திட்டத்தைக்கொண்டுவர, அரசு கருதுகிறது. பல்வேறு மருத்துவ மனைகளில் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய முறையான காலியிடங்கள், இப் பயிற்சி பெற்றவர்களிலிருந்து நிரப்பப்படும்.

மருத்துவப் பட்டதாரிகளிடையே நிலவும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்த அரசு கொண்டுள்ள அக்கறையின் ஓர் அடையாளமாக இந்த நடவடிக்கை அமைகிறது.

பரந்து கிடக்கின்ற பல்லாயிரம் கிராமங்களிலும், பட்டினக் கரைகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் அளிப்பது என்பதை, நோயற்ற வாழ்விற்கான அருமருந்தாகக் கருதி, இந்த அரசு, வேகமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றக் குடிநீர் வாரியம் ஒன்றை அமைத்துள்ளது. சென்னை நகர் நீங்கலாக குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான செலவு 1967-68-ல் 127 லட்சம்; 1971-72-ல் அச்செலவு 745 லட்சமாக ஆக்கப்பட்டுள்ளது. சென்னைக்கு வீராணம் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம், 1971-72-ல் 772 லட்சம் ரூபாயாக இருக்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளில், கிராமப்புறக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 438 லட்சம் செலவிட்டுள்ளோம். இது தவிர, வறட்சி நிவாரணக் காலத்தின்போது, குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு 1969-70-ல் நாம் செலவு செய்த 560 லட்சம் ரூபாயைத் தனியாகக் கணக்கில் கொள்ளவேண்டும்.

இந்த ஆண்டு, கிராமக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு 164 லட்சம் ரூபாய் செலவிடப்படும். எல்லா ஊராட்சி ஒன்றியங்களும் தங்களுக்குக் கிடைக்கும் நீர் வசதியைப் பயன்படுத்திக் குழாய் மூலம் குடிநீர் வழங்க ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று வகுக்கப்படும். குடிநீர் தட்டுப்பாடும் தொத்து நோயும் கொண்ட கிராமங்களில் ஐந்தாண்டிற்குள் 8,850 குழாய்க் கிணறுகளை அமைக்க யூனிசெஃப் (UNICEF) நிறுவன உதவியுடன் நாம் உருவாக்கியுள்ள தனிச் சிறப்பு வாய்ந்த திட்டம் ஒன்றினையும் இங்குக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இதற்கென ரூபாய் 271 லட்சம் செலவாகும். இந்த ஆண்டிற்கு மட்டும் 55 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து 1,770 குழாய்க்கிணறுகள் தூய குடிநீருக்காகக் கிராமங்களில் அமைக்கப்படும்.

இந்தப் புதிய அரசு, தொழிலாளர் நல அரசு என்ற திருப்

பெயருடனேயே தொடங்கிற்று. அதற்கேற்ப, அவர்கள் நலனுக்கென, அரசு, தொழிலாளர் நல நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந் நிதிக்குத் தொடக்கத்தில் 5 லட்சம் ரூபாய் அரசினரால் வழங்கப்பட்டுள்ளது. தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டம் இவ்வரசினால் செவ்விய முறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டத்திற்கு ஆகும் செலவில், இம் மாநிலத்திற்குத் தரப்படும் பங்கு அளவிற்கு மேல், ரூபாய் 112 லட்சம் கூடுதல் செலவு செய்துள்ளது. இந்திய அரசிடமிருந்து இதற்கு இணையாக உதவித் தொகை கிடைக்காதபோது, தொழிலாளர் நலனைக் கருதியே, அரசு இத் திட்டத்தின்கீழ் கணிசமான அளவிற்குச் செலவு செய்து வருகிறது. இத் திட்டத்தின் வாயிலாக, இப்போது தொழிலாளர்களும் அவர்கள் குடும்பத்தினருமாக மொத்தம் 15 லட்சம் பேர் பயன் பெற்று வருகின்றனர். சென்னை மாநகரிலும், கோவை, மதுரை, கோயில்பட்டி ஆகிய இடங்களிலும், மருத்துவ மனைகளில் சேர்த்துக்கொண்டு சிகிச்சை அளிப்பது உட்பட, முழு மருத்துவ நன்மைகளும் இந்தத் திட்டத்தின்கீழ் இப்போது அளிக்கப்பட்டு வருகின்றன.

தொழில் தகராறுகளைப் பொறுத்த வரையில், அத்தகராறுகளைத் தீர்த்து வைக்க வசதி செய்வதே, தொடர்ந்து அரசின் கொள்கையாய் இருந்து வருகிறது. தொழில் தகராறுகளைப் பொறுத்தவரை, தொழிலாளர்களுக்குப் பரிவு காட்டும் அதே நேரத்தில், தொழில் துறை உற்பத்தி குலையாமல் பார்த்துக் கொள்வதும், தொழில் நிர்வாகிகளின் நியாயமான நலன்கள் பாதுகாக்கப்படுவதும், நமது கொள்கையாக எப்போதும் இருந்து வந்துள்ளது. இம் மாநிலத்தில், தொழிலாளர்களுக்கும் தொழில் நிர்வாகத்தினருக்கும் இடையே இணக்கமான நல்லுறவுகள் நிலவிட, கடமையைச் செய்பவர்களுக்கு உரிமையைப் பெற்றுத் தருவதிலும், உரிமை கேட்பவர்களுக்குக் கடமையை உணர்த்துவதிலும் இந்த அரசு பொறுப்புடன் செயல்பட்டு வருகிறது.

1961-62-ல், அரிசன நலம் குறித்த நிதி ஒதுக்கம் ரூ. 267 லட்சமாக இருந்தது ; இப்போது பேரவை முன் வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் ஏறத்தாழ ரூ. 700 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரிசன நலத் திட்டங்கள் பெரும்பாலானவற்றிற்கு மத்திய உதவி நிறுத்தப்பட்டு விட்டபோதிலும், மேலே குறிப்பிட்ட அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்துள்ளோம்.

அரிசனங்களுக்குக் கல்வி நிலையங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் ஒதுக்கப்படும் இடங்களை 16 சத வீதத்திலிருந்து 18 சத வீதமாக உயர்த்துவதென்று அரசு அண்மையில் முடிவுசெய்துள்ளது. ஒன்பதாம் வகுப்பு முதல் பதினொன்றும் வகுப்பு வரை பயிலும் அரிசன, பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கு, சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம், வேளாண்மை போன்ற தொழிற்பாட முறைகளில், அரிசன வகுப்பு மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் கடன்கள் வழங்கும் திட்டம் ஒன்றும், 1971-72 முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிதாக மாணவர் விடுதிகளைத் தொடங்குவதற்காக ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசன மாணவர்களுக்கு உண்டி-உறையுள் மாத உதவித் தொகையாக இதுவரை சென்னையில் வழங்கப்பட்டுவந்த ரூ. 60ஐ ரூ. 70 ஆகவும், பிற இடங்களில் ரூ. 50-லிருந்து ரூ. 55 ஆகவும் இவ்வாண்டு முதல் உயர்த்த அரசு தீர்மானித்துள்ளதை அவையினர் வரவேற்பார்கள். இந்த அரசு, சென்ற ஆண்டு காந்தியடிகள் நினைவு உதவிச் சம்பளத் திட்டம் கொண்டுவந்ததை இம் மாமன்றத்தினர் அறிவர். அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும், கல்லூரிப் புகுமுக வகுப்பில் மிக உயர்ந்த மதிப்பெண்கள் வாங்கியுள்ள இரண்டு அரிசன மாணவர்களுக்கு, ஒவ்வோராண்டும் பத்துத் திங்களுக்குப் படிப்பு உதவிப்பணம் கிடைக்கும். அரிசன, பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கு, பட்ட மேற்படிப்புக்காக வழங்கப்படும் படிப்பு உதவிச் சம்பளங்களின் எண்ணிக்கைமீது தற்போதுள்ள வரையறைகள் நீக்கப்பட்டுள்ளன. தீண்டாமை ஒழிப்புக்கு எதிராகக் குற்றம் புரிவோரைத் தடுப்பதற்கு வட்ட, மாவட்ட, மாநில அளவில் குழுக்கள் அமைத்திடவும், குற்றம் புரிவோரைக் கடுமையாகத் தண்டிக்கவும் இந்த அரசு தீவிர நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள இருக்கிறது.

அரசு அமைத்திட்ட பின்தங்கியோர் நலக் குழுவின் பரிந்துரைகளை, நமது நிதி நிலையை ஒட்டிப் படிப்படியாக ஆய்ந்து நிறைவேற்றுவதில் நாம் தீவிரம் காட்டி வருகிறோம் என்பதற்கேற்ப, இத்துறைக்கு 1961-62ல் ஒதுக்கப்பட்ட ரூ. 97 லட்சத்துக்கு மாறாக, 1971-72 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 442




லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1967-68-க்கும், 1971-72-க்கும் இடையிலேயே 2·8 கோடி ரூபாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கென 1971-72-ல், 50 மாணவர் விடுதிகள் தொடங்கப்படும்.

அரசினர் மாணவர் விடுதிகளில் தங்கியுள்ள பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் இரண்டு சீருடைத் தொகுதிகள் வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல், விடுதிகளில் தங்கும் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு உணவுக்கான செலவு வரம்புகள் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் உண்டி-உறையுள் மாத உதவித் தொகையை, சென்னையில்

ரூபாய் 40-லிருந்து ரூபாய் 60 ஆகவும், மற்ற இடங்களில் ரூபாய் 35-லிருந்து ரூபாய் 50 ஆகவும், இவ்வாண்டு முதல் உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது. சலவைத் தொழிலாளர்களுக்கும் முடிதிருத்துபவர்களுக்கும் இலவசமாகத் தொழில் புரிவதற்கான கருவிகள் வழங்கப்படும். மாவட்டத்திற்குச் சுமார் 100 பேராக, 1,000 பேர் ஆண்டுதோறும் இத் திட்டத்தினால் பயனடைவர். இதுவன்றி, பின்தங்கியோர் நலனுக்கெனக் கல்வி நிலையங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் ஒதுக்கப்படும் இடங்களை 25 சத வீதத்திலிருந்து, 31 சத வீதமாக உயர்த்தவும் அண்மையில் அரசு முடிவு செய்தது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற இலட்சியப் பயணத்தின் மற்றொரு கட்டமாக அமைந்ததுதான், குடிசை மாற்று வாரியம். 1969-70 ஆம் ஆண்டில் குடிசைப் பகுதி மாற்றுப் பணிகளுக்கான செலவு, 75 லட்சம் ரூபாயாக இருந்தது. இத் திட்டத்திற்காக, 1971-72 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை 4 கோடி ரூபாய் அளவில் உயர்த்த அரசு முயற்சி எடுத்து வருகிறது. இந்த ஆண்டில் 10,000 இருப்பிடங்கள் (Tenements) கட்டி முடிக்கப்படும். 1967 முதல் 1971 வரை நான்காண்டுக் காலத்தில், 7,722 இருப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; அத்துடன் 2,300 தீப்பிடிக்காத இல்லங்களும் உருவாக்கப்பட்டன. நம் நாடு விடுதலை அடைந்ததிலிருந்து 1967 வரையில், 4,155 இருப்பிடங்களே கட்டப்பட்டன என்பதை நினைவு கூர்ந்தால், இந்த அரசு குடிசைப் பகுதி மக்களின் வாழ்வில் ஒளி விளக்கேற்றி வைக்கவேண்டுமென்பதற்காக எடுத்துள்ள சீரிய முயற்சியின் சிறப்புத் தெள்ளென விளங்கும். முன்னுரிமை வரிசைத் திட்டம் ஒன்றை வகுத்துக் கொண்டு எந்தெந்தக் குடிசைப் பகுதிகளை மாற்றியமைப்பது எனத் திட்டமிட்டு அந்த வரிசைப்படி வேலைகளைத் தொடங்க முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் மட்டுமின்றி கிராமப் பகுதிகளிலும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைகளை ஒப்படை செய்வதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாய் இருந்து வருகிறது. 1969 ஜூன் முதல் 1970 மார்ச் வரை, ஏழையெளியவர்க்கு 93,472 வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டன. 1970 ஏப்ரல் முதல் 1971 ஜனவரி வரை, 1,36,000 வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன. எனவே இதுவரை ஏறக்குறைய 2,30,000 ஏழை மக்களுக்கு வீட்டுமனைகள் சொந்தமாக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வாழும் இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களின் வறுமையை விரட்டிட, இந்த அரசு, நிலச் சீர்திருத்தச் சட்டங்களைத் தீவிரமாக அமல் நடத்துவதிலும் புதிய சட்டங்களை உருவாக்குவதிலும் தொடர்ந்து அக்கறை காட்டி வருகின்றது. தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு, கூலி நிர்ணயச் சட்டம் கொண்டு வந்தது நினைவுகூரத்தக்கது. ஏழ்மையில் வாடிடும் இந்த விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பதற்கு மனையிடம் வழங்கிடுவது நமது கடமையாகும். இவர்கள் தற்காலம் குடியிருந்துவரும் மனையிடங்களிலிருந்து, அல்லது குடிசைகளிலிருந்து வெளியேற்றுவதைத் தடுக்கவும், அந்த இடங்களை அவர்களுக்கே சட்டபூர்வமாகச் சொந்தமாக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் வாழும் விவசாயத் தொழிலாளர்களின் அல்லலை உணர்ந்தவர்கள் இத் திட்டத்தின் பயனை நன்கு உணர்வார்கள்.

விவசாயத் தொழிலாளர்கள், தாங்கள் விவசாயம் செய்யும் நிலங்களுக்கு அருகாமையில் குடியிருப்பதில் இருந்து வெளியேற்றுவதை அனுமதித்தால், வேளாண்மைத் துறையினுடைய உற்பத்தியைப் பாதிக்கும் என்பதையும், ஏழைத் தொழிலாளருடைய நிம்மதியான வாழ்வு சீர்குலையுமென்பதையும், மன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இதைத் தடுத்து நிறுத்தி, ஏழை விவசாயத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். எல்லார்க்கும் வீடு என்கிற நமது இலட்சியப் பயணத்தின் ஒரு கட்டமுமாகும் இம் முயற்சி.

சாகுபடிக்கென நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு, 1967 முதல் 1971 மார்ச்சு முடிய 2,02,246 பேர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது இந்த அரசின் சோஷலிசக் கொள்கைக்கு மற்றுமோர் எடுத்துக் காட்டாகும். காடுகள் என்ற பெயரில், உண்மையில் காடுகள் அல்லாத பகுதிகளில், நிலமற்ற ஏழைகளுக்குத் தந்திடுவோம் என அறிவித்ததற்கிணங்க, இந்த ஆண்டு 50,000 ஏக்கரா பரப்பளவுள்ள காட்டு நிலங்கள், அதன் தரத்திற்கேற்றவாறு, மூன்று முதல் ஐந்து ஏக்கரா வரை, ஒவ்வொரு நிலமற்ற ஏழை விவசாயிக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்பதைப் பூரிப்புப் பொங்கிட இந்த மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

இந்திய அரசு அறிவித்துள்ள கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் தமிழகத்தில் 15,000 பேர்களுக்கே பயனளிக்கின்றது. மக்கள் தொகை, வட்டாரம், இவையிரண்டின் அடிப்படையில் இல்லாமல் மாவட்டங்களின் அடிப்படையில் நிதி உதவியினைப் பகிர்ந்தளிப்பதால், இம் மாநிலத்திற்குக் கிடைக்கவேண்டிய நிதி ஒதுக்கம் கிடைக்காமல் போய்விட்டது.

வட இந்திய மாநிலங்களில், இந்த மாவட்ட அடிப்படை அவற்றிற்குச் சாதகமாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் அந்த அடிப்படை பொருந்தாது. ஏனெனில், இம்மாநிலத்தில் மாவட்டங்கள், எண்ணிக்கையில் சிறுத்தும் பரப்பளவில் பெருத்தும் உள்ளன. எனவே, பத்தொன்பது மாநிலங்கள் கொண்ட இந்திய நாடு முழுவதற்கும் ரூபாய் 50 கோடியைப் பகிர்ந்தளிக்கையில், தமிழகத்திற்கு ரூபாய் 1·6 கோடி மட்டுமே கிடைத்துள்ளது.

இதை மறு ஆய்வு செய்யுமாறும், மாவட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அல்லாமல், வட்டாரங்களின் அடிப்படையில் தொகை ஒதுக்கித் தருமாறும், தலைமை அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம். நமது முறை

யீட்டின் முடிவு எவ்வாறாயினும், அது வரையில் காத்திருந்து காலம் கடத்தாமல், மேலும் பலர் இத்திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்புப் பெறுவதற்காக இவ்வரசு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் ஒதுக்குவதென முடிவு செய்துள்ளோம். அப்போது தான், ஒவ்வொரு மாவட்டத்திலும் மேலும் 10 வட்டாரங்களை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர முடியும். இதன் வாயிலாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 வட்டாரங்களில் இந்த வேலை வாய்ப்புத் திட்டம் விரிவாக்கப்பட்டு, தமிழகக் கிராமப் பகுதிகளில் மொத்தம் 30,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.

படித்தவர்களிடையே வேலையின்மையைப் போக்குவதும் ஒரு நல்ல அரசின் திட்டமாக இருந்திடல் வேண்டும். படித்தவர்களுக்கு வேலை அளிப்பதில், சில இடர்ப்பாடுகள் உள்ளன. அவர்களில் பலர் சிறப்புப் பயிற்சி பெற்றிருப்பதால், குறிப்பிட்ட வேலைகளில் அன்றி, வேறு வேலைகளில் அவர்களை அமர்த்த முடியாத நிலை ஏற்படுகின்றது. பொறியாளர்களைப் பொறுத்த வரையில் 2,400 பேருக்கு வேலை பழகும் சிறப்புத் திட்டத்தையும், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 6,500 பேருக்கு வேலை பழகும் திட்டத்தையும் உருவாக்கி, இரு சாராருக்கும் வேலை வாய்ப்பளிக்கச் சுமார் 140 லட்ச ரூபாய்ச் செலவில், வேலைத் திட்டம் ஒன்றை இந்த அரசு நிறைவேற்றியுள்ளது.

வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதில் மேலும் ஒரு கட்டமாக, தமிழ்நாடு காவலர் படையில் ''முதல் நிலைக் காவலர்'' (Grade I Constable) என்கிற புதிய பதவி ஒன்றினை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய தரத்தில் 2,000 பதவிகளை ஏற்படுத்தி, அவைகளில் பள்ளி இறுதி வகுப்பில் தேறியுள்ள தகுதியுள்ள இளைஞர்கள் நேர்முகமாக 1,000 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவதோடு, இலாகாவில் ஏற்கனவே பணியாற்றுபவர்களில் மேற்கண்ட தகுதியுடையோராயிருப்பின் பதவி உயர்வு பெற்று 1,000 பேரும் நியமிக்கப்படுவர். காவலர்கள் நிலையில்தான், காவற்படைக்கும் பொது மக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. இந்த நிலையில், காவற்படைக்குப் படித்த இளைஞர்களை நியமிப்பது இன்றியமையாததென்றும், காவலர்கள் பொது மக்களிடம் மரியாதை, பரிவு, உதவியளிக்கும் மனப்பாங்கு இவற்றுடன் பழகும் வகையில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படவேண்டுமென்றும் கருதுகிறோம். காவலர்களுக்குப் பொதுவாகவும், சிறப்பாகவும் உள்ள கடமைகளை அவர்கள் மேலும் நல்ல முறையில் உணர்ந்து, உரிய காலத்தில் அவற்றை நிறைவேற்றவும் வேண்டும். எனவே, பள்ளி இறுதி வகுப்பில் தேறி, இப் புதிய பதவித் தரத்துக்கு நியமிக்கப்படவிருப்பவர்கட்கு, இப்போது உதவி சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு எந்த



அளவில் பயிற்சியளிக்கப்படுகிறதோ, அதே அளவில் பயிற்சி அளிக்கப்படும். காவலர்கள் பெறுவதற்குரிய பிற நலன்களும் இவர்களுக்கு வழங்கப்படும். மற்றும், இவர்களுக்கெனத் தனியே சீருடையும் வழங்கப்படும். முக்கியக் காவல் நிலையங்களுக்கு இவர்கள் அனுப்பப்பட்டு, வழக்குகளைத் துப்புத் துலக்குவதிலும், வழக்குகள் தொடர்வதிலும், அறிவுநுட்பம், திறமை இவற்றைப் பயன்படுத்தி நிறைவேற்ற வேண்டிய காவல்துறை அலுவல்களிலும் இவர்கள் உதவி புரிவர்.

இதைப் போலவே இன்றியமையாத மற்றொரு திட்டத்தையும் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். தொழில் நுணுக்கப் பள்ளிகளில் பயின்று, தேர்வு பெற்று, வேலையின்றியிருக்கும் தகுதியுள்ள இளைஞர்கள் 3,000 பேர்களுக்கு, ஒவ்வொருவர்க்கும் ரூபாய் 1,000 வீதம் கடன் உதவி அளிக்க இத் திட்டம் வகை செய்கிறது. கிராமங்களில் சிறு அளவில் தொழிற்பணிமனைகளைத் தொடங்குவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தகுதி பெற்ற இளைஞர்களுக்கு நியாயமான வட்டிக்கு இத் தொகை வழங்கப்படும். இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்திவிடத்தக்க இத் தொகை, சுழல்நிதியாகப் பயன்படும். இத்திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயல்படுத்துவர். இதற்கெனப் பரிசுச் சீட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இது தவிர, படித்துப் பட்டம் பெற்றுள்ள இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கப் புதியதோர் திட்டம் ஒன்றை நிறைவேற்றிட அரசு முடிவெடுத்துள்ளது. அந்த அடிப்படையில், சமூகத்தொண்டாற்றுவதற்காக இளைஞர் அணி (Youth Corps) ஒன்று தொடங்கப்படும். இந்த அணியில், கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்றுவரும் 2,000 இளைஞர்கள் சேர்க்கப்படுவர். கல்வி, மருத்துவம், வேளாண்மை, பொறியியல், அறிவியல், கலை போன்ற துறைகளில் பட்டம் பெற்றவர்களிலிருந்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். 50 இளைஞர்களைக் கொண்ட ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவர் இருப்பார். இந்த இளைஞர் அணி, முதற்கண் கிராமப் புறங்களில் ஆக்கப்பூர்வமான சமூகத் தொண்டாற்றுவதற்குப் பயன்படும். இவர்களது அன்றாடச் செலவுகளுக்காக ஒவ்வொருவர்க்கும், மாதம் ஒன்றுக்கு ரூபாய் 175 வழங்கப்படும். இம்மாநிலம் முழுவதிலும் உள்ள பற்பல வட்டத் தலைமை அலுவலகங்களுக்கு இவர்கள் அனுப்பப்படுவர். அங்கிருந்து ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும் சென்று, முதியோர் கல்வி, சுற்றுப்புற சுகாதாரம், குடும்ப நலத்திட்டம், கிராமத்திற்குரிய தேவைகள் உட்பட, மக்கள் நல்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதோடு, தீண்டாமை, சாதி வேற்றுமை, காழ்ப்புணர்ச்சி, சமூக ஏற்றத் தாழ்வுகள், தீய பழக்கவழக்

கங்கள் முதலியவற்றிலிருந்து மக்களை விடுவிக்கவும் அறிவொளிப் பிரச்சாரம் செய்வார்கள்.

இந்த அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மருத்துவ இளைஞர்களுக்கு, கிராம மக்களின் மருத்துவத் தேவைகளைக் கவனித்துக் கொள்வதற்காக இன்றியமையா மருந்துகள் அடங்கிய சிப்பமும் வழங்கப்படும். உழவர்கள் புதிய சாகுபடி முறைகளை மேற்கொள்ளவும், புதிய தொழில் நுட்ப உத்திகளையும், புதிய ரக விதைகளையும் பற்றி அவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் இவ்வணியினர் உதவி புரிவர். இவ்வணியில் சேரும் உறுப்பினர்கள் ஓராண்டுக் காலத்திற்கு மட்டும் பணியாற்றுவர். அரசுப் பணிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது, மற்றவர்களை விட இவர்களுக்குத் தகுதி அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும். இந்த இளைஞர் அணி 2,000 பேருக்கு வேலை தருவது மட்டுமன்றி, புதிய சமூகப் பொருளாதார சமதர்ம யுகத்தைத் தோற்றுவிப்பதில் இம் மாநிலத்திலுள்ள படித்த இளைஞர்களுக்கு நல் வாழ்வு வழங்கும் என்பது என் நம்பிக்கையாகும். இத் திட்டத்திற்குப் பரிசுச் சீட்டு நல நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படும்.

வேலையற்றோர், வாழக் கதியற்றோர், பாதுகாக்கும் பண்பற்ற குடும்பத்தால் கைவிடப்பட்டோர், இரந்து உயிர் வாழ்கின்ற இழிநிலையை நீக்கிடப் பிச்சைக்காரர் மாறுவாழ்வுத் திட்டமொன்றை நமது மாநில அரசு தயாரித்துள்ளது. அறுபதாயிரத்துக்கு மேற்பட்டோர் ஈடுபட்டுள்ள இந்த அவல வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்திட முனைந்துள்ள தமிழக அரசு, இந்த ஆண்டு, முதற்கட்டமாக, ஆறுயிரம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு அடைக்கலம் தந்து சிகிச்சையும் தொழிற்பயிற்சிகளும் அளித்து, அவர்களை ஆறு விடுதிகளில் வாழ்ந்திட வழி வகுத்துள்ளது. இந்த நற்காரியத்திற்கெனத் திரட்டப்படும் நிதிக்கு, வள்ளல்தன்மை வாய்ந்தோரும், மனிதாபிமான மிக்க நடுத்தர, சாதாரண, பாமர மக்களும் வாரி வழங்கி வருகின்றனர். அவர்கட்கு, அரசின் சார்பில், என் ஆழ்ந்த நன்றியை உரியதாக்கிக் கொள்கிறேன்.

இன்றைய அரும்புகள், நாளைய மலர்கள்; இன்றைய மழலைகள், நாளைய நமது மரபு காக்கும் மாண்புறு செல்வங்கள்; அவைகளை அளவோடு பெறுவதும், வளமோடு வாழ வைப்பதும், அரசு, ஆடவர், பெண்டிர், இம்மூவரின் ஒத்துழைப்பின்பாற் பட்டதாகும். பிறக்கும் குழந்தைகள் அளவில் அதிகம் இருக்கக்கூடாது என்று கூறும் அதே சமயத்தில், பிறந்த குழந்தைகளை வலிவு குறையாமல் வளர்க்கவேண்டிய பொறுப்பையும் மறந்திடல் ஆகாது. பிஞ்சு வயதிலேயே சத்து மிக்க உணவைக் குழந்தைகளுக்கு வழங்குவது, அவைகளின் மூளை வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பது வல்லுநர்கள் கண்ட முடிவு. இளம் வயதில் புரதச்சத்து இல்லாமல் வளரும் குழந்தைகள், பிற்காலத்தில் அந்தச் சத்தைப் பெறும் நிலை ஏற்பட்டாலும் உரிய பலன் கிடைக்காது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். எனவே, இளம் தலைமுறையினரின் எதிர்கால வாழ்வின் மேம்பாட்டிற்காக, ஊட்டச் சத்துணவுத் திட்டம் ஒன்றை மத்திய அரசின் உதவியினைப் பெற்று, இந்த அரசு, படிப்படியாக நிறைவேற்றி வருகின்றது. ஏர்க்காடு, கொல்லி மலைப் பகுதிகளிலும், சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளிலும் சென்ற ஆண்டு தொடங்கிய இத் திட்டம், இந்த ஆண்டு, சென்னை, சென்னையைச் சுற்றிலுமுள்ள புறநகர்ப்பகுதிகள், திருச்சி, மதுரை, கோவை மற்றும் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 15 நகர்களிலுள்ள குடிசைப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படும். இதன் பயனாக, 1,35,000 குழந்தைகளின் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையான ஊட்டச்சத்துணவை வழங்குகின்ற பணியினை, ஆங்காங்கு உள்ள பொதுநல நிறுவனத்தினரும், சீரணித் தொண்டர்களும், அரசு அலுவலர்களும், ஏற்றுள்ளனர். இந்தத் திட்டத்தை, வசதியற்ற நிலையில் உள்ள எல்லாக் குழந்தைகளும் பயனடையுமாறு செய்ய, இந்த அரசு பல்வேறு கட்டங்களில் முயற்சிகளை எடுக்கும்.

'' இலமென்று அசைஇ
இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்''

என்னும் பொய்யா மொழிக்கேற்பத் தமிழகத்தின் இயற்கை வளங்கள் அனைத்தையும் ஆராய்ந்து, அதன் பயன்களைப் பெற்றிடவும், பல்வேறு துறைகளில் இது வரை அடைந்துள்ள வளர்ச்சியையும், இனி அடைய வேண்டிய முன்னேற்றத்தையும் சீர்தூக்கி, செழுமியசெயல்முறைக் கருத்துக்கள் தந்திடவும், பத்தாண்டுக் காலத்திற்கான வளர்ச்சித் திட்ட வரைவு ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன், தக்க வல்லுநர்களைக்கொண்டு மாநிலத் திட்டக் குழு ஒன்றினை இந்த அரசு நிறுவியுள்ளது. புதிய பத்தாண்டு வருங்கால வளர்ச்சித் திட்டத்தைத் தீட்டுவதில், தன்னை முற்றிலும் ஈடுபடுத்திக்கொள்கிற இந்தக் குழு தன் வேலைகளை ஜூன் திங்கள் 17-ஆம் நாள் அன்று தொடங்கியுள்ளது.



ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கும் பணிக்கு மாநிலத் திட்டக்குழுவை ஏற்படுத்தியுள்ள அதே நேரத்தில், நிகழ்கால ஆக்கப் பணிகளை மேலும் செவ்விய முறையில் செயல்படுத்துவது இன்றியமையாததாகும். வெற்றி முகட்டிற்கு விரைந்தோடிடப் பந்தயக் குதிரை வேகத்தில் போய்க் கொண்டிருக்கும் இந்த அரசு, காலதாமதம், வீண் விரயம் ஆகியவற்றைத் தவிர்க்க, '' செய்தக்க அல்ல செயக் கெடும் '' எனும்

குறள் மொழி வழி நின்று, ''செய்தக்க செய்யாமையானும் கெடும்'' என்னும் சீரிய கொள்கை போற்றி, தங்கு தடையின்றி எல்லா மக்களுக்கும் பணியாற்றும் பணியைத் தொடர்ந்திட, நிர்வாகச் சீர் அமைப்புக் குழு ஒன்றினை நியமித்துள்ளது. நிர்வாகத் துறைகளில் பல தரப்பட்ட அனுபவமுள்ள அதிகாரிகளையும், பல்லாண்டுக் கால அனுபவம் வாய்ந்த அரசுச் சார்பற்ற உறுப்பினரையும் கொண்ட இக் குழு, அரசின் பல்வேறு நிர்வாக அமைப்புகளையும் நுணுகி ஆராய்ந்து சீரமைப்பிற்கான முறைகளை விரைந்து அரசுக்குத் தெரிவிக்கும். இக்குழுவின் பணிகள் இந்தத்திங்கள் 10-ஆம் நாள் அன்றுதொடங்கப்பட்டுவிட்டன.

1971-72-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள திட்ட அளவு 106.71 கோடி ரூபாய் என்பதை இவ்வவையினர் அறிவர். திட்டக் குழுவிடம் நாம் ஒப்புதல் கேட்டுள்ள குறைந்த பட்சம் ரூ. 575 கோடி அளவுள்ள ஐந்தாண்டுத் திட்டத்துடன் ஒப்பு நோக்கினும், இந்த அளவிலுள்ள ஆண்டுத் திட்டம் போதுமானதாகாது. மாநிலத் திட்டங்களை நிறைவேற்றுவது ஒரு புறமிருக்க, மத்தியத் திட்டத்தில் சேர்க்க வேண்டியதும், நெடு நாள் தயக்கமாக உள்ளதுமான சேதுசமுத்திரத் திட்டம், நெய்வேலி இரண்டாவது சுரங்கப் பணித் திட்டம், தூத்துக்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை போன்ற, இம் மாநிலத்தின் எதிர்காலத்தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான வேலைகளில் நடவடிக்கை எடுப்பதில் இந்திய அரசு எவ்விதத் தாமதமும் இனியும் செய்யலாகாது. மேலும் மத்திய அரசு, மேற்கு மலைத் தொடரிலே வீணுகும் நீரை ஒருங்கிணைப்புத் திட்டம் மூலம் பயன்படுத்தி, அவற்றைக் கிழக்கு இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள வறண்ட நிலங்களுக்குப் பயன்படுமாறு செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். நெடுநாள் பயன் விளைவிக்கக்கூடிய திட்டங்களைப்பற்றி எண்ணும்போது காவிரி பாசனப் பகுதியைச் சீரமைக்கும் வேலை, விரைவிலே செயல் படுத்த வேண்டும் என்றும் இம் மாநில அரசு உறுதியாக எண்ணுகிறது. இம் மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பைத் தவிர்க்கக் காவிரி நீர் தகராற்றை நடுவர் தீர்ப்புக்கு விரைவில் விடுமாறு மத்திய அரசை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மேற்கூறிய திட்டங்களுக்கான நடவடிக்கையை விரைவில் எடுக்குமாறு நான் மத்திய அரசிற்கு விடுத்துள்ள வேண்டுகோளை இம் மன்றம் முழுமையாக ஆதரிக்கும்என நம்புகிறேன்.

புதிய சமதர்ம வளங்கெழு அரசை எய்துவதற்கு நமது முயற்சியின் பகுதியாக, வரவு-செலவுத் திட்டத்தில் நாம் சேர்த்துள்ள பல்வேறு வேலைத் திட்டங்களையும் திட்டப் பணிகளையும் நான் விளக்கியுள்ளேன். வரி விதித்து வருமானம் திரட்டுவதில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள அதிகார வேறுபாடுகள், அதாவது, மத்திய அரசுக்குள்ள அதிகாரப் பெருக்கமும் மாநில அரசுகளுக்குள்ள அதிகாரக் குறுக்கமும், நமது வரவு-செலவுத் திட்டத்தில் ஆண்டுக்காண்டு பற்றுக் குறை பெருகி வருவதிலிருந்தே தெள்ளெனத் தெரிந்து கொள்ளலாம். ஆண்டுகள் செல்லச் செல்ல, ஒரு புறம் நமது பொறுப்புகள் பெருகி வருகின்றன. மறுபுறமோ, நீட்சித் தன்மையுள்ள வரி விதிப்பு வாயில்கள் அனைத்தும், பொதுக் கடன் திரட்டுவதிலுள்ள மேலாதிக்கமும் மத்திய அரசிடமே குவிந்திருக்கின்றன. இதன் விளைவாக, நமது வருமானத்திற்கும் செலவுக்கும் உள்ள இடைவெளி நீண்டு கொண்டே போகிறது. மத்திய-மாநில நிதி உறவுகளைப் பெரிதும் மாற்றியமைத்தால் தான், இந்த நிலையைச் சீர் படுத்த முடியும். இதற்காக மத்திய அரசிடம் தொடர்ந்து வாதாடி வந்திருக்கிறோம்.

நமது வருமான வாயில்கள், வருந்தத்தக்க வகையில் எவ்வளவு குறைவாக இருக்கின்றன என்பதை இந்த வரவு-செலவுத் திட்டம் சுட்டிக் காட்டுகிறது. வருவாய்க் கணக்கில், நமது வருவாயைவிடச் செலவு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 10.96 கோடி கூடுதலாக இருந்ததற்கு மாறாக, இத் துண்டு ரூ. 15.87 கோடியாக உயர்ந்திருப்பதைத் திருத்திய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து அறியலாம். வருவாய்க் கணக்கில் உள்ள இந்தப் பற்றுக் குறை, புதிய பணிகளுக்குக்கிட்டத்தட்ட ரூ. 6.77 கோடி வகை செய்த பின்னர் எழுந்துள்ளது. இவ்வாறே, மூலதனக் கணக்கிலும் கடன் வழங்கு கணக்கிலும் பெருமளவு பற்றுக் குறை நிலவுகிறது. 1971-72-ஆம் ஆண்டின் மொத்தப் பற்றுக் குறை ரூ. 36 கோடியாக உள்ளது. இதில் சற்றேறக் குறைய 17 கோடி ரூபாய் புதிய பணிகளுக்கான செலவாகும். மேலும், சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் காரணமாக ஏற்பட்ட கூடுதல் ஊதியச் செலவு ரூ. 29 கோடியையும் இம் மதிப்பீடுகள் எதிரொளிக்கின்றன. 1971-72-ஆம்ஆண்டின்தொடக்க இருப்பு 1970-71 திருத்த மதிப்பீடுகளின்படி சுமார் (ரூ- -23.23) கோடியாகும். இதையே நமது தொடக்க இருப்பாக வைத்துக் கொண்டு பார்த்தால், 1971-72-ஆம் ஆண்டின்இறுதியில்மொத்த பற்றுக்குறை ரூபாய் 59.00 கோடியாக இருக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.


இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை இப் பேரவை முன் வைத்து நான் உரையாற்றுங்கால் இதற்கான காரணங்களை நான் தெளிவுபட விளக்கியுள்ளேன். நிதி ஆணைக்குழுவின் பரிவுரைகளைப் பொறுத்தவரை, இந்த மாநிலத்திற்குக் காட்டப்பட்ட சாதகமற்ற மனப்பான்மை, சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளால் ஏற்படும் நிதி விளைவு, மத்திய நிதி உதவி, சிறப்பு நிதி உதவிகளைப் பகிர்ந்தளிப்பதில் இருந்த பாரபட்சம்—இவையே, நமது மாநில நிதிச் சீர்குலைவுக்குப் பொறுப்பென்பதை நான் தொடர்ந்து வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளின் பயனுக எழும் நிதி விளைவினை, நிதி ஆணைக் குழு ஓர்ந்து பாராமல் புறக் கணித்துவிட்டது.

திட்டத்திற்காக மத்திய அரசு நமக்கு ரூ. 250 கோடி உதவி அளிப்பதாக முன்பு வாக்களித்திருந்தது. பின்னர் அதை ரூ. 202 கோடியாகக் குறைத்து விட்டது. இந்தக் குறைப்பின் காரணமாக, திட்டக் காலத்தில், நாம் ரூ. 48 கோடி இழக்க நேரிட்டது. இவை தவிர, 9 மாநிலங்களுக்கு உதவி அளிப்பதற்கென மத்திய அரசு ஒதுக்கி வைத்திருந்த ரூ. 800 கோடியிலிருந்து

நமது மாநிலத்திற்கும் சிறப்பு நிதி வசதி அளிக்குமாறு மத்திய அரசை வேண்டினேம். உண்மையில் இச் சிறப்பு நிதியுதவி, திட்டத்திற்கான கூடுதல் மத்திய நிதி உதவியாகவே அமைந்துள்ளது. இதிலும் நமக்குப் பங்குவேண்டும் என்ற நமது நியாயமான கோரிக்கையை இந்திய அரசு இதுவரை புறக்கணித்துள்ளது.

மேலும், இடைக்கால வரவு-செலவுத் திட்ட உரையில் நான் வலியுறுத்திக் காட்டியுள்ளபடி, திட்டக் காலத்தில் நாம் இந்திய அரசுக்குக் கடனைத் திருப்பியளிக்கும் தொகை (ரூ. 160 கோடி), நமக்கு இந்திய அரசிடமிருந்து கடனாகக் கிடைக்கும் தொகை (ரூ. 141 கோடி) யை விடக் கூடுதலாயிருப்பதும் நமது பற்றுக் குறைக்கு ஒரு காரணமாகும். இது தொடர்பாக, அண்மையில் தலைமை அமைச்சருக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியுள்ளேன். சுருங்கக் கூறின், இந்திய அரசு நமக்களிக்கும் திட்டத்திற்கான உதவியை ரூ. 250 கோடியாக உயர்த்த வேண்டும்; நாம் மத்திய அரசுக்குத் திருப்பித் தர வேண்டிய கடனைக் கொடுப்பதற்குரிய காலக் கெடுவை மாற்றியமைக்க வேண்டும்; சிறப்பு நிதி உதவியில் நமக்கும் ஒரு பங்கு அளிக்க வேண்டும்; சம்பளக் குழுவின் பரிவுரைகளை நிறைவேற்றுவதற்கு நமக்கு நிதி உதவி நல்க வேண்டும். இவையே நான் அக் கடிதத்தில் விடுத்துள்ள முறையீடுகளாகும். இதற்கு மத்திய அரசு செவி சாய்த்தால், நமக்கு ஓரளவு கூடுதல் நிதிவசதி கிட்டும். அவ்வாறு கிட்டினுல், இந்த ஆண்டிலும், வரும் ஆண்டுகளிலும் நமக்குள்ள பற்றுக் குறையை ஓரளவு போக்குவதற்கு அது உதவியாக இருக்கும்.

இது போன்ற நிதி பற்றுக் குறை மிகுந்த நிலையில் இவ்வரசு தனது வரிவிதிப்பு முறைகளை ஆய்ந்து சில முடிவுகளை எடுத்துள்ளது. சோஷலிச அமைப்புள்ள சமுதாயத்தை உருவாக்கும் கருவியாகவும் தாங்க இயலாதவர்களைக் கூடுமான வரை பாதுகாத்துத் தாங்கக் கூடியவர்களைத் தொடக்கூடியதாகவும் வரி விதிப்பு முறைகள் இருக்கவேண்டுமென்ற இந்த அரசின் வரிவிதிப்புக் கொள்கையைக் கருத்தில் கொண்டும் மக்கள் நலன்களைப் பெருக்குவதற்கு நிதிவாயில்களைக்




காணவேண்டும் என்கின்ற நோக்கத்தோடும் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

முதலாவதாக, நகர நிலவரி விதிப்பு முறையில், சமதர்ம சமுதாயத்திற்கேற்பப் படிப்படியாக உயர்வினைக்கொண்டுவரத் தீர்மானித்துள்ளோம். தற்போது, சென்னை நகரத்திலுள்ள நில உடைமையாளர்கள் எல்லோரும் ஆண்டொன்றுக்கு நிலத்தின் மதிப்பில் 0·4 சதவிகிதம் நகர நில வரியாகச் செலுத்தி வருகிருர்கள். புதிய விகிதங்களின் படி, ஒரு மனை (Ground) (2,400 சதுர அடி) வரை நிலம் வைத்திருப்போர்கள் இவ் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள். 66,000 சிறிய நில உடைமையாளர்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய, சோஷலிசக் கண்ணேட்டத்துடன் அமைந்த, இந்த மாற்றத்தை இம்மன்றம் வரவேற்கும் என்று நான் நம்புகின்றேன். ஒரு மனைக்கு மேற்பட்டு இரண்டு மனை வரை உள்ளவர்கள், இனிமேல் 0·5 சதவிகிதமும் 2 மனைக்கு மேற்பட்டு 5 மனை வரை வைத்திருப்பவர்கள் 0·7 சதவிகிதமும், 5 மனைக்கு மேல் 10 மனை வரை வைத்திருப்பவர்கள் 0·8 சத விகிதமும், 10 மனைக்கு மேல் வைத்திருப்பவர்கள் 1 சத விகிதமும் நகர நில வரியாகச் செலுத்துவார்கள். தனிப்பட்டவர்கள் வசம் அதிகப்படியாக நகர நிலங்கள் குவிவதைத் தடுப்பதும், நில உடைமையாளர்கள் தங்களுடைய நிலத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தத் தூண்டுவதும் இம்மாற்றத்தின் ஒரு நோக்கமாகும். நகர நிலம் வைத்திருப்பதற்கான உச்ச வரம்பு கட்டுவதற்கான முயற்சியிலும் இது ஒரு முன்னேடியாகும்.

அறக் கட்டளைகளும் பிற நிறுவனங்களும் நகர நில வரி செலுத்துவதிலிருந்து பெற்றுள்ள விலக்குகளை ரத்து செய்வது பற்றி அரசு நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளது. இத்துடன், நகர நில வரிச் சட்டத்தின் கீழ், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களையும் 1971 –72ஆம் ஆண்டிலிருந்து கொண்டு வரவும் அரசு தீர்மானித்திருக்கிறது. இவற்றின் பயனுக, ஏறத்தாழ 1 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் எதிர் பார்க்கப்படுகிறது.

நிதி வசதிகளைப் பெருக்கும் நமது முயற்சியில் மற்றொரு கூறு, தமிழ் நாடு பொது விற்பனை வரியின் கீழ் உள்ள பல முனை வரியை 3-லிருந்து $3\frac{1}{2}$ சத வீதமாக உயர்த்துவது என்பதாகும். இதன் வாயிலாக ஆண்டொன்றுக்கு 3·8 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

வரி விதிப்பின் அடுத்த முயற்சி, சென்னை நகரத்தில் வசூலிக்கப்படும் விற்பனைவரி மீது 10 சதவிகிதத்திற்கு மேல் வரி (Surcharge) விதிப்பது பற்றியதாகும். இதன் மூலம் ஏறத்தாழ 3 கோடி ரூபாய் வருமானம் கிட்டும். இவ்வருமானம் முக்கியமாகக் குடிசைகளை மாற்றிஅமைப்பதற்கும், சென்னை நகரப் பகுதியின் சாலைகள், குடி தண்ணீர் போன்ற அடிப்படை அமைப்புகளை மேம்படுத்துவதற்கும் செலவிடப்படும். டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் இச் செலவினங்களை ஈடு கட்டுவதற்காக விதிக்கப்படுகிற சுங்கத் தீர்வைக்குப் (Octroi) பதிலாக இந்த “மேல் வரி” விதிக்க எண்ணியுள்ளோம். சுங்கத் தீர்வை (Octroi) போக்குவரத்திற்கும் வர்த்தக வளர்ச்சிக்கும் இடையூருக இருக்கும் என்பதனுல், அதற்குப் பதிலாக நேரடியான மேல் வரியாக விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

அரசு முடிவு செய்துள்ள நான்காவது வரி விதிப்பு யோசனை வேளாண்மைத் துறை, மாநிலத்தின்நிதிவசதிகளுக்குச்செலுத்தும்

பங்காக அமையும். எல்லாப் புஞ்சை நிலங்களையும், 5 ஏக்கருக்கு உட்பட்ட நஞ்சை நிலங்களையும் அடிப்படை நில வரியிலிருந்து இவ்வரசு விலக்கு அளித்துள்ளதை இம்மன்றம் அறியும். இவ் வரிவிலக்கு, சமதர்ம சமுதாயத்தின் இலக்குகளுக்கேற்பக் கொண்டு வரப்பட்டது. நிலவரி யென்பது வருவாய்க்கு ஏற்ப நெகிழ்ந்து உயரும் தன்மையுள்ள வரி அல்ல என்பதும், இவ்வரி விலக்கு அளித்ததற்கு ஒரு முக்கிய காரணமாகும். எனினும் விவசாயத் தொழிலின் மூலம் அதிக வருமானம் பெறுவோர், எடுத்துக்காட்டாகப் பணப் பயிர்களின் மூலம் பெரும் பயனடைவோர் நாட்டின் எதிர்கால மேன்மைக்குத் தங்களின் பங்கினைச்செலுத்த வேண்டுமென்பது நியாயத்தின் பாற்பட்டதொன்றாகும். அந்த அடிப்படையில் ஏற்கனவே அமலிலுள்ள வேளாண்மை வருமான வரிச் சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்வதற்கு அரசு முடிவெடுத்திருக்கிறது.

உடைமைகள் சிலரிடையே குவிந்து கிடப்பதற்கு மாறாக, பெறத் தகுதியுள்ள பலரிடையே பரவலாக்கப்படுவதும், நாட்டுப் பொருளாதார அமைப்பிற்கு அடிப்படையானவற்றை அரசுடைமை ஆக்குவதும், சமதர்ம அரசுநிறுவும் முயற்சியின் முக்கிய கூறுகளாகும். இன்று 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் இந் நிதிநிலை அறிக்கை இம்மன்றத்தின் முன் படிக்கப்படும் போது, 50ம் அதற்கு மேற்பட்டதுமான பயணிப் பேருந்து உரிமங்களை வைத்திருக்கும் பெரிய போக்குவரத்து நிறுவனங்களின் பயணிப் போக்குவரத்துப் பிரிவுகளை அரசு நாட்டுடைமையாக்க முடிவு செய்துள்ளதை அறிவிக்கின்றேன். இவ்வாறே, பயணிப் பேருந்து உரிமையினர் ஒவ்வொருவரிடமும் 10 உரிமங்களுக்கு மேல் இருக்கக் கூடாதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான சட்டங்கள் விரைவில் இந்த அவையில் கொண்டு வரப்படும். அவையின் எல்லாப்பகுதியினரும் சோஷலிச அமைப்பின் ஓரம்சமான இம்முடிவினை வெகுவாக வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஒட்டி, இவ்வரசு மேற்கொண்ட முடிவுகளின் விளைவாக, அரசு அலுவலர்கள் அனைவரும் ஓரளவு அதிகப்படியான வருவாய் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ் வதிகப்படி வருமானத்தை முற்றிலும் உடனடியாகச் செலவு செய்து விடாமல், அவர்களுடைய பிற்கால வாழ்விற்குப் பயன் அளிக்கும் வகையிலே வருங்கால வைப்பு நிதியில் (Provident Fund) கூடுதலாகச் செலுத்துவதற்கு வகை செய்யவும் இவ்வரசு முடிவு செய்துள்ளது. தற்போது சம்பளத்தில் குறைந்த அளவு 6 சத வீதம் வைப்பு நிதிக்கு அலுவலர்கள் செலுத்தி வருகின்றனர். அரசு அத் தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு 4.80 சத வீதம் வட்டி செலுத்தி வருகின்றது. அலுவலர்கள் அவர்கள் விருப்பத்தின் பேரில் மேலும் 4 சத வீதம்வரை செலுத்துவதற்கு முன் வருவார்களானால் அவர்கள் அப்படிச் செலுத்தும் அதிகப்படி சிறப்பு வருங்கால வைப்பு நிதிக்கு (Special provident Fund) ஆண்டொன்றுக்கு 8 சத வீதம் வட்டி தரவும் அரசு முடிவு செய்துள்ளது.

அரசு, கிராமப்புறங்களுக்கு மின்சாரம் தருகின்ற பணியை விரைந்து செயல்படுத்தி முடிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மின்சார வாரியத்திற்குத்தன்னால் இயன்ற அளவு கடன்களை வழங்கிப் பிற நிதி நிறுவனங்களிடமிருந்தும் தக்க அளவு நிதியைப் பெறவும் முயற்சிகள் எடுத்து வருகின்றது. மின்சார வாரியம் தனது கிராமப்புற மின் வழங்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்குக் கிராமக் கடன் பத்திரங்கள் ( Rural (Debentures) வாயிலாக $3\frac{1}{2}$ கோடி ரூபாய் நிதி திரட்டவும் தீர்மானித்துள்ளது.

மேற் கூறிய பல்வேறு நிதி திரட்டும் முயற்சிகளின் பலனாய் 12 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் இவ்வாண்டில் கிடைக்குமென நம்பப்படுகிறது. இதன் விளைவாக நிதிநிலையில் துண்டு 47 கோடி ரூபாயாக மாறுமென எதிர்பார்க்கப்படுகிறது.


இதுபோன்ற நிதிப் பற்றாக்குறை மிகுந்த ஒரு சூழ்நிலையில் உத்தமர் காந்தியடிகளின் ஒப்புயர்வற்ற திட்டங்களில் ஒன்றான மது விலக்குத் திட்டத்தை, அவரது கொள்கைகளைப் பொன்னேபோல் போற்றி வந்த பல்வேறு மாநிலங்கள் படிப்படியாகக் கைவிட்டு, இறுதியில் தென்னகத்தைப் பொறுத்த வரையில் ஆந்திரத்திலும், கேரளத்திலும், கர்நாடகத்திலும், அருகிலுள்ள புதுவையிலும் மதுவிலக்குக் கொள்கை பிடிப்பற்றுப் போய்விட்ட நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டி, தமிழகம் மாத்திரம் தனித்து நின்று மதுவிலக்குச் சட்டத்தை அமல் படுத்த இயலாமல் தத்தளிப்பதையும் சுட்டிக்காட்டி, அண்ணல் காந்தியின் மதுவிலக்குக் கொள்கையை அனைத்திந்திய அளவில் ஏற்க வேண்டுமென்றும் அல்லது நமக்கு நேரிட்டுள்ள இழப்பினை ஈடு செய்ய வேண்டுமென்றும் பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

புனித நோக்கத்தோடு, இந்தியப்புவி முழுதும் எந்தக் கொள்கை விரிவாக்கப்படவேண்டுமென்று கூறினோமோ, அந்தக் கொள்கை — புண்ணியமூர்த்தி காந்தி மகான் வலியுறுத்திய கொள்கை—அவர் ஏந்திய கொடி நிழலில் அணிவகுத்து நின்ற, அவர்தம் தானைத் தளபதிகளாம் மாநில முதல்வர்களாலேயே பின்பற்ற முடியாமல் போனது மட்டுமல்ல, மத்திய அரசினை நடத்தும் மகாத்மாவின் வாரிசுகளாலும் புறக்கணிக்கப் பட்டுவிட்டது வேதனை தரும் செய்தியாகும்.

கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ் நாடு எத்தனை நாளைக்குத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் ? தமிழகத்தில் மட்டும் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரப் படுத்துவதால், மதுவிலக்கின் வாயிலாக நாம் காப்பாற்ற விரும்பும் ஒழுக்கம், நாணயம், நேர்மை இவைகளையே பாதுகாக்க வாய்ப்பில்லாமல் போகிறது. வரக்கூடிய வருமானத்தையும் இழந்து, கொள்கையை அமல்படுத்துவதிலும் வெற்றி காண முடியாத அளவிற்குப் புறச்சூழ்நிலைகள் உருவாகி, சிறைகள் வழிந்திடவும், கொடிய நோய்கள் பெருகிடவும் இந்தச் சட்டம் காரணமாக இருந்ததேயன்றி உற்ற பயன் ஒரு சிறிதும்

விளையவில்லை என்பதை ஒத்துக் கொள்வதில் நாம் வெட்கப் படத் தேவையில்லை. எனவே உயர்தனிக் கொள்கையான மது விலக்கில் இந்த அரசு தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்கிறதெனி னும் இந்திய நாடு முழுவதற்கு மாக இந்தக் கொள்கையை அமல்படுத்த மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் வரையில் தமிழகத்தில் மது விலக்குச் சட்டம் செயல்படு வதை ஆகஸ்ட் 30-ஆம் நாளில் இருந்து ஒத்திவைக்க இந்த அரசு முடிவு செய்கிறது என் பதை வருத்தத்துடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

நலிவு தீர்த்து சமதர்மம் தழைத்தோங்கும் நாட்டினை



உருவாக்கும் வகையில் இந் நிதிநிலையறிக்கையில் பல முற் போக்குத் திட்டங்கள் இடம் பெற்றுள்ளன. அவையாவன:—

(1) உழவர் பெருமக்களுக் காக வழங்கும் நீண்டகாலக்கடன் களின் தொகை ஆண்டொன் றுக்கு ரூ. 3 கோடியிலிருந்து ரூ 21 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. குறுகிய காலக் கடன் வசதி ரூ. 61·5 கோடி யளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

(2) 9 புதிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ. 235 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) 1971-72-ல் 51,000 கிராமங்களிலும் சிற்றூர்களி லும் மின் வசதி செய்து கொடுக் கும் ஏற்பாடு முடிவடையும்.

(4) 1967 முதல் 1971-க் குள் 2,02,246 நிலமற்ற ஏழை மக்களுக்குச் சாகுபடிக்கென நிலம் ஒப்படை செய்யப்பட் டுள்ளது. மேலும் காடுகள் என்ற பெயரால் உள்ள சாகு படிக்கேற்ற 50,000 ஏக்கர் நிலங்களை நிலமற்ற ஏழை களுக்கு வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

(5) 1969 ஜூன் முதல் 1971 ஜனவரி வரை, 2,30,000 மனைப் பட்டாக்களும் வழங்கப் பட்டுள்ளன. மேலும் தஞ்சை மாவட்டத்திலுள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் இடங் களை ஒப்படை செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

(6) 1967-68-ல் கல்வி வளர்ச்சிக்காக ரூ. 53·56 கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக ரூ. 81·84 கோடி 1971-72-ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

(7) 1967-68-ல் ரூ. 17·89 கோடியளவில் இருந்த மருத்துவ பொது சுகாதார நிதி ஒதுக்கம் ரூ. 33·20 கோடியாக உயர்ந் துள்ளது.

(8) குடிநீர் வாரியம் நிறு வப்பட்டு, பல்வேறு குடி நீர் வழங்கும் திட்டங்களுக்கு 1971-72-ல் ரூ. 18·43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(9) அரிசன நலனுக்காக நிதி ஒதுக்கீடு 1967-68-ல் 470 இலட்சமாக இருந்ததற்கு மாறாக, 1971-72-ல் ரூ. 700 இலட்சமாக உயர்த்தப்பட்டுள் ளது.

(10) பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக நிதி ஒதுக்கீடு 1967-68-ல் 161 இலட்ச மாக இருந்ததற்கு மாறாக, தற் போது 442 இலட்சமாக உயர்த் தப்பட்டுள்ளது.

(11) அரிசன மாணவர் களுக்கான உண்டி உறையுள் உதவித் தொகைகள் அதிகரிக் கப்பட்டுள்ளன.

(12) பின் தங்கியோர் நலக் குழுவின் பரிந்துரைகளை ஆய்ந்து நிறைவேற்றுவதற்கு வகை செய்து, பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்குரிய உண்டி உறையுள் மானியங்கள் உயர்த் தப்பட்டுள்ளன.

(13) கல்வி நிலையங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் பின் தங்கிய வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் இடங்கள் 25 சத வீதத்திலிருந்து 31 சத வீதமாகவும், அரிசனங்களுக்காக ஒதுக்கப்படும் இடங்கள் 16 சத வீதத்திலிருந்து 18 சத வீதமாகவும் உயர்த்தப்பட்டுள் ளது.


(14) முடி திருத்துபவர்களுக் கும், சலவைத் தொழிலாளர் களுக்குமாக 1,000 பேருக்கு இலவசமாகக் கருவிகள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது.

(15) குடிசைப் பகுதிகளை மாற்றியமைப்பதற்காகக் குடிசை மாற்று வாரியம் அமைத்து அதற்கென 1971-72-ல் ரூ. 4 கோடி ஒதுக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

(16) மாநிலத்திலுள்ள பல் வேறு நகரங்களில், 1,35,000 குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து ணவை வழங்குகின்ற திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

(17) பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு நிதி ஒன்று அமைக்கப் பட்டுப் பிச்சை எடுக்கும் தொழி லையே குறித்த காலத்திற்குள் அறவே நீக்குவதற்கும், தொழு நோயாளிகளான பிச்சைக்கா ரர்களை முதற் கட்டமாக ஆதர வில்லங்களில் சேர்ப்பதற்கும் திட்டம் ஒன்று வகுக்கப்பட் டுள்ளது.

(18) கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு அதிகரிப்பதற் காக மத்திய அரசு வகை செய் துள்ள நிதி ஒதுக்கம் போதா மையால் மாநில அரசின் சார்



பில் மேலும் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டு, இதன் வாயிலாக மேலும் 15,000 பேருக்கு வேலை வாய்ப்புக் கிட்டுவதற்கு வகை செய்யப்பட்டு, மொத்தம் 30,000 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

(19) வேலையற்ற 6,500 ஆசிரியர்களுக்கு வேலை வழங்குவதற்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாயும், 2,400 பொறியாளர்களுக்கு வேலை அளிப்பதற்காக 40 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக மதிப்பீடுகளில் 6,500 ஆசிரியர்களுக்கு வேலை அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(20) 50 உதவி மருத்துவர் பதவிகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. வேலையின்றியிருக்கும் 100 மருத்துவர்களுக்கு ரூ. 250 மாத உதவித் தொகை அளிக்கும் திட்டமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

(21) 205 செவிலியர் பதவிகளை உருவாக்கியதன் மூலம் வேலை வாய்ப்பு வசதிகள் பெருகியுள்ளன.

(22) படித்தவர்களிடையே வேலையின்மையைப் போக்குவதற்காகக் காவல் துறையில் 2,000 முதல் நிலை காவலர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் 1,000 பதவிகளில் பள்ளி இறுதித் தேர்வு பெற்ற இளைஞர்கள் நேரடியாக நியமிக்கப்படுவார்கள்.

(23) சமூகப் பணியாற்றுவதற்காக இளைஞர் அணி ஒன்று தொடங்கப் பெற்று சமூகப் பணி ஆற்றும் பொருட்டு 2,000 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

(24) தொழில் நுணுக்கப் படிப்பில் தேர்வுபெற்று வேலையின்றி இருக்கும் இளைஞர்கள் 3,000 பேர் தாமே தொழில் தொடங்கிக் கொள்வதற்காகத் தலைக்காயிரம் ரூபாய் கடன் வழங்கும் புதிய திட்டமொன்று செயற்படுத்தப்படும்.

(25) நகர்ப் பகுதியில் பெரிய மனை உடைமையாளர்கள் அதிக அளவில் வரி செலுத்தும் வகையிலும், சிறிய மனை உடமையாளர்கள் 66,000 பேருக்கு வரி விலக்கும் வகையிலும் வரி விதிக்கும் கட்டுக்கோப்பு சீரமைக்கப்பட்டுள்ளது.

(26) பேருந்து உரிமையாளர்கள் நடத்தும் பேருந்துகளின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு கட்டப் பட்டுள்ளது. பெரிய பேருந்து நிறுவனங்களின் '' பயணிகள்—பேருந்துப் பிரிவுகள் '' தேசியமயமாக்கப்பட்டுள்ளன.

வாழ்வில் வளம் கொண்டோர் சிலரும், விழிகளில் குளம் கொண்டோர் பலருமாக இருக்கின்ற சமுதாயத்தை மாற்றி அமைக்கும் சமதர்மத் திருப்பணிக்கு, மாநிலத்தில் நமக்குள்ள அதிகாரங்களின் அளவிலும், இதிலேயே சிலவற்றுக்கு மத்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்க்கும் நிலையிலும் நம்மாலியன்ற அளவுக்கு ஏழை, எளியோர், நடுத்தர மக்கள் வாழ்வை அடிப்படையாக வைத்து இந்தச் சீரிய முயற்சிகளைத் தொடங்கியுள்ளோம். இவற்றை இந்த மாமன்றமும், தமிழ் மாநிலப் பெருமக்களும் மகிழ்ச்சி பூத்திட வரவேற்பர் என்ற நம்பிக்கையுடன் மேலும் இது போன்ற இலட்சியப் பயணத்திற்கு ஆதரவு நல்கிட வேண்டுமென்றும் மிகுந்த பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

[தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 1971-72-ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாளன்று ஆற்றிய உரை.]

## வெண்பாப் போட்டி-13

ஈற்றடி : **கொண்டாடச் சொன்னார் குறித்து**

முடிவு நாள் : **15—7—1971**


பரிசு ஓராண்டு '**தமிழரசு**' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்பவேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

# லாஸ்ஸோ களைகளை முளைக்கு முன்னரே அழித்து விடுகிறது !




## வேர்க்கடலை மகசூலைப் பெருக்குகிறது


உறுதியான பயன்தரும் களைகொல்லி-லாஸ்ஸோ வேர்க்கடலைப் பயிர் நிலத்தில் முளைக்கும் புல் பூண்டுகளையும் அகன்ற இலையுடைய களைகளையும் நிச்சயமாகக் கட்டுப்படுத்துகிறது. முளைக்கு முன்னரே அழிக்கும் களைகொல்லியானதால் பூண்டுகளை முளைக்கவே விடாது! பயன்: பூச்சிகள் அணுகா, உங்கள் வேர்க்கடலை பயிர் உரம், சூரிய வெளிச்சம், ஈரம், மண்சதது ஆகியவற்றின் பூரண பலனையும் பெறுகிறது. மகசூல் பெருகுகிறது. உழைப்பிற் கேற்ற உயர்ந்த லாபத்தை நீங்கள் பெறுவீர்கள்.

50% ஈ.ஸி. மற்றும் 10% குறுணையாகவும் கிடைக்கிறது.

**லாஸ்ஸோ®**

ஹெர்பிஸைடு தயாரிப்பாளர்- **Monsanto®**

மான்ஸான்டோ



களைகளைப் போக்கி விளைச்சலைப் பெருக்குங்கள்


**மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரைவேட் லிட்**

தலைமையகம்: வேக்ஃபீல்ட் ஹவுஸ், 11, ஸ்ப்ராட் ரோடு, பாலர்டு எஸ்டேட், பம்பாய்-1.

கிளைகள்: புதுதில்லி, கல்கத்தா, சென்னை

® மான்ஸான்டோ கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடுமார்க்-அங்கீகாரத்துடன் மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரைவேட் லிட உபயோகிப்பது.

MC.G.10.TM



குறளகம்
சென்னை.1
உங்களுக்கு வேண்டிய
எல்லாமே
இங்கே கிடைக்கும்
20461
20462
20463
20464. 20465
கதர்-
கைத்தொழில்
அங்காடி
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்

# கட்டுக்கலங்காண கதிர் உழக்கு நெற்காண




"கோயம்புத்தூர் மாவட்டம், பூந்தோட்டம் கிராமத்தில் உள்ள திரு-தி. நாராயணசாமி என்ற உழவர் பெருமகன் 1968-69-ஆம் ஆண்டில் ஐ.ஆர். 8 நெல் பயிரிட்டு ஏக்கருக்கு 5,551·2 கிலோ மகசூல் விளைவித்து மாநில நெல் விளைச்சல் போட்டியில் முதற் பரிசு பெற்றுள்ளார். அவருக்குத் தமிழ் நாடு அரசு ரூபாய் 2,000 மதிப்புள்ள வேளாண்மைக் கருவிகளைப் பரிசாக வழங்கியுள்ளது.

அதே நாராயணசாமி அடுத்த ஆண்டில், அதாவது 1969-70-ஆம் ஆண்டில் ஐ. ஆர். 8 நெல் பயிரிட்டு ஏக்கருக்கு 6,244 கிலோ (ஹெக்டேருக்கு 15,422·6 கிலோ) மகசூல் எடுத்துள்ளார். இந்த அளவு மகசூலை இதுவரை இந்தியாவில் யாரும் விளைவிக்கவில்லை.

1969-70-ஆம் ஆண்டின் இறுதி முன்னறிவிப்புப் புள்ளி விவரப்படி தமிழ் நாட்டில் சராசரியாக ஏக்கருக்கு 1,021·5 கிலோ நெல் (ஹெக்டேருக்கு 2,523 கிலோ நெல் அல்லது 1,682 கிலோ அரிசி) மட்டுமே விளைந்துள்ளது.

திரு நாராயணசாமி 1969-70-ஆம் ஆண்டில் எடுத்துள்ள உச்ச அளவு மகசூலையும், தமிழ் நாட்டில் அந்த ஆண்டு விளைந்துள்ள சராசரி ஏக்கர் மகசூலையும் ஒப்பிட்டுப் பார்த்தால், திரு நாராயணசாமி அவர்கள் மாநில சராசரி ஏக்கர் மகசூலைப் போல் 6 மடங்கு விளைவித்துள்ளாரென்பது தெளிவாகிறது.

நமது ஊரில் குறுவை பயிரிட்டுப் பெரும்பாலும் 75 கிலோ கொண்ட மூட்டை 12 அல்லது 15 தான் எடுக்கின்றோம். ஆனால், திரு நாராயணசாமி அவர்கள் 75 கிலோ கொண்ட மூட்டை 83-க்கு மேல் விளைவித்துள்ளார். அவரைப்போல் நாமும் பயிரிட்டால், அதே அளவு மகசூல் எடுக்க முடியாதா? சிந்தித்துப் பாருங்கள்! திரு நாராயணசாமியைப் போல் 6 மடங்கு விளைவிக்க முடியாவிட்டாலும் அதில் பாதியளவாவது—அதாவது 3 மடங்கேனும் விளைவிக்கலாமல்லவா? இந்த ஆண்டு குறுவைப்பட்டத்தில் நம்ஊரிலுள்ள எல்லா உழவர் பெருமக்களும், ஐ. ஆர். 8 நெல்லைத்தான் பயிரிடவேண்டும். அப்பொழுதுதான் ஏழை உழவர்களான நாமெல்லாம், வறுமையின் பிடியில் சிக்காமல் பசியின்றி வாழவும் வருவாயைப் பெருக்கிக்கொண்டு வளமாக வாழவும் முடியும்.

இதுபற்றிச் சிந்தித்து முடிவு எடுக்கவே இந்தக் கூட்டத்தைக் கூட்டினேன். உங்களுக்கெல்லாம் ஐ.ஆர். 8 நெல் பற்றிய விளக்க மளிப்பதற்காகவே நமது ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரும், கிராம சேவகரும் வந்துள்ளார்கள். அவர்களிடம் உங்ளுடைய சந்தேகங்களை எல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இரவு நேரத்திலே எண்ணெய்விளக்கின் வெளிச்சத்திலே நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு

# எட்டுத்திக்கும் பயிரிடுவோம் ஐ.ஆர். 8

எல்லாரும் திரண்டு வந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவதுடன், என் வேண்டுகோளுக்கிணங்க வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் வருக, வருக, என்று வரவேற்கின்றேன். இந்தக் கூட்டத்திற்கு நமது ஊர் பெருநிலக்கிழார் திரு ஆறுமுகம் அவர்களைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் '' என்று ஊராட்சி மன்றத் தலைவர் கரிகாலன் கூறினார்.

பெருநிலக்கிழார் ஆறுமுகம் எழுந்து, '' ஐ. ஆர். 8 நெல் அதிகமாக மகசூல் கொடுக்குமென்று நானும் கேள்விப்பட்டேன். பத்திரிகைகளில் கூடப் பார்த்தேன். ஆனால், ஐ. ஆர். 8 நெல்பயிரிட அதிகச் செலவாகும்; பூச்சி நோய் அதிகமாகத் தாக்கும் ; செலவுக்கு ஏற்ப வருவாய் இருக்காது; தொடர்ந்து பயிரிட்டால் நிலத்தின் சத்து குறைந்துவிடும் என்றெல்லாம் சில பெரியவர்கள் குறிப்பிட்டார்கள். அதைக் கேட்ட பின்பு, ஐ. ஆர் 8 பற்றியே நான் நினைத்ததில்லை. ஐ. ஆர். 8 பயிரிட்டு அதிக மகசூல் எடுக்க வேண்டுமென்ற ஆசை இருந்தாலும், எங்கே நட்டமடைந்து விடுவோமோ என்ற அச்சம் இருக்கிறது. இந்த சந்தேகங்களை எல்லாம் எங்களுக்குத் தெளிவாக விளக்கிக் கூறுமாறு நமது வேளாண்மை வளர்ச்சி அலுவலரைக் கேட்டுக்கொள்கிறேன்'' என்று கூறி அமர்ந்தார்.

வேளாண்மை வளர்ச்சி அலுவலர் திரு பாண்டியன் அவர்கள், '' தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போன்ற சந்தேகங்கள் உங்களுக்கு மட்டுமல்ல, தமிழகத்தின் பல ஊர்களில் உள்ளவர்களுக்கும் முன்பு இருந்தன. ஆனால், ஒருதடவை பயிரிட்டுப் பார்த்தபின்பு, அவர்களுக்கெல்லாம் சந்தேகம் தெளிவாகி, உண்மை புரிந்து, மீண்டும் மீண்டும் ஐ. ஆர். 8 நெல்லையே பயிரிட்டு வருகின்றனர்.

'' 1967 -68-ஆம் ஆண்டில் 12,465 ஏக்கரில் மட்டுமே தமிழ்நாட்டில் ஐ. ஆர். 8 நெல் பயிரிடப்பட்டது. ஆனால் சென்ற ஆண்டில் அதாவது 1970 -71-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 20 இலட்சம் ஏக்கரில் ஐ. ஆர். 8 நெல் பயிரிடப்பட்டுள்ளது. தலைவர் அவர்கள் குறிப்பிட்டதெல்லாம் உண்மையாக இருக்குமானால் 4 ஆண்டுக் காலத்தில் ஐ. ஆர். 8 நெல் இவ்வளவு பரப்பில் பரவியிருக்குமா, இந்த ஆண்டில் 30 இலட்சம் ஏக்கரில் ஐ. ஆர். 8, மற்றும் அதைத் தழுவிய ரகங்களைப் பயிரிடத் திட்டமிடப் பட்டிருக்குமா, என்பதைச்சிந்தித்துப் பாருங்கள். இவ்வாறு பரவியுள்ளதிலிருந்தே மேற்கூறிய ஐ. ஆர். 8 பற்றிய குற்றச்சாட்டுகள் முழுக்க முழுக்க உண்மையல்ல என்று கூறிவிடலாம்! ஆயினும் உங்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்பதற்காகச் சற்றுத் தெளிவாகவே விளக்கிக் கூற விரும்புகிறேன்.

ஐ. ஆர். 8 நெல் சாகுபடி செய்யச் செலவு அதிகம் என்பது உண்மைதான் எனினும், அதிலிருந்து கிடைக்கும் மகசூலைக் கணக்கிட்டுப் பார்த்தால் நிகர லாபம் அதிகமாகவே இருக்கும். நாடு இன்று உள்ள நிலைமையில் ஒவ்வொரு உழவர் பெருமகனும் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியமாகும். உள்ளூர் தினுசுகளைப் பயிரிட்டுக் கிடைக்கும் மகசூலைவிட, ஐ. ஆர். 8 பயிரிட்டு அதிக மகசூல் எடுப்பது நாட்டிற்குச் செய்யும் நல்ல தொண்டாக அமையும். அதிகச் செலவு செய்வதற்கு ஏற்ப அதிக மகசூலும், இலாபமும் கிடைக்கும் என்பதில் ஐயமே வேண்டாம்.

''யானை விற்றால்தான் யானை
அளவு பணம் கிடைக்கும்,
பானை விற்றால் பானை
அளவு பணம்தான் கிடைக்கும்''

என்பது பழமொழி. அப்பழமொழி ஐ. ஆர். 8 நெல்லிற்கு மிகவும் பொருந்தும். யானையைப் பராமரிக்கும் செலவும் அதிகம். யானையை விற்பதனால் கிடைக்கும் வருமானமும் அதிகம். அதுபோல் ஐ.ஆர்.8 நெல் பயிரிடச் செலவும் அதிகம். அது கொடுக்கும் வருமானமும் அதிகமே. எனவே ஐ.ஆர். 8 பயிரிட்டுப் பெரும் லாபம் அடையுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து, பூச்சி நோய் அதிகமாகத் தாக்குகிறது என்றார். தற்பொழுது எல்லாவகை நெல்லிலுமே பூச்சிநோய் தாக்குகிறது. இதற்கு இயற்கை மாறுபாடுகளும், ஒன்றுக்கு மேற்பட்ட சாகுபடியைத்தொடர்ந்துசெய்வதும், உயர் விளைச்சல் ரகங்களுக்கு அதிக அளவு இரசாயன உரமிடுவதுமே காரணங்களாகும். சாதாரண நெல்லிற்கும் நாற்றங்காலில் ஒருமுறையும், நட்டபின் 2 அல்லது 3 முறையும் மருந்து தெளிக்கும்படி ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஐ.ஆர். 8 நெல்லிற்கு அதிகமாக 2 தடவை அதாவது மொத்தம் 5 தடவை மருந்து தெளிக்க வேண்டியுள்ளது. இரண்டு தடவை கூடுதலாக மருந்து தெளிக்க ஆகும் செலவையும், அதனால் கிடைக்கும் அதிக மகசூலையும் கணக்கிட்டுப் பார்த்தால், 2 தடவை அதிகமாக மருந்து தெளிப்பதனால் நிகர லாபம் பெருகுவது புலனாகும். நாங்கள் கூறும் பருவத்திலும், முறையிலும் பயிரிட்டால் பூச்சி, நோய் தாக்குதலைக் குறைக்க முடியும். எனவே பூச்சியும் நோயும் அதிகமாக ஐ.ஆர். 8 நெல்லைத் தாக்கும் என்பதை நம்ப வேண்டாம் ; அது பற்றி அஞ்ச வேண்டாம் என்று கூறிக்கொள்கின்றேன்.

ஐ.ஆர்.8நெல்லைத் தொடர்ந்து பயிரிட்டால் நிலத்தில் சத்துக் குறைந்துவிடும் என்று கூறுவதும் பொருத்தமற்றது.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பவானியில் திரு மகாலிங்கம் என்ற உழவர் பெருமகன், யூ. எஸ். ஏ. ஐ. டி. ( U. S. A. I. D. ) திட்ட அலுவலர்களின் மேற்பார்வையில் ஐ. ஆர். 8 நெல்லைத் தொடர்ந்து மூன்று முறை பயிரிட்டு முதல் தடவை ஏக்கருக்கு 3,320 கிலோவும், இரண்டாம் தடவை 4,602 கிலோவும், மூன்றும் தடவை 4,847 கிலோவும் பெற்றுள்ளார். 13½ மாதத்தில், ஒரு ஏக்கர் நிலத்தில் 13,269 கிலோ நெல் விளைவித்துள்ளார். அதாவது மாதம் ஒன்றுக்கு 1 டன் விளைச்சல் பெறமுடியும் என்று கூறி ஐ. ஆர் 8 நெல் பயிரிடுமாறு யு. எஸ்.ஏ. ஐ.டி. திட்ட நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.


அதுபோலவே கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி நன்செய் நிலத்தில் 16—2—68 முதல் 28—5—70 வரை தொடர்ந்து 6 முறை பயிரிட்டு வந்துள்ளனர். அதிலிருந்து முதல்தடவை ஏக்கருக்கு 2,904 கிலோவும், ஆறுவது தடவை ஏக்கருக்கு 3,158 கிலோ மகசூலும், சராசரியாக ஒவ்வொரு முறையும் ஏக்கருக்கு 3,046 கிலோ மகசூல் கிடைக்கும் என்பதும் தெளிவாகியுள்ளது.

ஐ. ஆர். 8 நெல்லைத் தொடர்ந்து பயிரிடுவதால் மகசூல் குறைந்துவிடும் அல்லது நிலம் வளமற்றுவிடும் என்று அஞ்சவேண்டாம். வேளாண்மைத்துறை பரிந்துரைக்கும் அளவு இரசாயன உரங்களை மட்டும் தவறாமல் இட வேண்டியது மிகவும் முக்கியம். எனவே ஐ.ஆர். 8 நெல்லைப் பயிரிடுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன் '' என்றார்.

உடனே ஒருவர் எழுந்து, '' ஐ. ஆர். 8 அரிசி பெரியது ; சாப்பாட்டிற்கு ஏற்றதல்ல என்கிறார்களே அது உண்மையா ?'' என்றார்.

ஐ. ஆர். 8 அரிசியை விடப் பெரிதாக உள்ள முரட்டு கார் ரகங்களையும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமிழ்நாட்டில் சாப்பிட்டு வருகிறார்கள். சில ஊர்களில் போடப்படும் சாப்பாட்டைப் பார்த்தால் ஒவ்வொரு சோறும் கொட்டை முத்து அளவுக்கு இருக்கிறது. அதையே விரும்பிச் சாப்பிடுபவர்களும் இல்லாமல் இல்லை. கேரளா போன்ற வேறு சில மாநிலங்களில் ஐ. ஆர். 8 அரிசியை விடக் கனபரிமாணம் அதிகமாக உள்ள அரிசியைப் பெரும்பாலோர் சாப்பிட்டு வருகிறார்கள். எனவே ஐ.ஆர். 8 அரிசி பெரியது என்று கூறுவது பொருத்தமற்ற வாதமேயாகும். பெரியதாக இருக்கிறது என்பதற்காக ஐ.ஆர். 8 அரிசிச் சோறு சாப்பிடமாட்டேன் என்று இதுவரை யாரும் சொல்லிச்சாப்பிடாமலே இருந்துவிட்டதற்கும் சான்று இல்லை.

'' ஐ.ஆர். 8 அரிசி சாப்பாட்டிற்கு ஏற்றதல்ல என்பதும் முழுக்க முழுக்கப் பொய்யான கூற்றுத்தான். சாப்பாட்டிற்குத் தகுதியில்லாத அரிசி கொடுக்கும் நெல்லையா அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தில், பல புகழ் பெற்ற— திறமை வாய்ந்த நிபுணர்கள் கூடி உருவாக்கியிருப்பார்கள் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சாப்பாட்டிற்குத் தகுதியில்லாத அரிசியையா பிலிப்பைன்சு, வியட்நாம், மலேயா, சிங்கப்பூர், இலங்கை இன்னும் பல நாடுகளில் உள்ள மக்கள் சாப்பிடுகிறார்கள் என்று யோசித்துப் பாருங்கள். சாப்பிடத் தகுதியில்லாத அரிசியைக் கொடுக்கும் ஐ. ஆர். 8 நெல்லையா வியட்நாம் மக்கள் '' தாங் நாங்'' அதாவது வேளாண்மைத் தெய்வத்தின் அமுதம் (Food of Agriculture God) என்று புகழ்ந்திருப்பார்கள்! ஆராய்ந்து பாருங்கள்.






நாக்கு ருசி ஒன்றையே கருதுபவர்களுக்கு வேண்டுமானால் கிச்சிலி அரிசியும், சீரகச் சம்பாவும் பாசுமதியும் தேவைப்படுமே ஒழிய, நாளொன்றுக்கு ஒரு வேளை கூட முழு அளவு சாப்பாடு கிடைக்காமல் வாடி வதங்கும் ஏழைகளுக்கு எந்த அரிசியும் ஒன்றுதான்.

'' பாடாத தேனீக்கள், பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ ?'' என்று கேட்டார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். ' இல்லை ' என்றுதான் பதில் சொல்ல வேண்டியுள்ளது.

பசித்திடும்வயிற்றுக்குச் சோறுதான் வேண்டுமே ஒழிய, அது சிறிய சோறா அல்லது பெரிய சோறா என்பது முக்கியமல்ல. அதுவும் ஐ.ஆர். 8 சோறு புரதச் சத்து நிறைந்த சோறு என்பதை மறந்து விடாதீர்கள்! எனவே ஐ. ஆர். 8 பயிரிட உடனே விரைந்து செயல்படுங்கள் '' என்றார் பாண்டியன்.

'' இதுவரை நீங்கள் கூறிய விளக்கத்தைக் கேட்டதும், ஐ. ஆர். 8 நெல் பயிரிடுவதைத் தடுத்து வந்த எனக்கே, ஐ.ஆர். 8 பயிரிட வேண்டும் என்ற ஆசை தோன்றிவிட்டது. வருகிற குறுவையில் ஐ.ஆர். 8 தவிர வேறு நெல்லைப் போடமாட்டேன். இது உறுதி. நான் எப்படிச் செய்கின்றேனோ அதுபோலவே இந்த ஊர் உழவர்கள் அனைவரும் செய்வார்கள். எனவே தயவுசெய்து ஐ.ஆர். 8 நெல் பற்றியும், அதைப் பயிரிடும் முறை பற்றியும் விளக்கிச் சொல்லி விடுங்கள் '' என்று கேட்டார் தலைவர் ஆறுமுகம்.

'' தலைவர் கூறியது போல் நாங்கள் அனைவருமே குறுவையில் ஐ.ஆர். 8 நெல் பயிரிடுகிறோம் ; ஐ.ஆர். 8 நெல் சாகுபடி முறைகளைக் கூறுங்கள் '' என்று உழவர் பெருமக்கள் அனைவரும் சொல்லி வைத்தாற்போல் ஒரே நேரத்தில் கேட்டுக் கொண்டனர்.

ஐ. ஆர். 8 என்ற நெல் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் (International Rice Research Institute) கண்டுபிடிக்கப்பட்ட ரகமாகும். 'டெய்வான்' நாட்டில் பயிரிடும் குட்டை ரக நெல்லை "டி-ஜியோ-வோ-ஜென்" என்பதுடன், "பீடா" என்ற உயரமாக வளரும் பிலிப்பைன்ஸ் நாட்டு நெல் வகையை மகரந்தச் சேர்க்கை மூலம் ஒட்டுச் சேர்த்து (hybridisation) கண்டுபிடிக்கப்பட்டதே ஐ. ஆர். 8 நெல்.

## ஐ. ஆர். 8 நெல்லின் குணங்கள்

"மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரியது" என்பது போல் ஐ. ஆர். 8 நெல் குட்டையாக இருந்தாலும், அது அதிக மகசூல் அளிக்கக்கூடியது என்ற பெருமை பெற்றுள்ளது. இது 105 சென்டி மீட்டர் அல்லது 39 அங்குல உயரமே வளரக்கூடியது. பயிரின் தண்டு உறுதியானது. மழையிலும், காற்றிலும் கூடப் பயிர் சாய்ந்து விடாத தன்மை உடையது.

இதனுடைய வயது 130 முதல் 135 நாட்களேயாகும்.

அதிக அளவு தழைச்சத்தைக் கிரகித்துக் கொண்டு அதற்கேற்ப, அதிக மகசூல் கொடுக்கும் ஆற்றல் உள்ளது. ஏக்கருக்கு 75 கிலோ வரை தழைச்சத்தை இடலாம். அதே அளவு தழைச்சத்தை நம் உள்ளூர் ரகங்களுக்கு இட்டால் பயிர் வளர்ந்து பூ பூப்பதற்குமுன்பே கீழே விழுந்து சேதமடையும். எனவே ஐ. ஆர். 8 இவ்வகையில் தனித்தன்மை வாய்ந்தது.



நாற்றுகள் உறுதியாகவும், விரைவாகவும் வளரும்.

நெல் சிறிது பருமனாகவும், அரிசி வெள்ளையாகவும் இருக்கும். சோறு வெண்மையாகவும், சுவையாகவும் இருக்கும்.

அறுவடைக்குப் பின் உடனே நெல் முளைக்காது. 3 வாரங்களுக்குப் பின்னால்தான் முளைக்கும். நம் உள்ளூர் ரகங்கள் அறுவடைச் சமயத்தில் மழை பெய்து தண்ணீர் தேங்கி நின்றால் சாய்ந்து கிடக்கும் கதிர்களில் உள்ள நெல் மணிகள் முளைத்துவிடும். மழையின் காரணமாக ஒரு வாரம் வரைக்கும் நெல் அடிக்க முடியாமல் கட்டுகளாகவே வைக்கப்பட்டிருந்தால், நம் உள்ளூர் ரகங்கள் முளைத்துவிடும். ஆனால் ஐ. ஆர். 8 முளைக்காது.

உள்ளூர் ரகங்களின் கதிர்களில் இருந்து நெல்மணிகள் உதிர்ந்துவிடும். ஆனால் ஐ. ஆர். 8 அவ்வளவு எளிதாக உதிராது.

நெல்லை அரைக்கும்பொழுது அரிசி சிறிது உடைந்துவிடும். 'பேக்டீரியல் பிளைட்' என்னும் இலைக்கருகல் நோய் தாக்கும். இவ்விரண்டு குறைபாடுகளே ஐ. ஆர். 8 நெல்லில் உள்ளன.

இதுவரை பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் சோதனை செய்த நெல் வகைகளில் ஐ. ஆர். 8 ரகமே அதிக அளவு மகசூல் கொடுத்துள்ளது. எனவேதான் இதற்கு "அதிசய நெல்" (Wonder Rice) என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்.

இத்தகைய பெருமை பெற்ற ஐ. ஆர். 8 நெல்லை வேளாண்மைத்துறை பரிந்துரைக்கும் முறையில் சாகுபடி செய்வீர்களேயானால், நீங்களும் பெரு மகசூல் பெற்றுப் பெரு லாபம் அடைந்து பெரு வாழ்வு வாழலாம்.

அடுத்து ஐ. ஆர். 8 நெல் பற்றிய சாகுபடி முறைகளைச் சுருக்கமாக விளக்குகின்றேன். ஐ. ஆர். 8 பயிரிட முன்வரும் ஒவ்வொருவருக்கும் சாகுபடிக் குறிப்புகள் பற்றிய முழு விவரங்களும் அடங்கிய சிறு புத்தகத்தை இலவசமாக அளிக்கின்றேன். அத்துடன் அவ்வப்போது உங்களைச் சந்தித்து ஐ. ஆர். 8 சாகுபடி பற்றிய விளக்கங்களை நானும், கிராம சேவகரும் அளிக்கின்றோம். எனவே இப்பொழுது சுருக்கமாகவே தெரிவிக்கின்றேன்.

## சாகுபடி முறைகள்

தமிழ்நாட்டில் ஐ. ஆர். 8 நெல்லை கார், சொர்ணவாரி பருவத்திலும், (மே முதல் செப்டம்பர் வரை) நவரைப் பருவத்திலும் (ஜனவரி முதல் மே வரை) பயிரிடலாம். கீழ் பவானி, அமராவதி புதிய பாசனப் பகுதிகளில் சம்பா பருவத்தில் (ஆகஸ்ட்டு முதல் டிசம்பர் வரை) பயிரிடலாம். மிகுந்த கவனத்துடன், முன்னெச்சரிக்கையுடன் சாகுபடி செய்வதென்றால் ஆண்டு முழுவதுமே ஐ. ஆர். 8 நெல்லைப் பயிரிடலாம்.

ஒரு ஏக்கர் நடவுசெய்ய 18 கிலோ விதையை 12 சென்ட் நாற்றங்காலில் விதைக்க வேண்டும்.

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கரிம பாதரசக் கலவை மருந்து அல்லது டி.எம்.டி.டி. (T.M.T.D.) என்ற மருந்து விதையுடன் சேர்த்து விதையுடன் மருந்து கலக்கும் கருவியில் இட்டு (Seed treating drum) விதையுடன் மருந்து நன்கு கலக்கும்படிச் செய்ய வேண்டும். அதன் பின் விதையை முளை கட்ட வேண்டும்.

வெந்நீரில் விதையைப் போட வேண்டும் என்று சொல்கிறார்களே அது உண்மையா ?'' என்று கேட்டார் ராமசாமி என்ற ஊராட்சி மன்ற உறுப்பினர்.

'' பேக்டீரியல் பிளைட் '' என்னும் நோயால் தாக்கப்பட்ட நெற்பயிரிலிருந்து கிடைத்த விதைகளை நாற்று விடுவதற்குப் பயன்படுத்தினால் மட்டுமே வெந்நீர்ச் சிகிச்சை செய்ய வேண்டும். வெந்நீர்ச் சிகிச்சை செய்வது சற்றுக் கடினமானது. கவனமாகச் செய்ய வேண்டும். உங்களுக்கு நல்ல தரமான விதைகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கின்றேன். நீங்கள் வெந்நீர்ச் சிகிச்சை செய்ய வேண்டாம். தேவைப்பட்டால் கிராம சேவகரே அதைச் செய்து கொடுப்பார். அது பற்றிய கவலை வேண்டாம்.


நாற்றங்கால் அமைப்பது பற்றி நாங்களே செய்து காட்டுகிறோம். இரும்புக் கலப்பையால் நடவு வயலை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். ஏக்கருக்கு 2,300 கிலோ தழை அல்லது 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு போட வேண்டும்.

கடைசி உழவில் 35 கிலோ மணிச்சத்து அளிக்க 220 கிலோ சூப்பர் பாஸ்பேட்டையும், 35 கிலோ சாம்பல் சத்து அளிக்க 60 கிலோ மூரியேட் ஆப் பொட்டாசையும் அடி உரமாக இடவேண்டும்.

நடுவதற்கு முன்பு 45 கிலோ தழைச்சத்து அளிக்க 225 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 100 கிலோ யூரியாவைப் போடவும்.

நாற்றுவிட்ட 26 முதல் 28 நாட்களில் நாற்றை நட்டுவிட வேண்டும். நாற்றுகளை வரிசைக்கு வரிசை 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்), வரிசையில் பயிருக்குப் பயிர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளி விட்டு, குழிக்கு 2 பயிர் வைத்து நடவுசெய்ய வேண்டும்.

நடவுசெய்த 15-ஆம் நாள் ஊடு உழவுக் கருவியால்



(Inter cultivator) முதல் களை எடுத்து மருந்து தெளிக்க வேண்டும்.

'' களையெடுத்த பின்புதான் மருந்து தெளிக்க வேண்டுமா ?'' என்றார் ஆறுமுகம்.

'' எண்ணெய் தேய்த்துக் கொண்டு கறி சாப்பிடுகிறீர்களே அதுபோல் களையெடுத்துவிட்டு மருந்து தெளிப்பது நல்லது '' என்றார் பாண்டியன்.

எல்லாரும் சிரித்தனர்.

நடவுசெய்த 21-ஆம் நாள் 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவைப் பயிர் வரிசைகளுக்கு இடையில் மேலுரமாகத் தூவ வேண்டும்.

நடவுசெய்த 30-ஆம் நாள் 2-ஆம் முறை மருந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 40-ஆம் நாள் 2-ஆம் முறை களையெடுக்க வேண்டும்.

நடவு செய்த 45-ஆம் நாள் 3-ஆம் முறை மருந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 49 முதல் 54 நாட்களுக்குள் (பூ உருவாகும் சமயத்தில்) 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியா சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை இரண்டாம் தடவையாக மேலுரமாக இடவேண்டும்.

தொண்டைப் பூவாக இருக்கும் சமயத்தில் 4-ஆம் முறை மருந்து தெளிக்க வேண்டும்.


நெற்பூவில் பால்பிடிக்கும் சமயத்தில் பி.எச்.சி. மருந்துத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும்.

மருந்து கலப்பது, தெளிப்பது பற்றிய முழு விவரங்களையும் பின்பு ஒரு நாள் செய்து காட்டுகிறோம். அப்பொழுதுதான் உங்களுக்கு எளிதில் புரியும்.


இவ்வாறு முறைப்படி சாகுபடி செய்தால், நிச்சயமாக நீங்களும் ஐ. ஆர். 8 நெல் பயிரிட்டு அதிக மகசூல் பெறலாம். எனவே ஐ. ஆர். 8 பயிரிட முன் வாருங்கள் என்று உங்கள் அனைவரையும் மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன் '' என்று கூறி அமர்ந்தார் பாண்டியன்.

அடுத்து கிராமசேவகர் சேரலாதன் எழுந்து, '' ஐ. ஆர். 8 நெல் சாகுபடி செய்வதற்குத் தேவையான விதைகளையும், பூச்சி, பூஞ்சாள மருந்துகளையும் ஜீப்பில் கொண்டு வந்து உங்கள் ஊரிலேயே கொடுத்து விடுகின்றோம். இரசாயன உரம் வாங்கக் கடன் தேவைப்பட்டவர்கள் நாளையே மனு எழுதிக் கொடுத்தால், இன்னும் ஒரு வாரத்திற்குள்ளாகவே தீவிர உரக்கடன் திட்டத்தின் கீழ் கடன் கிடைக்க ஏற்பாடு செய்து விடுகின்றோம். உங்களுக்கு எல்லா உதவிகளையும் எப்பொழுதும் செய்ய நமது ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும், வேளாண்மை வளர்ச்சி அலுவலரும், நானும் காத்திருக்கின்றோம். எங்களது இலட்சியமெல்லாம் நீங்கள் அனைவரும் ஐ.ஆர். 8 நெல் பயி

ரிட்டு முன்னேற வேண்டும் என்பதுதான். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை! நாங்கள் கூறும் முறைப்படியும், குறிப்பிட்ட காலத்திலும் ஒவ்வொரு சாகுபடி வேலையையும் தவறாமல் செய்ய வேண்டும்'' என்று கூறி முடித்தார்.




'' இன்றுதான் நம் ஊர் உழவர்களுக்கு எல்லாம் நல்ல காலம் பிறந்திருக்கிறது என்று நினைக்கின்றேன். அதற்கு அடையாளமாக, இன்னும் கொஞ்ச நேரத்திலேயே மழை வந்துவிடும் என்று நினைக்கின்றேன். நல்ல காலம் பிறப்பதற்கு மூவேந்தர்களும் நமக்கு உதவி செய்துள்ளார்கள். மூவேந்தர் என்று யாரைக் குறிப்பிடுகின்றேன் என்று புரியவில்லையல்லவா உங்களுக்கு? நம்ம ஊராட்சி மன்றத் தலைவர் கரிகாலன், வேளாண்மை வளர்ச்சி அலுவலர் பாண்டியன், கிராம சேவகர் சேரலாதன் ஆகியவர்களையே குறிப்பிடுகின்றேன். அவர்களுக்கு நம் அனைவரின் சார்பாகவும் நன்றியைக் கூறிக் கொள்வதுடன்,



கட்டுக்கலங்காண கதிர் உழக்கு நெற்காண எட்டுத்திக்கும் பயிரிடுவோம் ஐ. ஆர். எட்டு என்று உறுதி கூறுவோம்'' என்றார் தலைவர் ஆறுமுகம். எல்லாரும் அவர் கூறியது போல் கூறினர்கள். முழக்கம் பேரொலியாகக் கிளம்பியது. அதே நேரத்தில் மழையும் பொழிய ஆரம்பித்து விட்டது. உறுதியோடு கூட்டம் கலைந்தது.


# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.


மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**

பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா


SPB

உயர் ரகத்தைக் குறிக்கும்
வாட்டர் மார்க்



SPB 777 TMA

# பிச்சைக்காரர்



## மறுவாழ்வு நிதிக்காக

## தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் வாரி வழங்கிடும் ஏராளப் பரிசுகள்! மொத்தப் பரிசுத் தொகை :

## 38 லட்சம் ரூபாய். 3333 பரிசுகள்!

**ஜூன் 3ஆ முதல்வர் பிறந்த நாளில் 33-வது குலுக்கல் துவக்கம்**

**சிறப்புப் பரிசுகள் :** ஒரு முதற் பரிசு **10** லட்சம் ரூபாய்

- ஒரு இரண்டாவது பரிசு 2 லட்சம் ரூபாய்
- ஒரு மூன்றாவது பரிசு 1 லட்சம் ரூபாய்
- 30 நான்காவது பரிசுகள் (ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபாய்) ... 3 லட்சம் ரூபாய்



100 பேருக்கு ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 5000 ரூபாய்
100 பேருக்கு ஆறாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 3000 ரூபாய்
100 பேருக்கு ஏழாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 2000 ரூபாய்
1000 பேருக்கு எட்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 1000 ரூபாய்
2000 பேருக்கு ஒன்பதாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 100 ரூபாய்

**துவக்கம் ஜூன் 3 குலுக்கல்: 12-7-1971**

*இதுவரை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் உருவாக்கிய லட்சாதிபதிகள் எண்ணிக்கை, 245*

வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு : இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9.
10 வரிசைகள் வெளியிடப்பட்டது
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி, இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு, சென்னை-2

10 வரிசைகள்
இவ்வளவு பரிசுகளுக்கும்
உரிய சீட்டு
ஒன்றின் விலை ரூ. 1/- தான்

செலவு ஒரு ரூபாய்



வரவோ பல லட்ச ரூபாய்

## பார்வையற்றவர்க்கும் பயனுள்ள வாழ்வு

காணார்!

கேளார்!

கால் முடம்பட்டோர்!

பேணுநர் இல்லோர்!

ஆகியவர்களில் பெரும் பாலோர் 'பிச்சை எடுப்பது ஒன்றுதான் பிழைப்புக்கு வழி' என்று கருதுகிறார்கள்.

ஆனால் பிச்சை எடுப்பவர்களில் பெரும்பாலோராய் உள்ள காணார் (Blind) காண்பவர்க்கும் வழிகாட்ட முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார் திரு சாதன் சந்தர குப்தா.

கல்கத்தாவில் உள்ள பார்வையை இழந்த திரு சாதன் சந்தர குப்தா சமுதாயத்திலே மேன்மையான நிலைமைக்கு உயர்ந்திருப்பதை நோக்கும்பொழுது பார்வையில்லாத குறை அவருடைய வளர்ச்சியைத் தடை செய்துவிடவில்லை என்பது புலனாகின்றது.

பார்வையற்ற அவர் 1934-ஆம் ஆண்டில் 'மெட்ரிகுலேஷன்' தேர்வு எழுதி நான்கு பாடங்களில் உயர்ந்த நிலையில் (Distinctions) தேர்ச்சி பெற்றுள்ளார். 1936-ஆம் ஆண்டில் இடைநிலைத் தேர்வு(Intermediate Examination) எழுதித் தேர்ச்சி அடைந்துள்ளார். 1938-ஆம் ஆண்டில் 'ஆனர்ஸ்' பட்டதாரியானார். அதன் பின் எம். ஏ., எல். எல். பி. தேர்வுகளில் வெற்றி பெற்று சட்ட நிபுணராக (Barrister-at-law) ஆனார். அவர், பாராளு மன்ற உறுப்பினராகவும் சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவ்வாறு தனக்கென ஓர் ஒப்பற்ற நிலைமையை இந்த நாட்டில் உருவாக்கி விட்டார்.

அவரது வாழ்க்கை, 'பார்வை இழந்தவர்களுக்குத் தகுந்த வாய்ப்பளித்தால் அவர்களால் பார்வை உள்ளவர்களுக்கும் நல்ல வழி காட்ட முடியும்' என்பதைத் தெளிவாக்குகிறது. வியப்புக்குரிய அவரது வாழ்க்கை வரலாறு, கல்வி கற்கும் வயதில் இந்தியாவில் உள்ள 15,00,000 பார்வை இழந்தவர்களைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பாததனால் இந்திய நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நிலையான ஆற்றல் இழப்பைக் காட்டும் கருவியாக அமைந்துள்ளது.

பார்வை இழந்தவர்களுக்கு அளிக்கப்படும் மேற்படிப்பு—விதிவிலக்காக அவர்கள் தனி ஆற்றல் பெற்றவர்களாக இல்லாவிட்டால்-அதிகப் பயனளிக்காது என்பதும் உண்மை. ஆனால், அவர்களுக்குக் கைத்தொழில் கற்றுக் கொடுப்பது, அவர்களுடைய பிழைப்புக்கு வழி செய்து கொடுத்து வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் சிறந்த வழியாக அமையும். கூடைகள், கயறு விரிப்புகள், தூரிகைகள், பாய்கள், பிரம்பு நாற்காலிகள் ஆகியவைகளைச் செய்தல், செருப்புகளைச் செப்பனிடுதல், ஆடைகளில் பூவேலைப்பாடு செய்தல், கைத்தறி ஆடை நெய்தல், நாற்காலிகளில் மீண்டும் பிரம்புகளினால் பின்னுதல் போன்ற கைத்தொழில்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பது நல்லதோர் பணியாகும்.

### தமிழ்நாடு அரசின் பணி.

வாழும் வகையற்றுச் சமுதாயத்தின் அடித்தளத்திலே வாடி வதங்கும் ஏழை எளியவர்களின் வாழ்வை வளப்படுத்தி ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயலும் தமிழ்நாடு அரசு, பார்வை இல்லாதவர்களும் தொழிற்சாலைகளிலே வேலை செய்து சம்பாதித்து வாழ அவர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கக் கிண்டியில் உள்ள தொழிற்பேட்டையில் ஒரு பட்டறையை நிறுவியுள்ளது. தமிழ் நாடு அரசின் இப்புதிய முயற்சி உண்மையிலேயே ஒரு பெரிய செயல் மட்டுமல்ல; அரிய செயலுமாகும்.

பார்வையற்றவர்களுக்குத் தொழில் பயிற்சி அளிக்கும் அப்பட்டறையின் பராமரிப்புச் செலவுகளைத் தமிழ்நாடு அரசு ஏற்றுவருகிறது. அமெரிக்க அரசு ரூபாய் 2,54,640 மானியம் வழங்கியிருக்கிறது.

கடைசல், துளையிடுதல் ஆகிய வேலைகளுக்கான விசைப் பொறிகள் உள்ள அப்பட்டறையில் சென்ற 3 ஆண்டுகளாக 100 இளைஞர்களுக்கும் மேல் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்களுள் 38 பேர்களுக்குக் கிண்டியிலும், பிற இடங்களிலும் உள்ள தொழிற்சாலைகளில் வேலை கிடைத்திருக்கிறது.

பார்வையற்றோருக்கான பயிற்சிப் பட்டறையை நடத்துபவர் திரு பி. ஏ. நந்தகோபால் என்பவராவார். நிர்வாகத் திறமை மிகுந்த அவர், பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசினர் பயிற்சிப் பள்ளியின் முதல்வர் என்பதும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

கண் பார்வையற்றவர்கள் தங்கள் கைகளாலேயே வேலை செய்து பிழைப்பதற்கு அமெரிக்காவில் எப்படிப் பயிற்சி அளிக்கின்றார்கள் என்பதை நேரில் சென்று அறியும் வாய்ப்பு அவருக்கு 1967- ஆம் ஆண்டில் கிடைத்தது. தமிழ்நாட்டில் எந்தெந்தவகை வேலைகள் எளிதாகக் கிடைக்குமோ அவைகளின் அடிப்

படையிலேயே தொழிற் பயிற்சித்திட்டத்தை அவர் அமைத்துள்ளார். அவர் முதல்வராக இருக்கும் பூவிருந்தவல்லி அரசினர் பயிற்சிப் பள்ளியில் 300 மாணவர்கள் பள்ளியிறுதி ஆண்டுத் தேர்வுவரை கற்கிறார்கள். அங்கு பார்வையற்றவர்களுக்கு ஆசிரியர் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. அப்பயிற்சிக்கு ஐ. நா. கல்வி விஞ்ஞான பண்பாட்டுக் கழகம் (யுனெஸ்கோ) உதவி செய்து வருகிறது. அத்துடன் அமெரிக்க அரசின் தொழில் மறுவாழ்விப்பு நிர்வாகமும் பூவிருந்தவல்லியிலுள்ள பயிற்சிப் பள்ளிக்கூடத் திட்டத்துடன் ஒத்துழைக்கிறது.



கிண்டியிலுள்ள தொழிற் பேட்டையில் பார்வையற்ற தொழிலாளி ஒருவர் கடைசல் இயந்திரத்தில் வேலை செய்கிறார்.

பார்வையற்றவர்கள் விசைப்பொறி நிலையங்கள், அச்சுக்கூடங்கள், சிப்பம் கட்டும் இடங்கள், சிறிய பொறியியல் கூடங்கள் ஆகியவைகளில் வேலை செய்ய எளிதில் பழகிக் கொள்ளலாம். அவ்வாறு பழகிக் கொண்டால், பார்வையற்றவர்களுக்கு மறுவாழ்வு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறிய பொறியியல் வேலைகளில் பயிற்சி அளித்துப் பார்வையற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டில் நடைபெறுகிறது. இப்பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை கொடுத்து உதவத் தனிப்பட்ட தொழிலதிபர்களும் முன் வந்தால், மேலும் பல பார்வையற்றவர்களுக்குப் பயிற்சியும் மறுவாழ்வும் தமிழ் நாடு அரசால் அளிக்க முடியும்.

## கண் பார்வையற்றவர்களின் கணக்கு.

இவ்வாறு அரசும், தனிப்பட்டவர்களும் கண்பார்வை இழந்தவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க முயன்று வந்த போதிலும் உலகெங்கணும் உள்ள 1,50,00,000 பார்வையிழந்தவர்களின் இருண்ட வாழ்வுக்கு இன்னும் விடிவு காலம் ஏற்படவில்லை. அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் அதாவது 50 இலட்சம் கண் பார்வை இழந்தவர்கள் இந்தியாவில் இருப்பதாக 1969-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய அரசின் மாதிரி ஆய்வு கூறுகிறது.

நரக வேதனையுடன் கசப்பான வாழ்க்கையை அனுபவித்துவரும் கண் பார்வை இழந்தவர்கள், நாட்டு மக்கட் தொகையில் ஒரு பகுதியினராகவே விளங்குகிறார்கள். இவர்களில் 90 சதம் பேர்களைக் கண் பார்வை இழப்புக்கு ஆளாகாமலேயே மீட்டிருக்க முடியும்; 5 சதம் பேர்களைச் சிகிச்சை செய்து குணப்படுத்தி இருக்க முடியும்; ஆனால் ஏழ்மையும் அறியாமையும் அல்லவா அவர்களை அடிக்கடி அணுகும் பெரும் தரகர்களாக விளங்குகின்றன!

## பார்வையிழப்புக்கான காரணங்கள்.

குழந்தைகளாக இருக்கும் பொழுது ஏற்படும் கண்ணோய், பெரிய அம்மை, மேகநோய், கண் இமைகளின் உட்பகுதியில் தோன்றும் 'டிரகோமா' (trachoma) அல்லது 'கிரனுலர்லிட்ஸ்' (granular lids), வயிற்றுக்குப் பற்றாத சத்தற்ற உணவு, தவறான சிகிச்சைகள், விபத்துகள், காயங்கள், கிட்டப் பார்வை (short sight) கருடப்பார்வை (squint) கண்ணிலே சதைபோல் வளர்ந்து பார்வையை மங்கச் செய்யும் 'கேட்டராக்ட்' (cataract) என்னும் நோய், கண்மணியில் ஏற்படும் அதிக அழுத்தம் காரணமாகக் கண் பார்வையைக் குறைக்கும் 'கிளாகோமா' (glaucoma) என்னும் நோய் ஆகியவைகளே கண் பார்வை இழப்புக்கான முக்கிய காரணங்களாகும்.

பெரும்பாலான கண் பார்வை இழந்தவர்கள் ஏழையாக இருப்பதால் பள்ளிக்கூடம் சென்று பயிலவோ ஏதேனும் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ளவோ வாய்ப்பின்றி இருக்கிறார்கள். அவர்களுக்குப் பிச்சை எடுப்பது ஒன்றுதான் வாழ்வுக்குரிய வழியாகத் தோன்றுகிறது. இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் சீர்குலைவு ஏற்படுகிறது. இந்தியாவில் உள்ள 50 இலட்சம் பார்வை இழந்தவர்களில் 30 சத வீதம் பேர்கள் அதாவது 15,00,000 பேர்கள் கல்வி கற்பதற்குரிய வயதினராகவே உள்ளனர்.

## பார்வையற்றவர்களுக்கான கல்விக்கூடங்கள்.

அவர்களது வாழ்க்கைப் பிரச்சனையைக் கல்வி மூலமாகவே தீர்த்துவைக்க இயலும். ஆனால் இந்தியாவெங்கும் கண்பார்வையிழந்தவர்களுக்குக் கல்வி அளிப்பதற்கென உள்ள பள்ளிக்கூடங்கள் 120தான். அவைகளில்5,000 பேர்களுக்கு மட்டுமே கல்வி கற்பிக்க வசதியுள்ளது.

கண்பார்வைஇழந்தவர்களுக்குக் கல்வி கற்பிப்பதென்பது எளிய செயலல்ல ; நீண்ட காலத்திற்கு மேற்கொள்ள வேண்டியதும் தொல்லை மிகுந்ததுமான செயலாகும். அதற்கு அதிகச் செலவு செய்ய வேண்டியிருப்பதுடன், தனிச் சாதனங்களையும் பயன்படுத்த வேண்டியுள்ளன. இருப்பினும் ஒருசில பள்ளிக்கூடங்களுக்கு அரசு அளிக்கும் மானியம்

மிகவும் குறைவாகவே இருக்கிறது. கண் பார்வை இழந்த குழந்தைகள் ஏழ்மை என்னும் அடித்தளத்திலிருந்தே கல்வி கற்க வருவதாலும், அவர்களால் கல்வி கற்பதற்குரிய கட்டணங்களைச் செலுத்தமுடியாமல் இருப்பதாலும் இப்பள்ளிக்கூடங்களை நடத்த தவிர்க்க முடியாத சங்கடங்களுக்களுக்கு எதிராகப் போராட வேண்டியுள்ளது. மேலும் அப்பள்ளிக் கூடங்களில் நிலவும் பொருளாதாரப் பற்றாக்குறை, பள்ளிக்கூடத் தலைவர்கள் ஆசிரியர்களின் வாழ்வுக்குத் தேவையான கூலியைக் கொடுப்பதையும்தடுக்கிறது.எனவே, அப்பள்ளிக்கூடங்களில் சொற்ப சம்பளத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ஆசிரியர்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். பார்வையிழந்தவர்களுக்காக உள்ள பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள், சாதாரண பள்ளிக்கூட ஆசிரியர்களின் வேலையைவிட இரண்டு மடங்கு சிக்கலான வேலையை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதன் காரணமாகவும் ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. இருக்கின்ற ஒரு சில ஆசிரியர்களும் வெறுப்புடனே அல்லது நிறுவனத்தின் மீது கொண்டுள்ள ஆர்வம் காரணமாகவோ தான் பணியாற்றுகிறார்கள்.

கண் பார்வையற்ற குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் மற்றுமொரு சங்கடத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது. ஒரு சில பாடப் புத்தகங்களே 'ப்ரெய்ல்லி' (braille) முறையில் அச்சிடப் பெற்றுள்ளன. எனவே அநேக புத்தகங்கள் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன .'பாரதி ப்ரெய்ல்லி' ( Bharati braille) முறையில் மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

தற்பொழுது இந்தியாவில் ஒரே ஒரு 'ப்ரெய்ல்லி' அச்சகம்தான் உள்ளது. அதுவும் டேராடூனில் உள்ளது. அங்கிருந்து இந்தி மொழியில் ஒரு இதழ் வெளியிடப்படுகிறது. மேலும் இந்திய அரசின் கல்வி அமைச்சகம் டேராடூனில் வயது வந்தவர்கள் பயிற்சி நிலையம் ஒன்றையும் நடத்தி வருகிறது. அந்நிலையம் 1943-ஆம் ஆண்டில் கலோனல் சர் குளுதா மெக்கன்சி (Colonel Sir Clutha Mackenzie) என்ற கண் பார்வையிழந்த முன்னாள் படைவீரரின் வழி காட்டுதலுடன் துவக்கப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்பு, கண் பார்வையிழந்த அயல்நாட்டினருக்கு உதவி செய்யும் அமெரிக்க நிறுவனம் கல்கத்தாவிலுள்ள பார்வை யிழந்தோர் பள்ளிக்கு ஒரு 'ப்ரெய்ல்லி' அச்சகத்தைப் பரிசாக அளித்தது. ஆனால் அது இன்றும் பயன்படுத்தப்படாமலே உள்ளது. இந்திய அரசு டேராடூனில் ஒரு மாதிரி பள்ளிகூடத்தையும், பெண்கள் பயிற்சிப் பள்ளியையும், 'ப்ரெய்ல்லி' முறையில் அச்சிடப்பெற்ற புத்தகங்களைப் பரப்பும் நூல் நிலையம் ஒன்றையும் அமைக்க விரும்பியுள்ளது; இத்திட்டத்திற்கென ரூபாய் 3,50,000 ஒதுக்கியுள்ளது.

## பார்வையற்றவர்களுக்கு உதவும் சங்கம்.

பார்வை இழந்தவர்களுக்கு உதவி செய்ய முதன் முதலில் ஒருமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கை எடுத்தது இந்திய அரசு அல்ல; இந்திய மக்களே என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1952-ஆம் ஆண்டில் பம்பாய் நகரில் அனைத்திந்திய பார்வை இழந்தோர் மாநாடு நடந்தபோதே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பயனாய் பார்வையிழந்தோர்களுக்கான தேசிய சங்கம் ( National Assosiation of the blind ) துவக்கப்பட்டது. அதே நேரத்தில் ஒரு குழு 'பார்வையிழந்தோர் வாரவிழா' ஏற்பாடு செய்து பாதுகாவலான பணிமனை (Sheltered workshop) ஒன்று அமைக்க ரூபாய் 1·5 இலட்சம் நிதி திரட்டியது. பார்வை யிழந்தோர்களுக்கான தேசிய சங்கம் பார்வையற்ற தொழிலாளிகளுக்குப்பயிற்சிஅளிக்கவும், வேலை அளிக்கவும் பம்பாய் நகரில் 20 பணி மனைகளை அமைத்துள்ளது. அரிமா சங்கத்தினரின் கூட்டுறவுடன் 1970-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29-ஆம் நாள் வயது முதிர்ந்த பார்வையிழந்தோர்களுக்குரிய இல்லத்தை அச்சங்கம் அமைத்துள்ளது. இம்மாதிரி இல்லம் இந்தியாவிலேயே ஒன்றுதான் உள்ளது.

மேலும் அச்சங்கம் பார்வையிழந்தோர் நல் வாழ்வு (Blind welfare) என்ற இதழை ஆண்டிற்கு மூன்று முறை வெளியிடுகிறது.

கிண்டி தொழிற் பேட்டையில் பார்வையற்றவர் பயிற்சி பெறுகின்றார்.



பார்வை யிழந்தவர்களுக்கான பள்ளிக்கூடங்களில் ஆண் பெண் இருபாலர்களும் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தபோதிலும், அப்பள்ளிகளில் படிக்கும் பெண்களின் தொகை மிக மிகச் சொற்பமாகவே உள்ளது. இந்திய அரசின் 1944-ஆம் ஆண்டின் அறிக்கையின்படி அந்த ஆண்டில் 180 பார்வை யிழந்த பெண்கள் மட்டுமே இந்தியாவில் படித்துள்ளனர். அதன் பிறகு கல்வி கற்கும் பார்வை யிழந்த பெண்களின் தொகை உயரவே இல்லை. ஒவ்வொரு 100 பார்வை யற்றஆண்களுக்கும் இந்தியாவில் 111 பார்வை யற்ற பெண்கள் உள்ளனர். அப்படி இருந்தும் கல்வி கற்கும் பார்வை

யற்ற பெண்களின் தொகை உயராதது வருத்தத்திற்குரியதே என்ருல் மிகையாகாது.

பார்வை அற்றவர்களுக்குரிய கல்வி வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே இருந்தாலும், அவர்களை எதிர்நோக்கியுள்ள தடைகள் அவர்களுக்கு எரிச்சலூட்டுவதாக இருந்தாலும், பார்வையிழந்த மாணவர்கள் சிறந்த முடிவுகளைத் தோற்றுவிக்கின்றனர். பார்வை இழந்தவர்களாலும் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத் தகுந்த அளவு உதவ முடியும்.

எனவேபார்வையிழந்தவர்களை ஒரு சில தயாளகுணம் படைத்த பெரும் பணக்காரர்களின் உதவியினல் மட்டுமே வாழ்பவர்களாக விட்டுவிடக்கூடாது. ஊனமுற்றவர்கள் பொதுவாகவே நுண்ணறிவு உள்ளவர்கள்.

---

### உண்மையைக் கூறவேண்டும்

தம்மால் இயலவில்லை என்பதைக் கூறிடுவது தகுதிக்குக் குறைவல்ல! உண்மை நிலையை மறைப்பது நீது ஆகாது என்ற உணர்வு உடையவர்கள், தம்மால் பணியாற்ற முடியாது போயிற்று என்பதனைக் கூறிடுவர். இவ்வகையினர் மிகச் சிலரே! மிகப் பலருக்கு இத்தகைய இயல்பு ஏற்படாது.

—பேரறிஞர் அண்ணு

---

ஆனல் உணர்ச்சி வயப்பட்டவர்கள். இன்னல்படுவதற்காகவே இவ்வுலகில் வாழ்கின்ரேம் என்ற எண்ணத்தைப் போல் வேறு எதுவும் அவர்களைமனவேதனையுற வைக்காது. ஆகவே அத்தகைய எண்ணம் அவர்கள் மனத்தில் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம் அனைவரின் கடமையுமாகும். தங்களுக்குள்ள ஒருசில வாய்ப்புகளைக்கொண்டே வியக்கத்தக்க சாதனைகளைத் தோற்றுவிக்கக் கூடியவர்கள் அவர்கள். உலகெங்கிலும் உள்ள பார்வையிழந்தவர்களே முதன் முதலில் 'ப்ரெய்ல்லி என்ற ஒரே மாதிரியான எழுத்துகளைப் பயன்படுத்திவருவதால், காணுர் காண்பவர்க்கு வழிகாட்ட முடியும்' என்பதற்குச் சான்ருக விளங்குகிருர்கள். அவர்கள் வாழ்வு வளம் பெற நாமும் ஏதாவது உதவ வேண்டாமா?

## காணுதவர்களுக்குக் கல்வி தரும் கருவி

கண் பார்வை இழந்தவர்களுக்குக் கற்பிப்பதற்குரிய ஒரு புதிய சாதனத்தை ஸ்வீடன் நாட்டிலுள்ள சாப்-ஸ்கேனியா ஏபி (Saab-Scania AB) என்ற நிறுவனம் சமீபத்தில் உருவாக்கியுள்ளது. அச் சாதனம் ஒரு 'எலக்ட்ரானிக்' படம் அச்சிடும் கருவியாகும். அக்கருவி ஆசிரியரால் வரையப்பட்ட சித்திரத்தையோ அல்லது உருவத்தையோ பார்வையிழந்தவர்களும் அறிந்துகொள்ளும் வகையில் மாற்றிக் காட்டும் தன்மையுடையது.

அக்கருவியில் 3 முக்கிய பகுதிகள் உள்ளன. முதல் பகுதி சித்திரம் வரையும் பலவகைப் பகுதியாகும். இதில் படம் வரையும் கை (Drawing arm) பொருத்தப்பட்டிருக்கும். ஆசிரியர் அக்கையைப் படம் வரையும் முழுமைக்கும் நகர்த்தக்கூடிய நிலைமையில் பொருத்தப்பட்டிருக்கும்.

இரண்டாவது பகுதி பார்வையிழந்தவர்கள் படிக்கும் பகுதியாகும். அதில் தடிப்பான காகிதம் ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். சித்திரம் வரையும் பகுதியிலிருந்து 'எலக்ட்ரானிக்' சைகை கிடைத்தவுடன் தடித்த காகிதத்தின் கீழேயுள்ள மேடு பள்ளங்களைக் குறிக்கும் பேனு (Relief pen) சித்திரத்தைக் காகிதத்தில் தடிப்புகள் வடிவில் உருவாக்கிவிடுகிறது.

மூன்ருவது பகுதி ஒரு டேப் ரிக்கார்டராகும். இதிலிருந்து முன்பே பதிவு செய்யப்பட்ட அறிவிப்புகள் ஏக காலத்தில் ஒலி எழுப்பும். விரும்பினல் டேப் ரிக்கார்டரை நிறுத்திவிட்டு, ஆசிரியரே நேரடியாக வகுப்பு நடத்தலாம்.

இக்கருவியின் மூலம், தற்பொழுது வழக்கத்தில் உள்ள முன் தயாரிப்புப் படங்களின் மூலம் கற்பிப்பதில் உள்ள கால தாமதத்தையும், மன எரிச்சலையும் தவிர்க்க முடியும். இக்கருவியை உருவாக்கும் செலவில் பெரும் பகுதியையும் 'சாப் ஸ்கேனியா' நிறுவனமே ஏற்றுக் கொண்டுள்ளது. ஓரளவு மானியத்தை ஸ்வீடன் நாட்டு நுட்ப மேம்பாட்டு வாரியம் கொடுத்துள்ளது. ஊனமுற்ருேர்க்கான ஸ்வீடன் நாட்டு நிறுவனமும், பார்வையற்றவர்களுக்கான ஸ்வீடன் நாட்டுச் சங்கமும் ஒன்று கூடியே இந்த எலக்ட்ரானிக் கருவியை உருவாக்கியுள்ளன.



# பாவையின் பயணம் மலைமீது...

"சீறிவரும் புலியதனை முறத்தினாலே சிங்கார மறத்தி ஒருத்தி துரத்தினளே!" என்று பைந்தமிழ்ப் பாடல் ஒன்று பழந்தமிழ்நாட்டில் வாழ்ந்த பெண்ணொருத்தியின் வீரத்தைப்பற்றி வியந்துரைக்கிறது. அத்தகைய வீரமும் தீரமும் உள்ள பெண்கள் இன்றைய தமிழகத்திலும் உள்ளார்கள் என்பதற்கோர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறார் செல்வி ஹேமா.

கொட்டும் பனியையும், குலை நடுங்க வைக்கும் குளிரையும், குருதியை உறிஞ்சக் காத்திருக்கும் அட்டைகளையும் கண்டு அஞ்சாமல், "கரணம் தப்பினால் மரணம்" என்று சொல்லக் கூடிய, விபத்து நிறைந்த செங்குத்தான மலைச்சரிவுகளில் உயிரையும் பொருட்படுத்தாமல் ஏறிச்சென்று 13,500 அடி உயரத்தில் உள்ள பிந்தாரி பனிப் படலம் (Pindari Glacier) வரை பயணம் சென்று திரும்பிய பதினேழு வயதுப் பாவை ஹேமா.

மலையேறும் பயிற்சிக்குத் தமிழ் நாட்டிலிருந்து சென்று வெற்றியுடன் திரும்பிய ஒரே பெண்மணி ஹேமா. தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் இருந்து மலையேறும் பயிற்சிக்கு ஒன்பது பேர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டனர். அந்த ஒன்பது பேர்களில் இருவரே மாணவிகள். அந்த இருவரில் ஒருவர் இமயமலையடிவாரத்தை நெருங்காமலே திரும்பிவிட்டார். மற்றொருவரான செல்வி ஹேமா தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்டு குமாயூன் மலைமீது ஏறிப் 'பிந்தாரி பனிப்படலம்' வரை சென்று திரும்பிய ஒரே வீர மங்கை என்ற பெருமையைத் தட்டிக்கொண்டு வந்துள்ளார்.

"நல்ல குடும்பம் ஓர் பல்கலைக் கழகம்" என்று கூறினர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். அந்தப் பாடலுக்கோர் எடுத்துக் காட்டாய் விளங்குகிறது, லெப்டினெண்ட் கர்னல் திரு ஏ. ஜே. மோகன்ராவ் அவர்களது குடும்பம்! பட்டாளத்தில் பொறியியற் கலைஞராக விளங்கும் அவருடைய துணைவியார் திருமதி சகுந்தலா மோகன் ராவ் ஒரு இரட்டைப் பட்டதாரி. பி.ஏ. பட்டம் பெற்றபின் பி.ஈடி.பட்டமும் பெற்றுள்ளார். அவர், வீணை வாசிப்பதில் மிகவும் திறமை வாய்ந்தவர். அவர்களுடைய அருமைப் புதல்வி தான்செல்வி ஹேமா.

செல்வி ஹேமா சென்னையிலுள்ள எத்திராஜ்மகளிர்கல்லூரியில் இரண்டாம்ஆண்டு பி.ஏ. வகுப்பில் பயின்று வருகிறார். படிப்பில் மட்டுமல்ல, விளையாட்டிலும் வெகு ஆர்வமுள்ளவர். கல்லூரி பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசும் பெற்றுள்ளார். பரத நாட்டியம் ஆடும் திறமை வாய்ந்த இவர்தேசீய மாணவப் படையில் சேர்ந்து ஓராண்டு பயிற்சி பெற்றுள்ளார். இப்படிப் பல்வேறு திறமை வாய்ந்திருக்கும் செல்வி ஹேமா காண்பதற்கு மிகவும் சாது. இந்தப் பெண்ணா பெற்றோரைப் பிரிந்து, தனியே சென்று, மலைமீது ஏறி, வெற்றி வாகை சூடி வந்தது என்று பார்ப்பவர்கள் வியந்து கூறுகிறார்கள். ஆனால் அந்தப் பெண்ணுடன் ஒரு சிறிது நேரம் உரையாடிப் பார்த்தால், அந்தப் பெண்ணின் ஆழ்ந்த அறிவும் தொல்லை கண்டு துவளாத துணிவும், விடா முயற்சியும் தெற்றெனத் தெரிகிறது.

"தமிழரசு" இதழுக்காகப் பேட்டி காணச் சென்ற நான் கேட்ட கேள்விகளையும் செல்வி ஹேமா கொடுத்த பதில்களையும் கீழே சுருக்கித் தந்துள்ளேன்.

"மலையேறும் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும்

என்ற ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது ?''

'' என் அப்பா பட்டாளத்தில் லெப்டினெட் கர்னலாகப் பணியாற்றி வருகிறார். அவருடன் சேர்ந்து இளமையிலேயே வேட்டையாடப் போவேன். குதிரையேற்றத்தில் எனக்கு நல்ல பழக்கம் உண்டு; வீட்டில் இருப்பதை விடக் காட்டில் உலவுவது என்றாலே எனக்குச் சிறு வயது முதலே பெருவிருப்பம், வீர தீரமான செயல்களில் நான் ஈடுபட வேண்டுமென்பதே என் அப்பாவின் விருப்பம். அதற்கு ஏற்ப என்னை ஊக்கப்படுத்தி வந்தார். என் அப்பாவும் என் அம்மாவும் எனக்கு அளித்து வந்த ஊக்கமே மலையேறும் பயிற்சியில் நான் ஈடுபட்டதற்கு மூல காரணமாகும். அடுத்து என் அப்பா ஜம்மு காஷ்மீரில் பணியாற்றியபோது எனக்குப் பனிச் சறுக்கல் விளையாட்டில் நல்ல அனுபவம் ஏற்பட்டது. அந்த அனுபவமும் என்னை மலையேறும் பயிற்சிக்குச் செல்லத் தூண்டியது.

'' இந்த வாய்ப்பை நீங்களே தேடிக் கொண்டீர்களா ? அல்லது எவரேனும் அளித்தனரா ?''

'' மலையேறும் பயிற்சிக்குச் செல்லும் வாய்ப்பை அளித்தவர்கள் எங்கள் கல்லூரி முதல்வர் அவர்களும் ஆசிரியர்களுமே யாவர். அவர்களே என்னைத் தேர்ந்தெடுத்து, கலந்துகொள்ளுமாறு என்னைத் தூண்டினர்.''

'' உங்கள் தாய் தந்தையர் உங்கள் பயணத்தைத் தடுக்கவில்லையா ? ''

'' என் அம்மா, மலையேறும் பயிற்சிக்கு என் உடல் நிலை ஒத்துக் கொள்ளாது என்று கருதி, எனது பயணத்திற்குத் தடை விதித்தார்கள். ஆனால் என் அப்பாவே கடைசியில் என் ஆர்வத்தைத் தடுக்காமல் ஊக்கப்படுத்தி அனுப்பி வைத்தார்.''

''உங்கள் பயணத்தைப் பற்றிச் சுருக்கிச் சொல்வீர்களா ?''

''ஓ ! தாராளமாகச் சொல்கிறேன் ! நானும் எங்கள் குழுவினரும் 1971, மே மாதம் 18-ஆம் நாள் சென்னையை விட்டுப் புறப்பட்டோம். ஆக்ரா சென்று, அங்கிருந்து ' குமாயூன்' துரித வண்டி மூலம், உத்திரப் பிரதேசத்திலுள்ள கடைசி புகை வண்டி நிலயமான காத்கோடம் (Kathgodam) என்ற இடத்திற்குச் சென்றோம். அதன் பின் பேருந்து மூலம் 'பாகேஸ்வர்' (Bhageswar) என்ற இடத்திற்குச் சென்றோம். அங்குதான் எங்களது பயணத்திற்கான அடித்தள முகாம் ( Base camp ) அமைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்து ' காப் கோட் ' (Kapkote) என்ற இடத்திற்குப் பேருந்து மூலமே சென்றோம். காப்கோட்டிலிருந்தே எங்களது மலையேறும் உண்மையான பயணம் துவங்கியது. மலையில் ஏறிச் செல்வதற்கு ' ட்ரெக்கிங் ' ( Trekking ) என்று சொல்லப்படுகிறது. காப்கோட்டிலிருந்து 25—5—71 அன்று காலை 9 மணிக்கு லோகர்கேட் ( Loharkhete ) நோக்கிச் சென்றோம். ' சரயு ' என்ற ஆற்றங்கரை ஓரமாகவே நடந்து சென்று, 10 மைல் தூரத்தைக் கடந்து அன்று மாலையே, ' லோகர் கோட் ' போய்விட்டோம். அங்குள்ள முகாமில் இரவு தங்கிவிட்டு மறுநாள் தாக்குரி (Thakuri) என்ற இடம் நோக்கிச் சென்றோம். அந்த இடம் ஆறு மைல் தூரத்தில் 4,000 அடி உயரத்தில் உள்ளது. அந்த 4,000 அடி உயரத்தையும் கடப்பதுதான் மிகவும் கடினமான செயலாக இருந்தது. ஒவ்வொரு 15 நிமிடப் பயணத்திற்கும் ஒரு சில நிமிடம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ' தாக்குரி ' என்ற இடத்தை அடைந்தபின் ஒரு நாள் ஓய்வு எடுத்துக் கொண்டோம். அதன் பிறகு அடர்த்தியான வெளிச்சமே இல்லாத இருண்ட காட்டிற்குள் நடந்து 30 மைல் தூரத்தைக் கடந்து புர்க்கியா ( Phurkia ) என்ற இடத்தை அடைந்தோம். இது 10,700 அடி உயரத்தில் உள்ளது. இதுவே எங்களது கடைசி முகாமாகும். எனவே அங்கு 2 நாள் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டு 6 மைல் தூரம் நடந்து மே 31 ஆம் நாள் பிந்தாரி பனிப்படலத்தை அடைந்தோம். அதுதான் நாங்கள் செல்ல வேண்டிய கடைசி எல்லை ( Zero Point ). மலைமேல் ஏறுவதற்கு 5 நாட்களும், இறங்கி வருவதற்கு 4 நாட்களும், ஓய்வு எடுத்துக் கொள்ள 3 நாட்களும் ஆக 12 நாட்கள் எங்கள் மலையேறும் பயணத்திற்கு ஆகியது.''

'' மலையேறிச் சென்ற போது என்ன உணவு சாப்பிட்டீர்கள்? தேவையான அளவு உணவு கிடைத்ததா ?''

'' பூரி உருளைக்கிழங்கு தான் எங்களுக்குப் பெரும்பாலும் கிடைத்தது. சில தடவை ' சன்னா ' எனப்படும் சுண்டலும், ' ராஜ்மா ' என்னும் ஒரு வகை உணவும் எங்களுக்குக் கிடைத்தது. பொதுவாகப் பயணம் சென்று கொண்டிருக்கையில் அதிகமாகச் சாப்பிடக் கூடாது என்றும், வழியில் கிடைக்கும் தண்ணீரைக் குடிக்கக் கூடாது என்றும் அறிவுரை கூறினார்கள். சில இடங்களில் நல்ல தேநீர் கடைகள் உள்ளன. அங்கு பெரும்பாலும் பால், கட்டி கட்டியாக உறைந்துபோய் இருக்கிறது. அதைக் காய்ச்சியே தேநீர் போட்டுக் கொடுக்கிறார்கள்; தேநீர் மிகவும் சுவையாக இருக்கிறது ''.

'' பயணத்தின்போது உங்கள் உடல் நலம் பாதிக்கவில்லையா ? ஏதேனும் தடுப்பு முறைகள் செய்து கொண்டீர்களா ?''

'' எனக்கு உடல் நலம் பாதிக்கவில்லை. ஆனால் குளிர் அதிகமாக இருந்ததன் காரணமாக என் முகத்தில் வெடிப்புகள் ஏற்பட்டுத் தோல் உரிந்தது. ஒவ்வொருவருக்கும் தேவையான இருமல் மருந்து, மாத்திரைகள் ஆகியவற்றை எங்களிடமே கொடுத்து விட்டார்கள். நாங்களே அவைகளை எடுத்துக் கொண்டு சென்றோம். தேவையான பொழுது பயன்படுத்திக் கொண்டோம். நாள் தோறும் காலையில் குறைந்தது பல சத்து வைட்டமின் மாத்திரை (multy vitamin tablet) ஒன்று எங்களுக்குக் கொடுக்கப்பட்டது.

'' பயணத்தின்போது உங்களுக்கு எப்பொழுதாவது விபத்து ஏற்பட்டதா ?''

'' பிந்தாரி பனிப் படலத்தில் உள்ள பனிக்கட்டிகள் நகரும்

மாணவர்களும் மாணவிகளும உங்களுடன் எப்படிப் பழகினுர் கள்?''

எங்களுடைய குழுவில் தமிழ் நாட்டு மாணவர்கள் 7 பேரும், டெல்லி கல்லூரி மாணவர்கள் 3 பேரும் இருந்தனர். பொது வாக மாணவர்கள் என்னைவிட வேகமாக நடந்து சென்று முன்னே போய் விடுவார்கள். சில சமயங்களில் நான் மட்டும் தனியே செல்லவேண்டி இருக் கும். ஆனல் எங்கள் குழுத்



தன்மையுடையன. அங்கு இருக் கும் பொழுது பனியில் சறுக்கி விழுந்துவிட்டேன். என் முதுகு அடிபட்டுவிட்டது. பனிக் கட்டிகளிடையே நான் முழு வதும் அமிழ்ந்து விட்டேன். இத்துடன் என் வாழ்வு முடிந்து விடப்போகிறது என்று கூட நினைத்துவிட்டேன். ஆனல் மற்றவர்கள் செய்த உதவி யினுலும், என்னுடைய விடா முயற்சியினுலும் எழுந்து, தப் பித்துக் கொண்டேன். அடுத்து, திரும்பி வரும் பொழுது எங்க ளுடைய பஸ் கவிழ்ந்து விட் டது. அதிலும் சிறு காயங்களு டன் தப்பித்துக்கொண்டேன்'' என்று கூறிப் பெருமூச்சு விட் டார்.

மற்ற மாணவர்களும் அவ்வப் போது எனக்காகக் காத்திருந்து கூட்டிச் செல்வார்கள். முதலில் தனி ஒரு பெண்ணுக ஆண்களு டன் செல்வதற்குப் பயந்தாலும், போகப்போக அவர்கள் காட்டிய அன்பும், பரிவும் என் பயத்தைக் குறைத்து விட்டது. நானும் ஓர் ஆண்பிள்ளையைப் போலவேபயமின்றிப்பழகினேன். என் பெற்றேர்களுக்கு நான் ஒரே ஒரு பெண்பிள்ளையானதாலும், அதுவும் முதற் பிள்ளையாதலாலும் ' உன்னை எப்படி அனுப்பினுர்கள் ?' என்று எல்லாரும் வியப்பாகக் கேட்டார்கள். எல்லாரும் என்னிடம் அன்புடனும் பண்புடனும் பழகினுர்கள்.

" உங்களுடைய அடுத்த இலட்சியம் என்ன ? "

" மலையேறுவதில் அடிப்படை மற்றும் உயர் பயிற்சிக்கு (Basic and advanced course in Mountaineering) செல்ல விரும்புகின்றேன். ஆனுல் அரசு உதவி செய்தால்தான், என்னுல் அப் பயிற்சிக்குப் போக முடியும். இப்பொழுது சென்ற பயணத்திற்கே ரூபாய் 500 செலவாகியுள்ளது."

" பிந்தாரி பனிப்படலத்தை அடைந்ததும் நீங்கள் என்ன நினைத்தீர்கள் ?"

" என்னுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு வெற்றியடைந்து விட்டதாக நினைத்தேன். என் முயற்சிக்கு எதிராகத் தடைகள் பல தோன்றினுலும், அவைகளைத் தகர்த்தெறிந்துவிட்டுச் 'செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணியதை எண்ணியபடியே முடித்துவிட்டேன்' என்ற மனத்திருப்தி அடைந்தேன்."

"உங்கள் பயணம் பற்றி வேறு ஏதேனும் சுவையான நிகழ்ச்சிகள் உள்ளனவா ?"

"ஆமாம், சொல்ல மறந்துவிட்டேன். பிந்தாரி பனிப்படலம் செல்லும் வழியில் சாதுக்கள் குகை (Sadhus cave) என்று ஒன்று உள்ளது. அந்தக் குகைக்குப் பெண்கள் செல்லக்

திடீரெனக் காலநிலைமாறி, மோசமாகி விடுமாம் ; அதனுல் அப் பகுதிக்குச் சென்றவர்கள் ஆபத்துக்குள்ளாவார்கள் என்ற கருத்து நிலவுகிறது. அதனுல் என்னுடன் வந்தவர்கள் அந்தக் குகையைப் பார்க்க என்னை அனுமதிக்கவில்லை.

ஆயினும் திரும்பி வரும் பொழுது அந்தக் குகையை எட்டிப் பார்த்து விட்டேன். சற்று நேரத்தில் பனி மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. உடன் வந்தவர்கள் என்னைக் கோபித்துக் கொண்டார்கள். ஆனுல் நாங்கள் விரைந்து வந்து தப்பித்துக் கொண்டோம் ".

" பி.ஏ. படித்துவிட்டு மேல் படிப்புக்குச் செல்வீர்களா ?"

"மேல் படிப்புக்குச் செல்ல விரும்பவில்லை. ' ஐ.ஏ.எஸ் ' தேர்வு எழுத விரும்புகின்றேன். அதற்காக இப்பொழுது முதலே தயாராகி வருகின்றேன். என் முயற்சியில் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது " என்ருர்.

'தமிழரசு' இதழை ஆவலுடன் படிக்கிருர்





செல்வி ஹேமாவும் தாயார் சகுந்தலாவும்.

திருமதி சகுந்தலா அவர்களிடம் '' பெண்களுக்குப் பட்டப் படிப்பு வேண்டுமா?'' என்றேன்.

''அவசியம் வேண்டும். பெண்கள் படித்து முன்னேறினால் தான் நாடு முன்னேறும் '' என்றார்.


''உங்கள் பெண்ணின் விருப்பப் படியே நடந்து கொள்வீர்களா?'' என்றேன்.

''எங்களுடைய குழந்தைகளுடைய விருப்பம், **ஆர்**வம், திறமை ஆகியவைகளை உணர்ந்து அதற்கு ஏற்பவே நடந்துகொள்கிறோம். நாங்களாக எதையும் கட்டாயப்படுத்திச் செய்யச் சொல்வதில்லை '' என்றார்.

'' உங்களைப்போல் ஒவ்வொரு தாய்மார்களும், தங்கள் குழந்தைகளை வளர்த்தால் அல்லவா, அக்குழந்தைகள் அவரவர்களுக்கு விருப்பமான துறையில் படித்து முன்னேறுவார்கள்'' என்றேன்.

'' நீங்கள் சொல்வது மிகவும் சரி '' என்றார்.

'' வெள்ளிப் பனி மலை மீதுலாவுவோம் '' என்று அன்று பாரதியார் பாடினார். ஆந்திரத்திலே பிறந்து, தமிழ் நாட்டிலே தற்பொழுது கல்வி பயின்று வரும் செல்வி ஹேமா, இமயமலையின் ஒரு பகுதியான குமாயூன் மலை உச்சிக்குச் சென்று ' வெள்ளிப் பனி மலையில் உலாவிவிட்டு' வெற்றியுடன் திரும்பி வந்துள்ளார். அவரிடம் தேசிய ஒருமைப்பாடு காணப்படுகிறது.



# திருவாளர் பொன்மொழியார்

'இளவல்'

2

'ஒரு நல்ல பெண் இருக்கும் வீட்டில் ஆனந்தம் ஜன்னல் வழியாகச் சிரிக்கிறது' என்பது ஆலந்து நாட்டுப் பழமொழியாகும்.

பொன்மொழியார் வீட்டிலே ஆனந்தம் ஜன்னல் வழியாகச் சிரிக்கவில்லை. வாசற்படி வழியாகவே சிரித்தது—பொன்மொழியார் உருவில்.

ஆமாம், திருவாளர் பொன்மொழியார் தம் அருமருந்தன்ன மனைவி அருந்ததி செய்யும் அரும்பெரும் செயல் கண்டே அப்படி ஆனந்தத்தில் மூழ்கினர்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை தண்ணீராகக் காட்சி யளிக்கும் கடல் நீரைக் குடிக்க முடியாது. ஆனல் சின்னஞ்சிறிய ஊற்றின் நீரை அள்ளிக் குடிக்கலாம்.

இத்தனை காலமாக அருந்ததி எத்தனையோ செயல்களைச் செய்திருக்கலாம். அத்தனையாலும் பொன் மொழியார் ஆனந்தப் பட்டதில்லை. ஆனல் இன்று அவர் மனைவி செய்து கொண்டிருக்கும் செயலோ அவர் நெஞ்சிருக்கும் வரை நிலைத்திருக்கும் காட்சி அல்லவோ !

பழைய குப்பைகள், பயன்படாத காகித மூட்டைகள், அழுக்குப் புத்தகங்கள், பழுப்பேறிய காகிதக் கட்டுகள், வீட்டின் அழகைக் கெடுக்கும் அர்தப் பழசுகள் என்று அடிக்கடி அருந்ததி அர்ச்சனை செய்வதுண்டு—பொன்மொழியார் கண்ணேபோல் காத்துவரும் புத்தகங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம்!

ஆனல் இன்று—அந்த அருந்ததியே அதே புத்தகங்களின் மீது படிந்திருக்கும் தூசுகளைத் தட்டி, துப்புரவுப்படுத்தி அழகாக அடுக்கி வைக்கும் காட்சிதான் என்னே !

அன்புள்ள இதயம் என்றும் இளமையானதல்லவா ? அதனல் கையில் பாதி உதிர்ந்தும், உதிராமலும் இருந்த மாலையை அருந்ததி கழுத்தில் போடத் துடித்தார் பொன்மொழியார்.

அருந்ததியோ கருமமே கண்ணுயிருந்தாள்.

' உண்மையான குடும்பப் பெண் ஒரே சமயத்தில் அடிமையாகவும், எஜமானியாகவும், இருப்பாள் ' என்று எங்கேயோ எப்பவோ படித்தது பொன்மொழியாருக்கு நினைவு வந்தது. எனவே தன்மனைவியின் பணியின் இடையில் தடையாக நுழைந்திட விரும்பவில்லை.

அந்த நேரத்தில் பொன்மொழியாரின் நண்பர் பூகம்பசாமி, அவரைத் தேடிக்கொண்டு வந்து விட்டார்.

' ஒரு வௌவால் வீட்டிற்கு இன்னெரு வௌவால் வந்தால் அதுவும் தொங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும். ஆகவே பொன்மொழியாரின் அறைக்குஅவரைத்தொடர்ந்து நடந்தார் பூகம்பசாமி.

அந்த வீட்டின் மாடியில் வடக்குப் பகுதியில் இருந்த அறையைத்தான்பொன்மொழியாருக்கு அவர் மனைவி ஒதுக்கிவிட்டிருந்தாள். அந்த அறையில்தான் அகில உலக அறிவுக் கருவூலங்களைப் பொன் மொழியார் கரைத்துக் குடித்துக் கொண்டு இருந்தார்—இருக்கிருர். அதன் அடையாளங்கள் வரலாற்றுச் சின்னங்களாக எங்கும் காணப்படும், அந்த அறையில் பொன் மொழியாருடன் வந்து அமர்ந்தார் பூகம்பசாமி.

வழக்கம்போல் பூகம்பசாமி பொன்மொழியாரைக் கண்டு பெருமூச்சுவிட்டார். 'நெருப்புக்காகப் புகையைப் பொறுத்துக்கொள்வதுபோல்' பொன்மொழியாருக்காக அருந்ததியின் வெறுப்புப்பார்வையைப் பொறுத்துக் கொள்பவர் அவர்.

காதலித்தவனைக்கைப்பிடித்தால் சீதனத்தோடு வரவேண்டிய அவசியம் இல்லையே! ஆதலால் அன்று ஒரு சிறு துரும்பையும் பொன்மொழியார் வீட்டுக்கு அருந்ததி கொண்டு வரவில்லை. ஆனல், இன்று அருந்ததியின் அனுமதி இல்லாமல் ஒரு துரும்பையும் பொன்மொழியார் அசைக்க முடியாது.

இந்தச் சரித்திரத்தைத் தெரிந்தவர் என்பதால் பூகம்பசாமி



பொன்மொழியாரைப் பார்க்கும் பொழுதெல்லாம் பெருமூச்சு விடுவார். அருந்ததியைப் பற்றி மூச்சு விடமாட்டார். 'கழுதையின் வீட்டுக்குப் போனால் காதைப்பற்றிப் பேச முடியுமா ?' ஆனால் பொன் மொழியார் தம் மனைவியைப் பற்றிப் பூகம்ப சாமியிடம் மெதுவான குரலில் பேசுவார்.

கறியின் சுவை அகப்பைக்குத் தெரியுமா ? இலக்கிய ரசனை அருந்ததிக்கு உண்டா? ....உம் என்ன செய்வது? எப்படித் திருத்துவது ? என்று கவலைப்படுவார்.

'கவலைக்கு மருந்து அதைக் காலின் கீழ் போடுவதுதான்' என்று ஆறுதல் கூறுவதும் பூகம்பசாமிக்கு வழக்கம்.

ஆனால், இன்று நிலைமை வேறாகிவிட்டது !

அருந்ததி அந்தாதி பாடத் தொடங்கிவிட்டார்.

'' சுட்டால் செம்பொன் கெட்டா போகும் ? இத்தனை நாள் நாகரிக மோகமும் செல்வச் செருக்கும் அருந்ததியை ஆட்டிப் படைத்திருக்கலாம் ; ஆனால் அவள் உள்ளம் இன்று திருந்தி விட்டது. தணலில் தங்கம் எரிந்து விடாது. மெருகுதான் கூடும்.''

பூகம்பசாமி சொன்னார் : ''ஆரம்ப நாட்களில் அருந்ததியைத் திருத்து திருத்து என்று சொன்ன பொழுது எல்லாம் 'ஓடிக் கொண்டிருக்கிற குதிரைக்கு லாடம் அடிக்க முடியாது ' என்று சொன்ன நீயே, இப்பொழுது இப்படிப் பேசுகிறாயே ......என்னப்பா இப்படி திடீர் மாற்றம்.......? ''

'தீயவைகளைப் பனிக்கட்டியில் எழுத வேண்டும்; நற்செயலைப் பாறையின் மேல் எழுத வேண்டும். அதனால்தான் உன்னிடம் சொல்கிறேன் ''

பூகம்பசாமி சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறே—"பொன்மொழியார் கேள்வி.

'' நீ முன்பு சொன்ன பொன்மொழி ஞாபகத்துக்கு வந்தது அதனாலே...... அது என்ன பொன் மொழி தெரியுமா ? 'மடமைக்கு அதன் அளவு தெரியாது ' என்பதுதான் ''

''பசி தீர்ந்தவன் எப்போதும் பசிக்கிறவனை நம்புவதில்லை ........ நிம்மதியாக வாழ்க்கை நடத்தும் நீ எனக்கு ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியை நம்பாததில் வியப்பில்லை....''

'' பொன்மொழி ! உன் வீட்டுக்கு வந்தால் நான் அருந்ததியைப் பற்றிப் பேசுவதேயில்லை. நீதான் உன் மனைவியைப் பற்றி என்னிடம் விமர்சனம் செய்வாய்; ஆரம்பத்தில் நீ இடம் கொடுத்து விட்டாய். அலட்சியமாக இருந்துவிட்டாய். அப்பொழுதே சொல்லியும் இருக்கிறேன். 'சிங்கம் இல்லாத இடத்தில் நரி சிம்மாசனம் ஏறும் '—ஜாக்கிரதை என்று! இப்பொழுது அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறாய். இன்று திடீரென்று நீயே அவள் திருந்தி விட்டாள், என்கிறாய். நம்ப வேண்டுமென்றால் நம்புகிறேன்.'

'' பூகம்பசாமி, 'சக்கி முக்கிக்' கல்லைத் தேய்த்தால் நெருப்பு உண்டாகும். தேய்க்காவிட்டால் புகை கூட வராது. அருந்ததி திருந்தாமல் நான் சும்மா சொல்லவில்லை. நீயே போய்க் கீழே பார். நான் சேர்த்து வைத்திருக்கும் அறிவுப் புதையல்களை அலட்சியப் படுத்தியவள் இன்று அவைகள் மீது படிந்திருக்கும் அழுக்கைத் தட்டித் துப்புரவுப் படுத்தி அடுக்கி வைக்கிறாள்! 'பொன்னைச் சோதிப்பது நெருப்பு; பெண்ணைச் சோதிப்பது பொன் ; ஆணைச் சோதிப்பது பெண்' என்பதை உறுதிப் படுத்திக்கொண்டு என்னை இத்தனை நாள் சோதித்தவள் இன்று திருந்தியிருப்பது எவ்வளவு திருப்தி தெரியுமா ? ''

'' பொன்மொழி, உன்மொழி போல் உண்மையில் நடந்திருந்தால் உன்னைவிட மகிழ்ச்சி அடைவேன் நான்! ஆனால் நீயே எனக்குச் சொல்லியிருக்கிறாய் 'உண்மையைவிட நம்பத் தகுந்த பொய்கள் உண்டு' என்று''—இப்படிப் பேசிய பிறகு பூகம்பசாமி வேறு பக்கமாகத் தன் பேச்சைத் திருப்பினார். பொன்மொழியாருக்கு நடத்தப் பட்ட பாராட்டு விழாவுக்கு வர முடியாததற்குக் காரணங்களை அடுக்கிக் கொண்டிருந்தார்.

ஆனால், அந்தப் பேச்சில் பொன் மொழியார் மனம் ஈடுபடவில்லை. அது, அருந்ததி திருந்திய ஆனந்தத்திலேயே அந்தப் பெருமையிலேயே பறந்துகொண்டிருந்தது.

பூகம்பசாமி பேச்சோ ?' கடலுக்குள் பன்னீரை ஊற்றுவது போலப்' பயனற்றுப் போய்க் கொண்டிருந்தது. அனுவசியமாகத் தன் நண்பன் பேசிக் கொண்டிருப்பதை மாற்றி, தன் மனைவியின் பெருமையை நிலை நாட்ட, மிகுந்த ஆர்வத்துடன் வழக்கத்துக்கு மாறான துணிவுடன் கீழே இறங்கினார்.

அங்கே நண்பர்கள் கண்ட காட்சி அவர்கள் வாயை அடைத்தது. மௌனமானார்கள்.

மௌனத்தைத் தவிர வேறு எதையும் உலகத்தில் அளந்து விடலாமே !

அளக்க முடியாத அந்த மௌனத்தின் காரணம் ஆழமான சோகம்தான்.

எத்தனை பேருக்குப் பொன்மொழியார் சொல்லியிருப்பார்?

'' கண்ணால் காண்பதும்பொய் காதால் கேட்பது பொய் '' என்றும்

'' அவசர முடிவு அறிவுக்குப் பகை '' என்றும்....

அவைகளை ஏனோ மறந்தார்!

தாங்க முடியாத துயரம் அவருக்கு வீரத்தை அளித்தது. அடிபட்ட புலிதானே சீறும் !

கோபத்தோடு அழைத்தார், '' அருந்ததி! என்னுடைய புத்தகங்களை—அறிவுச் சுரங்கத்தை என்ன செய்தாய்? எங்கே அவைகள் ? ''

அந்த அம்மாள் அமைதியாகச் சொன்னாள் ; போக வேண்டிய இடத்துக்குப் போய் விட்டது ''

'' எங்கே ? ''

'' பழையபேப்பர் கடைக்கு ''

'' குருட்டுப் பூனை செத்த எலியைத்தானே பிடிக்கும்! நீ பழைய பேப்பர் கடைக்குத்தான் அனுப்புவாய் '' என்று இரைந்தார் !

(தொடரும்)




# 11. இரந்தும் ஒழிப்போம் இரப்பு

சாதி ஒழிந்தாலும் சாரமிலை; சமய
பேதமொழிந் தாலும் பெருமைநமக்—கேதிங்(கு)
இரந்துண்போர் உள்ளவரை? எம்முதல்வர் சொற்கேட்(டு)
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—சி. திருநாவுக்கரசு, சேலம்-1.

எங்கும் சமதர்மம் ஏறுநடை போடத்
தங்கத் தமிழ்நாட்டுத் தானையனின்—செங்கை
உரம்பெற்று வாழ உயிர்பெற்ற நாங்கள்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—சுப. சுந்தரம், காட்டுப்புத்தூர்.

காலிழந்து கையிழந்து கண்ணிழந்து கஞ்சியின்றிக்
கூலிகளாய் வாழ்ந்திடவும் கூடாமல்—கேலி
அரும்பும் இறைவனின் ஆற்றலைச்சீர் செய்ய
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ஆ. புகழேந்தி, கோவை.

பிச்சை எடுப்பால்நம் பேரெழில் நாட்டினையே
துச்சமாய் எண்ணிட்டார் தூரநாட்டார்—பிச்சை
துறந்தும் மகிழ்ந்தும் தொழில்செய்தும் வாழ
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—மா. பா. மணியன், வாரியங்காவல்.

ஏழைக் குரலை இதயக் குரலாக்கி
வாழும் வழிதந்தார் மாமுதல்வர்—ஏழை
இருவிழி இன்ப ஒளியெய்தி வாழ
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—சாந்தா வேங்கடேசன், நெய்வேலி-2.

ஏடேந்தும் நண்பா! எழுத்தெல்லாம் கண்ணீராம்!
ஓடேந்தும் கூட்டம் ஒருபால்காண்!—நாடேந்
தருங்கலைஞர் தந்தவழி ஆர்வமுடன் போற்றி
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—முத்து வேங்கடேசன், திருமயம்.

பாரிதந்தான் முல்லை படரப் பவளத்தேர்
காரிஓரி பேகனுமே காட்டுநெறி—வாரிச்
சுரப்பாரும் ஈங்கிருக்கச் சுற்றமில்லாச் சுற்றம்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அ. மலர்வேந்தன், அனுமந்தன்பட்டி

இடையிற் றுகிலொன்றும் இன்றிப் பிறந்தோம்
கடையிற் றுணையொன்றும் காணோம்—மடையென்று
பறந்தும், பசியுறும் பாரினிலே பலதிக்
கிரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—தாமரைச் செல்வன் பழனி.

குளமான கண்ணில் குடியேறி வாழ்ந்தும்
வளமான வாழ்வு விழையான்—களமாய்ப்
பரந்த புவியில் பயணம் தொடங்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—சி. டி. பிரேமேந்திரன், சென்னை-12.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
திரு சி. திருநாவுக்கரசு,
மாவட்ட குடும்பநலத் திட்டச் செயலகம்,
டாக்டர் ராமநாதன் சாலை, சேலம்-1.

உண்ணும் உணவுக்கே ஊரூராய்ச் சென்றிரப்போர்
மண்ணில் படுந்துயர்கள் மாய்ந்திடவே—எண்ணிக்
கரவிலா உள்ளக் கலைஞர் வழியில்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—புலவர் தண்ணொளியான், கண்ணமங்கலம்.

தாழ்வதூஉம் வாழ்வதூஉம் முற்பிறப்பால் என்றுரைப்போர்
ஏழ்மையை வாழவிடும் எத்தர்களே—வாழ்வில்
வருந்தும் இரப்போர் துயர்போக்க இன்றே
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ஏகம்பவாணன், திமிரி.

பாரியற்றி யோனே பரந்து கெடுகவெனப்
பேரியல்பின் வள்ளுவனார் பேசிட்டார்—சீரில்
இரப்போரும் இவ்வுலகை ஈன்றவனும் உய்ய
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ந. அப்துல்லா, சுக்கூர்.

அச்சு நிகர்கலைஞர் ஆய்ந்துணர்ந்து கொண்டுவரும்
மெச்சு புகழ்த்திட்டம் வெற்றிபெற—நச்சி
பரந்த மனங்கொண்டு பல்பொருள்கள் ஈந்தும்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—சுப்பராயலு, பெரியகுளம்.

கன்னித் தமிழ்நாட்டில் கையேந்தும் காட்சியா?
இன்னே இதையொழிக்க எல்லாரும்—ஒன்றாய்ப்
பெருஞ்செல்வம் ஈந்திடுவோம்; பிற்பட்டோர் வாழ
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—பரிதியார், சென்னை-32.

கோயிலின் வாயிலெங்கும் கூடிக் கலமேந்தி
வாயின்றிக் காலின்றிக் கண்ணின்றி—நோயால்
வருந்தும் இரவோர் மறுவாழ்வுக் காய்நாம்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—வ. வீ. பெருமாள், வந்தவாசி.

''ஏற்ப திகழ்ச்சி யெனும்இழிவுக் கோர்பொறுப்பை
ஏற்பதுயார் என்றாய்வில் எம்கலைஞர்—ஏற்றார்;
கரம்நீட்டும் ஏழைகட்குக் கைகொடுக்க நாமும்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—கலாவதி காசிநாதன். அமிர்தராயன்கோட்டை.

இரத்தல் இழிவென்ற என்றமிழ் நாட்டின்
சரித்திரத்தை மீண்டும் சமைப்போம்—இரந்தும்
வருந்தியுயிர் வாழ்வோர் வளவாழ்வு காண
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—முத்துச்சோழன், கோவை-1.

வாடுகிறார் எண்ணற்றோர் வாய்க்குணவு கொஞ்சமின்றி
நாடுகிறார் நம்போன்ற நல்லோரை!—நாடும்
வரம்பின்றித் துன்புறுவோர் வாட்டத்தைப் போக்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—இரா. மைக்கேல், காஞ்சிபுரம்.

கூழும் குடிக்காமல் கும்பியெரி கின்றவர்கள்
வாழும் வகையற்று வாடுகிறார்!—தோழா!
பரந்த மனத்தோடு பண்பாட்டைக் காக்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—பாவலர் இலக்கியன், ஆலிங்காயம்.

எல்லாரும் மன்னரென ஏட்டளவில் சொல்லிவிட்(டு)
இல்லாதார் சூழ இருக்கின்றோம்—நல்லீர்
வரம்பெற்ற சோதனைகள் வந்துற்ற போதும்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—இரா. இராகவன், வாணியம்பாடி-2.

ஆனைகட்டிப் போரடித்து ஆண்டிருந்த தென்னகத்தில்
பானைக் கரிசியின்றிப் பட்டினியா?—ஊனைத்
துறந்தும் ஒழிப்போம் துயரை; முடிவில்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—கு. பெருமாள்சாமி, அருவன்காட்டுவலசு.

பிச்சைதனை ஏற்கப் பிறந்திட்டார் என்றுசொலும்
நச்சுக் கருத்துடையோர் நாவடங்க—பிச்சை
இரந்துண்போர் இந்நிலத்தில் இல்லையெனச் செய்ய
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

இரந்தும் உயிர்வாழும் ஏழை பசியைத்
தெரிந்தும்நாம் வாளா திருத்தல்—பொருந்தாதே
இருந்தும் கொடுக்க இசையா ரிடத்தே
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அ. லலிதா, கோவை-1.

கல்லாமை போக்கும் கலைஞரின் ஆட்சியிலே
இல்லாமை மட்டும் இருப்பதுவோ?—இல்லை
பரந்தும் பசியாளர் பாரில் இலாமல்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—வாவாசியண்ணன், திருப்பனந்தாள்.

பிச்சுப் பிடுங்குகின்ற பேய்வறுமைப் பேரிடரால்
குச்சிகளாய்த் தேகம் குலைந்தமக்கள்—எச்சில்
விருந்துக்குக் கையேந்தும் வேதனைகள் நீங்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—துறவி, சென்னை-12.

சகதியில் சத்திரத்தில் சாக்காட்டில் என்றும்
அகதிகளாய் அல்லலுற வேண்டாம்—செகத்தில்
பரந்தலைந்து செல்வம் படைத்தோரை நாடி
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—மு. பூங்கோவன், சென்னை-7.

உண்ண உணவும் உறைவதற்(கு) ஓரிடமும்
இன்னும் எமக்குத்தான் இங்கில்லை—என்போர்
வருத்தம் தனைப்போக்கி வாழ்ந்திடவே என்றும்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அ. காந்தி, தேவத்தூர்.

அம்மா பசியென் றவலக் குரலெழுப்பல்
இம்மா நிலத்திற்(கு) இழிவன்றோ—நம்மால்
வருந்தும் மனிதர்கள் வாழ்வுநலம் காண
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—வ. பெ. ராமசாமி, சென்னை-18.

இரந்துறைவார் இந்நாட்டில் இல்லா தொழிக்க
இரந்தார் முதல்வர் இனிதாய்!—இரந்தார்க்(கு)
இரங்கார் இனியுண்டோ? இன்றின்றும்! ஈண்டே
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—கருவூர் பாரி, கரூர்.

இல்லாமை ஏழ்மைநிலை இன்று தமிழகத்தில்
இல்லையென்று பூரிக்க இன்றரசு—நல்ல
பரந்தமனம் கொண்டதுகாண்! பார்போற்றும் வண்ணம்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—தா. சு. ஆ, தமிழ்க்குமரன், ஈரோடு-.1

அம்மாபிச் சையென்றே அன்றாடம் கெஞ்சுகின்ற
வெம்மைக் கொடுமைநிலை வீழாதோ—நம்மில்
நிரந்தரமாய் இந்தநிலை நீக்கிடுவோம் நாமே
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—மு. முத்துகிருஷ்ணன், புரிசை.

உப்பளத்து நீராய் உலர்ந்திடவோ? நாளெல்லாம்
கப்பரையை ஏந்திக் களைத்திடவோ?—குப்பம்
இருந்துழல்வார் செல்வரெனும் இந்தநிலை மாற
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ச. கருப்பையா, திருச்சிராப்பள்ளி-1.

இறப்பும் எளிதே இரப்பதினும்; நாட்டுச்
சிறப்பும் அதனால் சிதையும்;—அறப்போர்
பரவட்டும்! நாமும் படையினிலே சேர்ந்து
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ந. விசுவநாதன், திருச்சி-1.

பொய்யா வளஞ்சூழ்ந்து பூரித்த நம் நாட்டில்
'ஐயா, பசி!' என்(று) அழும்குரல்ஏன்?—வையம்
'சிறந்ததமிழ் நாடென்றே சீராட்டிப் போற்ற
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—மு, தங்கவேல், வேடசந்தூர்.

இரந்துறைவார் பல்லோர் இருக்கப் பொருளைக்
கரந்துறைதல் பண்பாமோ? காகம்—கரைந்தே
நிரந்துண்ணல் காணீர்! நிதிதாரீர்! வாரீர்!
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ஆ. கோவிந்தராசன், குடவாசல்.

இரப்பார்க்கு வாழ்வளிக்க எம்கலைஞர் நாட்டில்
இரக்கின்றார்; நாம்முந்தி ஈவோம்—இரப்பார்
இரத்தல் தனியின்பம் என்றால், அவரை
இரந்தும் ஒழிப்போம் இரப்பு!

—கரு. செல்லமுத்து, புதுக்கோட்டை.

வீதியிலே உழல்கின்றான்; வீணாய் அலைகின்றான்
நாதியில்லை அவனுக்கோ நாட்டினிலே—வீதி
இரந்து திரியும் இவனிலையைப் போக்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அன்புகணபதி, ரேனூர்.

நீர்திருத்திக் கார்குவிக்கும் ஏர்திருத்த மில்லாமல்
நேர்ப்படுத்தும் சீர்திருத்த மில்லையே—பாரில்
இரந்துணவு கொள்வாரை ஏற்றமுறச் செய்ய
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—பெ. சி. மாணிக்கம், விருத்தாசலம்.**

இறப்பே வரினும் இரவா திருத்தல்
சிறப்பே! மிகநற் சிறப்பே!—மறுத்தே,
இரப்பின் கீழ்மை இவண்விட் டகல,
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—அ. கு. முரளிதரன், சென்னை-5.**

அல்லல் அகற்றும் அருமைத் தமிழரசார்
தொல்லை அகற்றுதற்குத் தோள்கொடுத்தார்—நாட்டில்
மறந்தும் இரந்துண்ணும் வாழ்வகற்ற இன்றே
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—வெ. இராமசாமி, பேரையூர்.**

ஏழைச் சிரிப்பில் இறைவனைக் கண்டிடவே,
தோழா! எழுகநீ! தொண்டாற்று!—வாழை
மரம்போல் செயல்புரிவோம்! வாழ்க்கை மலர,
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—கருமலைப்பழம்நீ, ஊத்தங்கரை.**

ஈஎன் றிரங்கும் இழிதொழிலை இப்போதே
போஎன் றுரைத்தே புறப்பட்டு—வாயிங்(கு)
இரப்பாரே இந்நாட்டில் இல்லாமல் போக்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—ஆலோசனைமரியான், தருவைக்குளம்.**

அல்லும் பகலும் அயராது சுற்றியும்
கொல்லும் பசிநீங்கக் கூழுமின்றிச்—செல்லும்
பரதேசி வாழ்வும் பயனுள்ள தாக்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.**

அருளுள்ளம் கொண்டோரே! ஆக்கவழி நிற்போம்!
அருகிருக்கும் அற்றார்க்(கு) அளிப்போம்—கருணை
சுரந்து பிறப்பொக்கும் சீர்மை யுணர்ந்து
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—ந. தமிழரசன், ஆண்டிமடம்.**

ஈன்றெடுத்த தாயுந்தம் இல்லாளும் தாமொதுக்கக்
கூன்குருடாய் வீதியிலே கூவிடுவார்—யாண்டும்
நிரம்பா வகைசெய்ய நாமிந்த நாட்டில்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—கூமா. மு. இராமசாமி, சேத்தூர்.**

பிச்சையென் றேவருவோர் பேரரவ மாகிவிட்டார்;
பச்சையாய் மானம் இழக்கின்றார்—பிச்சைக்
கரம்படவே காணவொண்ணா நல்லோரே, வாரீர்!
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—பொன். கோவிந்தராசன், சங்கரன்பந்தல்.**

இருந்தும் இரப்போர்க் கிலையென்போர் வாழின்
திருந்துமோ இவ்வுலகு தானும்?—வருந்திப்
பரந்து கெடுகின்ற பாமரர்கள் உய்ய
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—வெ. கு. பாலசுப்பிரமணியன், பட்டரைபெரும்பூதூர்.**

இல்லாமை காட்டும் இரவச்சம் எஞ்ஞான்றும்
சொல்லாமை வேண்டும் சுடர்க்கொடியே!—நல்லோர்
பரந்து கெடுகவெனச் சாடுதற்கு முன்னம்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—கோ. சீனிவாசன், தாரமங்கலம்.**

வந்தவருக் கெல்லாம்நல் வாழ்வளித்த தால்சிறந்த
செந்தமிழ் நாட்டின் தவமுதல்வர்—நொந்தார்க்(கு)
உரந்தந்தார் ஏழ்மை ஒழியக் கரம்தருவீர்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—அறவாழி, பெங்களூர்-1.**

ஏழ்மை இரப்பெனும்நோய் இல்லாத நாடொன்றே
தாழ்வற்ற நாடாம்; தமிழ்நாட்டின்—வாழ்வுப்
பெருமை இரப்பாரால் பின்னடைய லாமா?
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—கதிரொளி, பெங்களூர்-1.**

இரத்தல் வசையெனினும், ஈதல் இசையன்றோ?
கரத்தல், இரத்தலினும் கடையன்றோ?—புரத்தல்
புரிந்து, பொருள்தந்து, புகழ்பெறவே தமிழ்ப்புலத்தீர்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

**—புலவர் அ. சு. காந்தி, மதுரை.**

# நாளைய தலைமுறை



தாமஸ் ஆல்வா எடிசன்! பள்ளி மாணவர்களுக்குக் கேட்டுக் கேட்டுப் பழகிப்போன ஒரு பெயர். மின்சார விளக்கு, இசைத் தட்டு போன்ற பல அரிய சாதனங்களை உருவாக்கித் தந்த மேதை எடிசன் 60 ஆண்டுக் காலத்தில் உருவாக்கித்தந்தவை 1,100 கண்டு பிடிப்புகளாகும்.

இன்றைய நவ நாகரிக வாழ்க்கைக்கு அடித்தளமான தேவைகளைக் கண்டுபிடித்துத் தந்த இந்த அறிவியல் மேதையின் வாழ்க்கையும் சுவையான கதையாகும்.

உலக சரித்திரத்திலே, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் தலைமகனை இவர், ஒழுங்காகப் பள்ளி சென்று பயின்றது மூன்று மாத காலம்தான். அடிக்கடி கேள்வி கேட்கும் மாணவன் எடிசனை ஆசிரியர் இடைவாரினால் (பெல்ட்) பதம் பார்க்கவும், பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

புத்திசாலியான மகனின் ஆர்வத்தைக் கண்ட தாய், வீட்டிலேயே பல புத்தகங்களை வாங்கிக் கல்வி கற்பித்தாள்.

எடிசன் 9 வயதாக இருந்த போதே இரசாயனப் புத்தகங்களைப் படிப்பதோடு நின்று விடவில்லை. அதிலுள்ள கூற்றுகள் சரியா என்பதனை அறியத் தானே அவற்றை ஆய்வு செய்து வந்தான். இதற்காகப் பல இரசாயனப் பொருட்களை வீட்டில் வாங்கி வைத்திருப்பது எடிசனின் வழக்கம்.

12 வயதில் புகை வண்டியில் நாளிதழ் விற்கும் பணியை மேற்கொண்ட எடிசன், புகைவண்டியிலேயே வீக்லி ஹெரால்ட் என்ற பத்திரிகையை நடத்தினர். புகை வண்டியில் வெளியான முதல் இதழ் உலகிலேயே இது தான்!

இன்று குழந்தைகள்
நீங்கள்; எனினும்
இனிஇந்த நாட்டினை
ஆளப் பிறந்தீர்!
நன்றாய்ப் படியுங்கள்
நாட்டின் குழந்தைகாள்
ஒன்றாய் இருங்கள்
உயர்வினை எண்ணுங்கள்!
— பாரதிதாசன்

இவ்வாறு ஓடும் ரெயிலை ஆய்வுச் சாலையாக நடத்தி வரும் போது, ஒரு நாள் இவர் வைத்திருந்த பாஸ்பரஸ் தீப்பிடித்துப் புகை வண்டி புகை மயமாகவே, ரெயில் அதிகாரி ஒருவர் எடிசனின் காதில் செம்மையாக ஒரு குத்து விட்டார். சின்னாள் கழித்து ஓடும் ரெயிலில் தாவி ஏறிய எடிசன் கீழே விழுந்துவிடாமல் இருக்க, ரெயிலில் நின்ற அதிகாரி எடிசனின் காதைப் பிடித்து மேலே தூக்கினர். காது அறுந்து அவர் கையோடு போய் விடுவது போலிருந்தது எடிசனுக்கு. இவ்விரு சம்பவங்களாலும், அவர் காது பாதிக்கப்பட்டு, செவிடாக வேண்டிய நிலை ஏற்பட்டது. அறுவைச் சிகிச்சை மூலம் காது கேட்கும்படிச் செய்திருக்க முடியும். ஆனல் காது செவிடானதைப் பொருட்படுத்தவேயில்லை எடிசன். தனது ஆராய்ச்சியில் கவனம் செலுத்தவும், பிறர் சொல்வதை அனாவசியமாகக் காதில் போட்டுக் கொள்ளாமலிருக்கவும் இதனைப் பெரும் வரப் பிரசாதமாகக் கருதினர் அவர்.



எடிசன் கண்டு பிடித்த முதல் கருவி. பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெறும் போது, தானுக வாக்கெடுப்பு நடத்தும் (Electric-vote Recording Machine) மின் கருவியாகும். அதனை அமெரிக்க சட்ட மன்றத்திற்கு எடுத்துச் சென்ருர் எடிசன். ஆனுல் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குக் கூறப்பட்ட காரணம், '' உனது இயந்திரத்தின் மூலம் வாக்குப் பதிவு செய்தால் ஒரு நிமிடத்தில் வேலை முடிந்துவிடும். நாங்களாக வாக்குகளைக் கேட்டு எண்ணிஞல் 45 நிமிடம் கிடைக்கும். அந்த நேரத்தில் கட்சிக் கொள்கைக்கு ஆள் திரட்ட அவகாசம் கிடைக்கும். எனவே, உனது கருவி வேண்டாம் '' என்பதுதான்.

அன்று எடிசன் ஓர் உறுதி மொழி எடுத்துக் கொண்டார். '' மக்கள் விரும்பாத எதையும் இனி நான் கண்டு பிடிக்கமாட்டேன் '' என்பதுதான் அந்த உறுதி மொழி. கடைசி வரை அக் கொள்கையைக் கடைப் பிடித்து வந்தார்.

ஒரு நாள் ரெயில் நிலையத்தில் நாளிதழ் விற்றுக் கொண்டிருந்தார் எடிசன். அப்போது தண்டவாளத்தில் நின்று கொண்டிருந்த ரெயில் நிலைய அதிகாரியின் மகன் மீது ரயில் மோத இருந்தது. உடனே பாய்ந்து சென்று அச் சிறுவனைக் காப்பாற்றிஞர் எடிசன். அந் நன்றிக் கடனுக்காக ரெயில் நிலையத்தில் தந்தி அனுப்பும் வேலை வாங்கித் தந்தார் அந்த அதிகாரி.



ஒண்டாரியா (கனடா) என்ற ரெயில் நிலையத்திலிருந்து டொரண்டோ ரெயில் நிலையத்திற்கு ஒவ்வொரு மணிக்கு ஒரு முறை தந்தி மூலம் தகவல் தருவதுதான் அவருக்குத் தரப்பட்ட பணி. வெட்டியாக உட்கார்ந்து இருப்பது எடிசனுக்குப் பிடிக்கவில்லை. உடனே ஒரு மணிக்கு ஒரு முறை தானுகவே தந்தி கொடுக்கும்படி கருவியைக் கெடிகாரத்துடன் இணைத்து வைத்துவிட்டுத் தூங்கி விட்டார். கருவியும் தவருமல் பணியினைச் செய்தது. ஆனுல் இதனைக் கண்டு கொண்ட அதிகாரி, வேலை நேரத்தில் தூங்கியதற்காக இவரை வேலையை விட்டே தூக்கி விட்டார்.

வேலையில்லாமல்— கையில் காசில்லாமல் நியூயார்க் நகரம் வந்து சேர்ந்தார், எடிசன். தலை சாய்க்க இடமில்லை. கெஞ்சிக் கூத்தாடி, ஒரு தொழிற் கூடத்தில் தூங்க இடம் கேட்டுப் பெற்றுக் கொண்டார். அங்கு தூங்கும் வேளையில் அவர்கள் தந்தி கொடுக்கப் பயன்படுத்தும் கருவியை நன்கு ஆய்ந்து வைத்திருந்தார். திடீரென்று ஒரு நாள் கருவி பழுது அடைந்து விட்டது. பெரிய பெரிய ' மெக்கானிக்கு ' கள் வந்து பழுது பார்த்தும் அதனை இயக்க முடியவில்லை. எடிசன் முன்வந்து அதனைச் சரி செய்து விட்டார். திண்ணை தூங்கிய சிறுவன் பெரிய சாதனை செய்தது தொழிற்கூட அதிபரை அயர வைத்து விட்டது. உடனே மாதம் 300 டாலர் (சுமார் 2,000 ரூபாய்க்கும் அதிகம்) சம்பளத்தில் எடிசனை வேலைக்கு



நியமித்தார். 1869-ஆம் ஆண்டில் இது மிகப் பெரிய ஊதியமாகும்.

எடிசனின் திறமையைப் பார்த்த மற்ருெரு தந்தி நிறுவனத்தார் எடிசனுக்கு அழைப்பு விடுத்தனர். தந்தி சம்பந்தப்பட்ட எல்லாக் கருவிகள் தயாரிப்புக்கு மொத்தமாக எவ்வளவு பணம் தேவை என்று எடிசனிடம் கேட்டனர்.

ஐயாயிரம் டாலர் கேட்கலாம். மூவாயிரம் டாலர் தந்தால் ஒத்துக் கொள்ளலாமென்று நினைத்தார், எடிசன். அவர் சிந்திப்பதைக் கண்ட அந்த நிறுவனத் தலைவர் நாற்பதாயிரம் டாலருக்குத் தரச் சம்மதமா என்று கேட்டார். எடிசன் சுய நினைவு பெறச் சற்று நேரம் பிடித்தது. தட்டுத்தடுமாறிச் சம்மதம் தெரிவித்தார். எடிசன் கண்டு பிடித்தவைகளில் அவருக்கு மிகவும் பிடித்தது இசைத் தட்டு. (The Phonograph ) தான். ஓர் ஆள் மரத்தை ரம்பத்தால் அறுப்பது போல் தாளில் (அல்லது அட்டையில்) வெட்டிச் சிறுவர்கள் விளையாடுவார்களே அது போன்று ஒன்று தயாரித்து அதனருகில் ' மேரி ஹேட் ஏ லிட்டில் லாம்ப்' ( Mary had a little lamp ) என்ற பாட்டைச் சத்தம் போட்டுப் பாடிஞர். பாட்டுக்கு ஏற்ற

வாறு அந்தப் பொம்மை ஆடியது. இதனைக் கண்ணுற்றதும், அந்தச் சத்த அலையினைப் பதிவு செய்தால் என்னவென்று சிந்தனை செய்தார். சிந்தனை செயலாயிற்று. மாதிரிக் கருவி ஒன்றின் படம் வரைந்து, தனது ஆய்வுக் கூடக்காரரை அழைத்து, அதனைச் செய்யச் சொன்னார். எதற்கு என்று அந்தத் தொழிலாளர் கேட்டார். இந்தக் கருவி பேசப் போகிறது என்று எடிசன் பதில் தந்தார். தொழிலாளருக்கு ஒன்றும் புரியவில்லை. எடிசன் சொன்னபடியே ஒரு கருவியைத் தயாரித்துக்கொண்டு வந்தார்.

எடிசன் அந்தக் கருவியின் உருளை மீது ஒரு மெல்லிய தகரத் தகட்டினைப் பொருத்தினார். பின் 'மேரிஹேட் ஏ லிட்டில் லாம்ப்' என்று பாடினார். அவரது குரல் அந்தத் தகட்டில் பதிவாகியது. பிறகு தகட்டினை ஓட விட்டார். முதலில் ஒரு முறை அது சரியாக இயங்கவில்லை. இரண்டாவது முறை ஓட விட்ட போது எடிசன் சொன்ன வார்த்தைகளை அது திருப்பிக் கூறிற்று. தொழிலாளரால் இதனை நம்ப முடியவில்லை. முகம் வெளிறிவிட்டது. பேயறைந்தவர்போல் ஆனார். எடிசனுக்குக் கூட இது அதிசயமாகத் தானிருந்தது.

மின்சார பல்பு கண்டு பிடிக்கவும் எடிசன் அரும்பாடு பட்டார் ஏற்கனவே, பல அறிஞர்கள் ஆய்வு நடத்தி வந்தார்கள்.

பல்புக்குள் வைக்கப்படும் மெல்லிய கம்பிக்கு எதனைப் பயன்படுத்தலாமென்பதற்கு இரண்டாண்டுக் காலம் அவர் தொடர்ந்து ஆய்வு நடத்தினார். அமேசான் காடுகளுக்கு ஒருவரையும், ஜப்பான் காடுகளுக்கு ஒரு நிபுணரையும், அனுப்பினார். கார் மெழுகைக் கம்பி போல் திரித்தும், நூல் இழையினைப் பயன்படுத்தியும், பல்பு தயாரித்தார். நூலை எரித்துக் கம்பி போலிருக்கும் அதன் கரியைக் கம்பியாகப் பாவித்து பல்பு தயாரித்தார். அந்த பல்பு 1879-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19-ஆம் நாள் வெற்றிகரமாக எரியத் தொடங்கியது. 20-ஆம் தேதி காலையிலும் தொடர்ந்து எரிந்தது. எடிசன் ஏற்றி வைத்த அந்த விளக்கு இன்று அகிலமெல்லாம் ஒளி ஏற்றி நிற்கிறது.

# படியம்மா! பழகம்மா!!

குமரிக் கவி...

காலை பள்ளிப் பாடத்தைக்
கருத்தாய் ஊன்றிப் படியம்மா!
வேலை வீட்டில் செய்யம்மா:
வீணே காலம் கழியாதே!

தாயைப் போற்றி வாழம்மா
தந்தை சொல்லையும் கேளம்மா!
தூய உடைகள் அணியம்மா!
தோழமை கொண்டு பழகம்மா!

அன்பும் பணிவும் கொண்டிடுவாய்
அயலார் தம்மை நேசிப்பாய்
துன்பம் யார்க்கும் நினையாமல்
தொண்டு செய்தே வாழம்மா!

சண்டை வீணுப் போடாதே
சச்சர வெதுவும் செய்யாதே
அண்டை வீட்டுக் குழந்தையுடன்
அன்பாய் என்றும் பழகம்மா!

வீட்டோர் போற்ற வாழ்ந்திடுவாய்
வீதி மெச்ச விளங்கிடுவாய்
நாட்டோர் வாழப் பலபணிகள்
நாளும் செய்தே நலம்பெறுவாய்!






ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.